அருள்

உ

தமிழ்மாதம் முதல்நாள்தோறும் வெளிவருகிறது

அருள் 4] சாதாரண ஆவணி (15 - 8 - 70) [கருணை 11

அன்பார்ந்த வாசகர்களுக்கு

''அண்ணனுக்குத் தம்பி சொன்ன அறிவுரை'' என்னும் தலைப்பில், பாரத ஸிம்ஹம் பிரம்மஸ்ரீ சேங்காலிபுரம் அனந்தராம தீக்ஷிதரவர்கள் அருளிச் செய்த விதுர நீதிக் கட்டுரைத் தொடர், இந்த இதழோடு முடிவடைகிறது. இனி அடுத்தபடியாக, ஸ்ரீ பிரச்நோத்தர மாலிகா என்னும் அரிய கிரந்தத்துக்கு அவர்கள் எழுதியுள்ள உரையைத் தொடர்ச்சியாக வெளியிட்டுவர எண்ணியுள்ளோம். அன்பர்கள் படித்துப் பயன் பெறுவார்களாக!

இனி, அடுத்து வரப்போகிற புரட்டாசி *(15 - 9 - 70)* ''அருள்'' இதழை, ஸ்ரீ வேதாந்ததேசிகன் மலராக வெளியிடவிருக்கிறோம் என்பதையும், அன்பர்களுக்கு மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

— ஆசிரியர்.

ஆண்டுச் சந்தா ரூ. 6-00	ஆயுள் சந்தா ரூ. 100	தனிப் பிரதி 50 காசு

சந்தா அனுப்ப வேண்டிய முகவரி: நிர்வாகி, ''அருள்''
4, தணிகாசலம் செட்டி தெரு, தியாகராயநகர், சென்னை-17.

ஸ்ரீ

பாசுரப்படி ஸ்ரீமத் ராமாயணம்

ஆழ்வார்களின் பாசுரங்கள் அனைத்திற்கும் அற்புதமான உரை இயற்றி "வியாக்யானச் சக்ரவர்த்தி" என்று புகழ் பெற்றவர் ஸ்ரீ பெரியவாச்சான் பிள்ளை யென்கிற கிருஷ்ணமிஸ்ரர். 800 ஆண்டுகளுக்கு முன்பு வாழ்ந்திருந்த இத் தமிழ்ப்பெரியார், ஆழ்வார்களின் பாசுரங்களில் வருகிற சொற்றொடர்களைக் கொண்டே, பாசுரப்படி என்ற பெயரால் ஓர் இராமாயணத்தை உருவாக்கியிருக்கிறார். இதைப் பாராயணம் செய்பவர்களுக்கு, ஸ்ரீமத் ராமாயணத்தையும் திவ்யப் பிரபந்தத்தையும் ஒருங்கே பாராயணம் செய்த பலன் கிடைக்கும் என்பது, ஆன்றோர்கள் அனுபவம்.

பால காண்டம்

திரு மடந்தை மண் மடந்தை யிருபாலும் திகழ
நலமந்த மில்ல தோர் நாட்டில்
அந்தமில் பேரின்பத் தடிய ரோடு
ஏழுலகும் தனிக்கோல் செல்ல
வீற்றிருக்கும்
அயர்வறு மமரர்கள் அதி பதியான
அணியார் பொழில்சூழ் அரங்க நகரப்பன்
அலைநீர்க்கடலுள் அழுந்தும் நாவாய் போல்
ஆவாரார் துணையென்று
துளங்கும் நல்லமரர் துயர் தீர
வல்லரக்கர் இலங்கைபாழ் படுப்பதற்கு எண்ணி
மண் உய்ய மண்உலகில் மனிசருய்ய
அயோத்தி யென்னும் அணி நகரத்து
வெங்கதிரோன் குலத்துக் கோர் விளக்காய்க்
கௌசலைதன் குலமதலை யாய்த்
தயரதன் தன் மகனாய்த் தோன்றிக்
குணம் திகழ் கொண்டலாய்
மந்திரங்கொள் மறை முனிவன் வேள்விகாக்க
நடந்து
வந்தெதிர்ந்த தாடகைதன் உரத்தைக் கீறி
வல்லரக்கர் உயிருண்டு கல்லைப் பெண்ணாக்கி
காரார் திண்சிலை இறுத்து
மைதிலியை மணம் புணர்ந்து
இருபத்தொருகால் அரசுகளை கட்ட
மழுவா ளேந்தி

வெவ்வரி நற்சிலை வாங்கி வென்றி கொண்டு
அவன் தவத்தை முற்றும் செற்று
அம்பொன் நெடுமணிமாட அயோத்தி எய்தி
அரி அணை மேல் மன்னனுவான் நிற்க;

அயோத்தியா காண்டம்

கொங்கைவன் கூனி சொற் கொண்டு
கொடிய கைகேசி வரம் வேண்ட
கொடியவள் வாய்க் கடிய சொற் கேட்டு
மலக்கியமா மனத்தனனுய் மன்னவனு மருதொழிய
குலக்குமரா! காடுறையப் போ என்று விடை கொடுப்ப
இரு நிலத்தை வேண்டாது
ஈன்றெடுத்த தாயரையும் இராச்சியமு மாங்கொழிந்து
மை வாய களிறொழிந்து மா ஒழிந்து தேரொழிந்து
கலனணியாதே காமர் எழில் விழலுடுத்து
அங்கங்கள் அழகு மாறி
மானமரும் மெல்நோக்கி வைதேகியின் துணையா
இளங்கோவும்
வாளும் வில்லும் கொண்டு பின் செல்லக்
கலையும் கரியும் பரிமாவும்
திரியும் கானம் நடந்து போய்ப்
பக்தியுடைக் குகன் கடத்தக் கங்கை தனைக் கடந்து
வனம் போய்ப் புக்குக்
காயோடு நீடு கனியுண்டு
வியன் கானம் மரத்தின் நீழல்
கல்லணை மேல் கண் துயின்று
சித்திர கூடத் திருப்ப,
தயரதன் தான்
நின் மகன் மேல் பழிவிளைத்திட்டு
என்னையும் நீள் வானில் போக்க
என் பெற்றுய் கைகேசீ!
நானும் வானகமே மிக விரும்பிப் போகின்றேன்
என்று வானேறத்
தேனமரும் பொழிற்சாரல் சித்திரகூடத்து
ஆனை புரவி தேரொடு காலாள்
அணி கொண்ட சேனை சுமந்திரன்
வசிட்டருடன் பரதநம்பி பணியத்
தம்பிக்கு மரவடியை வான் பணயம்வைத்துக்
குவலயமும்
துங்கக் கரியும் பரியும் இராச்சியமும்
எங்கும் பரதற்கு அருளி விடைகொடுத்துச்
செருவுடைய திசைக் கருமம் திருத்தப் போய்,

ஆரணிய காண்டம்

தண்டகாரணியம் புகுந்து தயங்குமறை முனிவர்க்கு
அஞ்சேன்மின் என்று அருள்கொடுத் திட்டு
வெங்கண்விறல் விராதன் உகவில் குனித்து
வண்தமிழ் மா முனிகொடுத்த வரி வில்வாங்கி
புலர்ந்தெழுந்த காமத்தால் பொன்னிறம் கொண்ட
சுடு சினத்துச் சூர்ப்பணகா
சீதைக்கு நேராவன் என்றுவரக்
கொடி மூக்கும் காதிரண்டும்
கூரார்ந்த வாளால் ஈராவிடுத்துக்
கரனொடு தூடணன் தன் உயிரை வாங்க
அவள் கதறித்
தலையில் அங்கை வைத்து
மலை இலங்கை ஓடிப்புகக்
கொடுமையில் கடுவிசை அரக்கன்
அலைமலி வேற்கண்ணளை அகல்விப்பான்
ஒருருவாய மானையமைத்து,
சிற்றெயிற்று
முற்றல் மூங்கில் மூன்று தண்டத்தனாய்
வஞ்சித்து
இலைக்குரம்பையில் தனியிருப்பில்
கனி வாய்த் திருவினைப் பிரித்து
நீள் கடல் சூழ் இலங்கையில்
அரக்கர் குடிக்கு நஞ்சாகக்
கொண்டு போந்து
வம்புலாங் கடி காவில் சிறையா வைக்க
அயோத்தியர் கோன் மாயமான் மாயச் செற்று
அலைமலி வேற்கண்ணளை அகன்று தளர்வெய்தி
சடாயுவை வைகுந்தத் தேற்றிக்
கங்குலும் பகலும் கண்துயிலின்றிக்
கானகம் படி உலாவி உலாவிக்
கணை ஒன்றினால் கவந்தனை மடித்துச்
சவரி தந்த கனி உவந்து

கிஷ்கிந்தா காண்டம்

வனமருவுகவி அரசன் தன்னொடு காதல் கொண்டு
மராமரங்கள் ஏழு மெய்து
உருத்து எழு வாலி மார்பில்
ஒருகணை உருவ வோட்டி
கருத்துடைத் தம்பிக்கு
இன்பக் கதிர்முடி யரசளித்து
வானரக் கோனுடனிருந்து வைதேகிதனைத் தேட

விடுத்த திசைக் கருமம் திருத்தித்
திறல் விளங்கு மாருதியும்
மாயோன் தூது உரைத்தல் செய்ய

சுந்தர காண்டம்

சீராரும் திறலநுமன் மாகடலைக் கடந்தேறி
மும்மதிள் நீளிலங்கை புக்குக்
கடிகாவில்
வாராரும் முலைமடவாள் வைதேகிதனைக் கண்டு
நின்னடியேன் விண்ணப்பம் கேட்டருளாய்
அயோத்தி தன்னில் ஓர்
இடவகையில் எல்லியம் போதினி திருக்க
மல்லிகை மாமாலை கொண்டங் கார்த்ததுவும்
கலக்கிய மா மனத்தனளாய் கைகேயி வரம்வேண்ட
மலக்கியமா மனத்தனனாய் மன்னனும் மறுதொழியக்
குலக்குமரா காடுறையப் போ என்று விடைகொடுப்ப
இலக்குமணன் தன்னோடு அங்கு யேகியதும்
கங்கை தன்னில்
கூரணிந்த வேல் வலவன் குகனோடு
சீரணிந்த தோழமை கொண்டதுவும்
சித்திரகூடத்து இருப்பப் பரதநம்பி பணிந்ததுவும்
சிறுகாக்கை முலைதீண்ட அனைத்துலகும் திரிந்தோடி
வித்தகனே இராமாவோ நின் அபயமென்ன
அத்திரமே அதன் கண்ணை அறுத்ததுவும்
பொன் ஒத்த மானென்று புகுந்து இனிது விளையாட
நின் அன்பின் வழிநின்று சிலைபிடித்து எம்பிரான் ஏகப்
பின்னே அங்கு இலக்குமணன் பிரிந்ததுவும்
அயோத்தியர்கோன் உரைத்த அடையாளம்
ஈது அவன்கை மோதிரமே என்று
அடையாளம் தெரிந் துரைக்க
மலர்க் குழலாள் சீதையும்
வில் இறுத்தான் மோதிரம் கண்டு
அனுமான் அடையாளம் ஒக்கும் என்று
உச்சிமேல் வைத்து உகக்க
திறல் விளங்கு மாருதியும்
இலங்கையர்கோன் மாக்கடிகாவை இறுத்துக்
காதல் மக்களும் சுற்றமும் கொன்று
கடி இலங்கை மலங்க எரித்து
அரக்கர் கோன் சினமழித்து மீண்டு
அன்பினால்
அயோத்தியர் கோன் தளிர் புரையும் அடி இணை பணிய;

யுத்த காண்டம்

கான எண்கும் குரங்கும் முசுவும்
படையாக் கொடியோன் இலங்கை புகலுற்று
அலையார் கடற்கரை வீற்றிருந்து
செல்வ வீடணற்கு நல்லனாய்
விரிநீர் இலங்கை அருளிச்
சரண் புக்க குரைகடலை அடலம்பால் மறுகஎய்து
கொல்லை விலங்கு பணி செய்ய
மலையதனால் அணைகட்டி மறுகரையை ஏறி
இலங்கை பொடி பொடியாகச்
சிலைமலி செஞ்சரங்கள் செலஉய்த்துக்
கும்பனொடு நிகும்பனும் பட
இந்திரசித்து அழியக் கும்பகர்ணன்பட
அரக்கர் ஆவி மாள, அரக்கர்
கூத்தர் போலக் குழமணி தூரம்ஆட
இலங்கை மன்னன் முடி ஒருபதும்
தோள் இருபதும் போய் உதிரச்
சிலை வளைத்துச் சரமழை பொழிந்து
வென்றி கொண்ட செருக் களத்துக்
கடிக்கமல நான்முகனும் கண்மூன்றத்தானும்
எண்மர் பதினொருவர் ஈராறுவர் ஓரிருவர்
மற்று முள்ள வானவர் மலர் மழை பொழிந்து
மணி முடி பணி தர அடி இணை வணங்கக்
கோலத் திரு மாமகளோடு
செல்வ வீடணன் வானரக் கோனுடன்
இலகு மணி நெடுந்தேர் ஏறிச்
சீரணிந்த குகனொடு கூடி
அங்கண் நெடுமதிள் புடைசூழ் அயோத்தி எய்தி
நன்னீராடிப்
பொங்கிள ஆடை அரையில் சாத்தித்
திருச் செய்ய முடியும் ஆரமும் படையும்
முதலா மேதகுபல் கலனணிந்து
சூட்டு நன்மாலைகளணிந்து
பரதனும் தம்பி சத்துருக்கன னும்
இலக்குமணனோடு இரவு நண்பகலும்
வடிவிணை இல்லாச்சங்கு தங்குமுன்கை நங்கை
மலர்க் குழலாள் சீதையும் தானும்
கோப்புடைய சீரிய சிங்காதனத்திருந்து
ஏழுலகும்
தனிக் கோல் செல்ல வாழ் வித் தருளினர்.

ஸகலகலா வாசஸ்பதி குமலாபுரம்

ஸந்தானகோபாலாச்சார்ய ஸ்வாமிகள்

வேலவன்

ஏழு ஆண்டுகளுக்கு முன்பு, நான் சேலத்திற்குப் போய் அங்கு சில நாட்கள் தங்கியிருக்க நேர்ந்தது.

அப்போது ஒருநாள் மாலை அங்குள்ள சிவாலயத்துக்குச் சென்றேன். ஆலயத்திலிருந்து வெளியே வரும்போது, சிறிது தூரத்துக்கு அப்பால் ஓர் ஒலி பெருக்கியிலிருந்து வந்து கொண்டிருந்த சில நல்ல சொற்கள், என் உள்ளத்தைக்கவர்ந்தன. உடனே அந்த திசையை நோக்கி நடந்து சென்றேன்.

அங்கே ஒரு பெரிய மண்டபத்தில் இராமாயண உபந்யாசம் நடந்து கொண்டிருந்தது. சுமார் முப்பது அல்லது முப்பத்தைந்து வயதே மதிக்கத் தக்க ஒருவர், ஸ்ரீ இராமபிரானது திருக்கதையை எடுத்துப்பேசிக்கொண்டிருந்தார். அதைக் கேட்டுக் கொண்டிருந்தவர்களின் எண்ணிக்கை, அன்று தினம் ஐம்பதுக்கும் குறைவாகத் தான் இருக்கும். அவர்களில் நானும் ஒருவனுகப் போய் அங்கு உட்கார்ந்தேன்.

அதற்கு முன்னர் நான் எத்தனையோ இராமாயண உபந்யாசங்கள் கேட்டிருக்கிறேன். ஆனல் அந்த மாதிரி ஓர் உபந்யாசத்தைக் கேட்டதில்லையென்றே சொல்ல வேண்டும். வால்மீகி இராமாயணத்தை ஓர் இலக்கியமாக மட்டுமே கற்றிருந்தவர்கள் அந்த உபந்யாசத்தைக் கேட்டிருப்பார்களானல், அந்த கிரந்தத்தின் பெருமைகளையோ, அதில் அடங்கியுள்ள நுண் பொருள்களையோ, தாம் நன்கு அறிந்து கொண்டிருப்பதாக அது காறும் எண்ணியிருந்தது எவ்வளவு பெருந்தவறு என்பதை, அப்போது உணர்ந்து கொண்டிருப்பார்கள்.

"வேதத்திலே பேசப்படுகிற பரம் பொருள் அயோத்தியிலே இராமனுக அவதரித்தது. அதற்கேற்ப, அந்த வேதமும் வால்மீகியின் வாக்கிலே இராமாயணமாக அவதரித்தது" என்னும் ஓர் அரிய கருத்தை, பல வேதவாக்கியங்களைக் கொண்டே விளக்கிக் காட்டினர் அந்த உபந்யாசகர். அவர் பிரசவனம்செய்ய எடுத்துக் கொண்ட கிரந்தம் வால்மீகி ராமாயணம்தான். இருந்தாலும், "அவர் வேதத்தைத் தான் தம்முடைய உபந்யாசத்துக்கு விஷயமாக எடுத்துக்கொண்டிருக்கிருர்.

வால்மீகி இராமாயணத்தை அந்த வேதத்துக்கு அருளிச் செய்யப்பட்ட ஒரு வியாக்யான மாகப் பயன் படுத்துகிறார்!'' என்றே நாம் எண்ணும் படியாக அமைந்திருந்தது அந்த உபந் யாசம்.

உபந்யாசம் முடித்து எழுந்து வரும்போது, "இவ்வளவு அற்புத மான ஓர் உபந்யாசத்தைக் கேட்பதற்கு, சென்னையாயிருந் தால் மக்கள் ஆயிரக்கணக்கில் கூடுவார்களே! இந்த ஊரில் ஐம்பது பேரைக் கூடக் காணேமே!'' என்ற ஒரு சிறு ஏச்கம் என் உள்ளத்தில் ஒலித் துக்கொண்டிருந்தது. ஆனல், ரசனையில் சென்னை மக்களைக் காட் டிலும் தாம் எந்த விதத்திலும் குறைந்தவர்கள் அல்ல என்பதை, சேலத்து மக்கள் மெய்ப்பித்து விட்டார்கள். உபந்யாசம் கேட்க வருபவர்களின் எண் ணிக்கை, நாளுக்கு நாள் பெருகிக் கொண்டே வரலாயிற்று. அந்தப் பெரிய மண்டபம் நிறைந்து வழிந் தது. மண்டபத்தை அடுத்துள்ள தெருக்களிலும் ஜனங்கள் நின்று கொண்டு உபந்யாசம் கேட்டார் கள். அப்படி நிற்பதற்குக் கூட இடமில்லாமல் பலபேர் திரும்பிச் சென்றார்கள்.

அந்த மாபெரும் உபந்யாசகர் தான், இந்த "அருள்'' இதழின் முகப்பு அட்டையில் கம்பீரமாகக் காட்சியளிக்கின்ற உபயவேதாந்த மஹாவித்வான் கமலாபுரம் சந்தானகோபாலச்சார்ய ஸ்வாமி கள்.

கமலாபுரம் என்பது திருவாரூரி லிருந்து ஐந்து மைல் தொலை விலுள்ள ஒரு சிற்றூர். அங்கே, 1922 மே 13ம் நாளன்று, வரதாச் சாரியார் என்னும் ஒரு பெரி யாரது திருக்குமாரராகப் பிறந் தார் சந்தான கோபாலச்சாரி யார். அபிஷேகவல்லியம்மாள் என்பது அவரது அன்னையின் பெயர்.

இவர் ராஜ மன்னார் குடியில், கோட்டூர் ரங்கசாமி முதலியார் எஸ்டேட் பாடசாலையில், பெருக வாழ்ந்தான் கிருஷ்ணமாச்சாரி யாரிடம் இரண்டாண்டு காலம் ஸ்மஸ்கிருத காவியங்களைக் கற்றார். பின்னர், அண்ணாசாமி ஐயர் எஸ்டேட் வேதபாடசாலையில், வடுலூர்கனபாடி நரசிம்மாச்சார்ய ஸ்வாமிகளிடம், ஒன்பது வருஷ காலம் பாடம் கேட்டு, ஸலக்ஷண கனுந்தம் கிருஷ்ணயஜுர் வேத மும், மற்றும் காவியம் நாடகம் முதலியவும் கற்றுத் தேர்ந்தார். அஹோபிலமடம் ஆஸ்தானத்தில் 42, 43-வது பட்டங்களில் எழுந் தருளியிருந்த அழகியசிங்கர்களின் பால் மந்திரோபதேசமும், வேதாந்தகிரந்த உபதேசமும் பெற்று, சரணாகதியும் செய்து கொண்டு, அவர்களுடைய பரி பூர்ண அனுக்ரஹத்துக்குப் பாத்ர ரானார்.

1945ம் ஆண்டில், ஸ்ரீ சந்தான கோபாலாச்சார்ய ஸ்வாமிகள் கத்வால் சமஸ்தானத்திலே வேத பண்டிதராக நியமனம் பெற்றார். பிறகு 1948ல் ஹைதராபாத் ஸம்ஸ்கிருதக் கல்லூரியில் வேதப் பேராசிரியராகப் பதவி ஏற்றார்.

அவருடைய இராமாயணப் பிரவசனங்கள், முதலில்ஹைதரா பாதில்தான் ஆரம்பமாயின. கல்லூரி விடுமுறைக் காலங்களில் அவர் வெளியூர்களிலும் சென்று உபந்யாசம் செய்து வந்தார். 1963ல் தம் உத்யோகத்தை ராஜிநாமா செய்து விட்டு, பகவானுடைய கல்யாண குணங்

களை வர்ணிப்பதன் மூலம் மக்கள் உள்ளத்தில் பக்திச் சுவையை உருவாக்குவதாகிய உபந்யாச கைங்கர்யத்துக்கே, அவர் தம்மை முற்றிலும் அர்ப்பணித்துக் கொண்டுள்ளார்.

இவர் மைசூர் சமஸ்தான வித்வத்பரீக்ஷாவில் முதல்பரிசுக்கு உரியவராகத் தேறி, மஹாராஜா விடமிருந்து இரட்டைச் சால்வை களும், பரிசுத் தொகையும், வேத வித்வான் என்ற பட்டமும் பெற் றுள்ளார்.

அதேபோல் பரோடா சமஸ் தானத்தில் நடத்தப்படுகிற ச்ராவணமாஸ தக்ஷிணா பரீக்ஷா விலும், பூனாவில் நடத்தப்படுகிற வேதசாஸ்த்ர உத்தேஜக ஸபா பரீக்ஷையிலும் தேறி, முறையே வேதரத்னம், வேத சூடாமணி என்னும் பட்டங்களைப் பெற்றுள் ளார். ரிஷிகேசத்தில் ஸ்ரீராம நாமப் பிரபாவத்தைப் பற்றி ஹிந்தியிலும் தமிழிலும் பிர வசனம்செய்து, மஹரிஷிசிவானந் தரால் ராமாயண ஜ்யோதி என்ற பட்டமும் வழங்கப் பெற்றிருக் கிறார். உபந்யாஸகச் சக்ர வர்த்தியாய் விளங்கிய பிரம்மஸ்ரீ சேங்காலிபுரம் அனந்தராம தீக்ஷிதர் அவர்கள், ஸகல கலா வாசஸ்பதி என்னும் ஒருபெருமைக் குரிய பட்டத்தையும் இவருக்கு அளித்துள்ளார்கள். இவற்றைத் தவிர, ஸ்ரீகாமகோடி ஆச்சார் யாளும் ஸ்ரீ சிருங்கேரி ஆச்சார் யாளும், நமது ஸந்தான கோபா லாச்சார்ய ஸ்வாமிகளுக்குத் தோடா, மெடல்கள், சால்வைகள் ஆகியவற்றை அளித்துஆசீர்வதித் திருக்கிறார்கள்.

இராமாயணம், ஸ்ரீமத் பாக வதம், நாராயணீயம், பகவத் கீதை, திருப்பாவை, ஆழ்வார் களின் திவ்ய சரித்ரங்கள், ஸ்காந் தத்திலும் மஹாபாரதத்திலும் வேதத்திலும் சில பகுதிகள் ஆகிய வற்றை, இவர் தம் உபந்யாசத் துக்கு உரிய விஷயங்களாக எடுத்துக் கொள்கிறார். ஆனால் எந்த விஷயத்தை எடுத்துக் கொண்டாலும், அதில் வேதத்தி லிருந்து கொடுக்கப்படுகிற மேற் கோள்கள் தாம் பிரதானமாக இருக்கும். அத்துடன் துளசிதாஸ், கபீர்தாஸ், மஹாகிருஷ்ண பக்த ராகிய அப்துர் ரஹீம் கான்கான் ஆகியோரின் ஹிந்திப் பாடல் களும்; போதனா, தியாகப்ரம்மம் போன்றோரின் தெலுங்குப்பாடல் களும்; புரந்தரதாசரின் கன்னடப் பாடல்களும்; துஞ்சத்து ராமா னுஜ எழுத்தச்சன், குஞ்சன் நம்பி யார், பூந்தானம் முதலியோரின் மலையாளப்பாடல்களும்; கம்பன், ஆழ்வாராதியரின் தமிழ்ப்பாடல் களோடு கலந்து, கேட்போரின் சிந்தைக்கும் செவிக்கும் விருந் தளிப்பனவாயிருக்கின்றன.

கடந்த இரண்டாண்டுகளாக ஸ்ரீசந்தான கோபாலாச்சார்ய ஸ்வாமிகளின் உபந்யாசங்களில் ஒரு புதிய சிறப்பான அம்சமும் இடம் பெற்று விளங்குகிறது. அதாவது, வேதத்தின் சில பகுதி களையும், அழகான பல சுலோகங்

களையும் இவர் வீணையில் இசைத்துப்பாடுகிறார். அவ்வாறு இவர் பாடுகிற ருத்ரம் சமகம், கன பாடங்கள், ஸூக்தங்கள், ஸாம கானம், இராக மாலிகைகள் ஆகியவற்றைக் கேட்கும் போது நமக்கு மெய்சிலிர்க்கிறது. நம் உள்ளம் பரவசம் அடைகிறது.

பாரத நாட்டின் ப்ராசீனசம் பிரதாயங்களிலிருந்து சிறிதும் வழுவாத முறையில், நமது வேத சாஸ்திர புராணங்களிலேபேசப் படுகிற ஸாரமான தர்மங்களை மக்களுக்கு எடுத்து உபதேசிக்கிற ஒரு சில மஹாபண்டிதர்களுக்குள்ளே, ஸ்ரீஸந்தான கோபாலாச்சார்ய ஸ்வாமிகள் ஒரு தலையாய ஸ்தானத்தை வகித்து வருகிறார். அவரும் அவருடைய புகழும் நீடூழி வாழுமாறு, ஸ்ரீ எம்பெருமானின் பாதாரவிந்தங்களை நாம் பரவுவோமாக!



கோட்லாம்பாக்கம் பிரம்மஸ்ரீ கே. என். சுந்தரதீக்ஷிதர் அவர்கட்கும், அன்னாரின் தர்மபத்னி ஸ்ரீமதி மீனாக்ஷியம்மாளுக்கும், 16-7-70 வயன்று சென்னை மயிலாப்பூரில் உள்ள அவர்களது இல்லத்தில், எழுபதாம் ஆண்டுவைபவமாகிய பீமரதசாந்தியும் அபிஷேகமும் மிக விமரிசையாக நடைபெற்றன. அந்த முதுபெருந் தம்பதிகள் நீடூழி வாழுமாறு, இறைவனை வழுத்துகிறோம்!

அண்ணனுக்குத் தம்பி சொன்ன அறிவுரை



பாரதஸிம்ஹம்
பிரம்மஸ்ரீ
சேங்காலிபுரம்
அனந்தராம தீக்ஷிதர்

அதர்மத்தால் நிரம்பக் கிடைக்கும் பொருளில் ஆசை கொள்ளாமல் எவனொருவன் அந்தப் பொருளை விட்டு விடுகிறானோ, அவன் சுகமாகத் தூங்குவான்.

பொய் சொல்லிக் கிடைக்கும் மேன்மை, அரசர்களிடத்தில் ஒருவனைப் பற்றி அசூயையினால் குற்றத்தைக் கூறிக் கெடுதல் செய்வது, தாய், தந்தை, ஆசார்யன் முதலியவர்களிடத்திலுள்ள குறைகளை வெளியில் கூறுவது (அல்லது தவறான விஷயத்தைச் சொல்லும்படி அவர்களை நிர்ப்பந்திப்பது) ஆகிய இம்மூன்றும், ப்ரம்மஹத்திற்கு ஒப்பானது.

பொறுமை ஒன்றே ஆயுளை அழிக்கும் மிருத்யு. அதிகப் பேச்சானது ஸம்பத்தைஅழித்துவிடும். குருவுக்கு பணிவிடை செய்யாமை, பரபரப்பு, தற்புகழ்ச்சி இவைகள் மூன்றும் கல்விக்கு சத்ருக்களாகும்.

சோம்பல், மதம், மோஹம், சாபல்யம், வீண் பொழுதுபோக்குக் கூட்டம், திமிர், அஹங்காரம், தியாகியாக இருப்பது இவை ஏழும் கல்விக்கு இடைஞ்சலாகும்.

சுகத்தை விரும்புகிறவனுக்கு வித்யை ஏது? வித்யையை விரும்புகிறவனுக்கு சுகமில்லை. சுகத்தை

விரும்பினுல் வித்யையை விட வேண்டும். வித்யையை விரும்பினுல் சுகத்தை விடவேண்டும்.

எவ்வளவு கட்டைகளைப் போட்டாலும் அக்நி திருப்தியாவதில்லே. எவ்வளவு நதிகள் வந்து விழுந்தாலும் ஸமுத்ரம் போதுமென நினைப்பதில்லே. எல்லாப் பிராணிகளை அழித்தாலும் மிருத்யுதிருப்தி அடைவதில்லே. ஸ்திரீகள் புருஷர்களின் போகம் போதுமென நினைப்பதில்லே.

ஆசை தைரியத்தை அழிக்கும். எவ்வளவு உறவினர்கள் இருந்தாலும், யமன் அழிக்கிருன். கோபமானது ஸ்ரீயை அழிக்கிறது. கோபமடைந்த ஒரு பிராமணன் இராஜ்யத்தையே அழித்துவிடுவான்.

ஆடுகள், வெண்கலப் பாத்திரம், வெள்ளி, தேன், விஷத்தைக் காட்டும் சகோரபக்ஷி, (அரசர்கள் உண்ணும்போது சகோரபக்ஷியை பக்கத்தில் வைத்துக் கொள்ளுவார்கள். உணவில் விஷம் கலந்திருந்தால் அந்த பக்ஷியின் கண்கள் சிவந்துவிடுமாம்.) வேதம்கற்ற அந்தணன், வயது முதிர்ந்த பங்காளி, சிரமதசையை அடைந்த நற்குலத்தில் பிறந்தோர்கள், இவர்கள் எல்லாம் எப்பொழுதும் உன் வீட்டில் இருக்கவேண்டும். (அதனுல் நல்ல பயன்கள் ஏற்படுமெனக் கருத்து)

ஓ பாரதரே, ஆடு, காளே, சந்தனம், வீணே, கண்ணுடி, தேன், நெய், உலோகம், தாமிர பாத்திரம், வலம்புரிச் சங்கம், சாளகிராமம், கோரோசனே இவைகளே தேவபிராமண அதிதி பூஜைக்காக வீட்டில் வைத்துக் கொள்ளவேண்டும். இவைகள் வீட்டில் இருந்தால் நிரம்பப் பொருள் கிடைக்குமென்றும் மநு கூறியுள்ளார்.

எல்லா தர்மத்திற்கும் மேற்பட்டதும், மிகுந்த புண்யத்துக்கு இருப்பிடமும், சிறந்த மங்களங்களே அளிப்பதுமான இதை உமக்குக் கூறுகிறேன். அது என்னவென்ருல், ஒருக்காலும் காமத்தாலோ, பயத்தாலோ லோபத்தாலோ உயிரின் நிமித்தமாகக் கூட தர்மத்தை விடக்கூடாது.

தர்மம் அழியாமல் என்றும் இருக்கக்கூடியது. (அதாவது பரலோகத்திலும் வருமெனக் கருத்து). நித்யமான மோக்ஷத்திற்கும் காரணமாதலால், தர்மத்தை நித்யமெனக் கூறப்பட்டது. ஸுகம், துக்கம் இரண்டும் அநித்யங்களானவை. ஜீவன் நித்யமானது, ஜீவனுக ஆவதற்குக் காரணமான அவித்யையானது, அநித்யமானது. அநித்யமான ஸுகதுக்கம், அவித்யை இவைகளேத் தள்ளிவிட்டு, நித்யமான தர்மத்திலும் ஆத்மாவிலும் நிலேத்திரும். சந்தோஷத்தை அடையும். சந்தோஷமாய் இருத்தல்தான் பெரும் லாபம்.

பல அரசர்கள் மிக்க பலசாலிகளாகவும், மிகுந்த மகிமை வாய்ந்

தவர்களாகவும், தனங்களாலும் தான்யங்களாலும் பூர்ணமாய் இருக்கிற பூமியை ஆண்டு, தாங்கள் ஆண்ட ராஜ்யங்களேயும் விரிவான போகங்களேயும் விட்டு விட்டு, யமனுக்கு வசமானதை ஆலோசித்துப்பாரும்.

மரித்தவனுடைய பொருளே மற்ற யாராவது அநுப்விக்கிருன். மரித்தவனுடைய சரீரத்தையும் சரீர தாதுக்களேயும் பக்ஷிகளும் அக்நியும் பக்ஷிக்கின்றன. புண்யத்தாலும் பாபத்திாலும் சூழப்பட்டு ஜீவன் பரலோகம் செல்கிருன்.

மரித்தவனுடைய சரீரத்தை சுடுகாட்டில் போட்டு விட்டு, ஞாதிகளும், ஸ்நேகிதர்களும், பிள்ளேகளும் திரும்பி வந்துவிடுகின்றனர். புஷ்பமும், பழமும் இல்லாத மரங்களே பறவைகள் விட்டுவிடுவது போல், திரும்பி வந்து விடுகின்றனர்.

அக்னியில் போடப்பட்ட அந்த மனிதனே அவனது கர்மங்கள் தொடர்ந்து செல்லுகின்றன. ஆகையால் மனிதன் மெள்ள முயற்சி செய்து தர்மத்தைச் சேர்த்து வைக்க வேண்டும்.

ஜீவன் மஹாநதியைப் போன்றது. அந்த நதிக்கு புண்ய கர்மமே, தீர்த்தம், இந்த ஜீவனுகிற நதியானது ஸத்யமான பிரம்மத்தினிடத்திருந்து உண்டானது. தைன்யத்தை கரையாக உடையது. அந்த ஆத்மாவாகிற நதியில் ஸ்னனம் செய்தவன் பரிசுத்தனுகிருன். ஸகல புண்ய கர்மங்களேயும் செய்தவனுகிருன். ஆத்மா புண்ய ஸ்வரூபனுவான். சிறந்த புண்யமானது வைராக்யமேயாகும்.

காமக்ரோதங்களாகிற முதலேகளுள்ளதும், ஐந்து இந்திரியங்களாகிற ஜலமுள்ளதுமான நதியையும், அதிலுள்ள ஜன்மங்களாகிற மடுக்களேயும், தைர்யமாகிற ஓடத்தைக் கொண்டு தாண்டக் கடவீர்.

அறிவினல் முதிர்ந்தவனேயும், தர்மத்தால் முதிர்ந்தவனேயும், வித்யையால் முதிர்ந்தவனேயும், வயதினல் முதிர்ந்தவனேயும், தனக்கு பந்துவாக இருப்பவனேயும், கார்யா கார்யங்களில் பூஜித்து சந்தோஷமடையச் செய்து எவன் கேட்பானே, அவன் ஒரு போதும் மோஹத்தை அடைய மாட்டான்.

விடியற்காலம் ஜலத்தில் நித்யம் ஸ்னனம் செய்பவனும், எப்பொழுதும் வஸ்திரத்தை யக்ஞோப விதமாக தரிப்பவனும், நித்யம் தன் வேதத்தை அத்யயனம் செய்பவனும், பதிதர்கள் கொடுக்கும் உணவை உண்ணுதவனும், (பதிதர்கள் என்ருல் ஸ்வதர்மத்தை விட்டவர்கள்), உண்மையை உரைப்பவனும், குருவுக்குப் பணிவிடை செய்கிறவனுமான பிராம்மணன், முடிவில் பிரம்மலோகம் செல்வான். அங்கிருந்து திரும்பமாட்டான்.

வேதங்களைக் கற்று தினந்தோறும் அக்நிக்கு தர்ப்பத்தினல் பரிஸ்தரணம் போட்டு, அக்நிஹோத்ரம் செய்து, யாகங்களைச் செய்து, பிரஜைகளை நன்ருக ரக்ஷித்து, பசுக்களுக்காகவும் பிராமணர்களுக்காகவும் யுத்தத்தில் ஆயுதத்தினல் கொல்லப்பட்டு, பரிசுத்தமான மனத்தையுடையவனுகி, க்ஷத்ரியன் ஸ்வர்கலோகம் செல்கிருன்.

வைச்யனுனவன் வேதங்களைக் கற்று, பிராம்மணர்களுக்கும் க்ஷத்ரியர்களுக்கும் தன்னை அண்டினவர்களுக்கும் ஸமயத்தில் பணத்தைப் பிரித்துக் கொடுத்து, பரிசுத்தமானதும் பாவத்தைப் போக்குவதுமான கார்யத்தையும், கார்ஹபத்யம் தக்ஷிணுக்நி ஆஹவனீயம் என்ற மூன்று அக்னிகளின் புகையை முகர்ந்து, மரித்தபின்பு ஸ்வர்கத்தில் திவ்ய சுகத்தை அநுபவிக்கிருன்.

சூத்ரனுனவன் பிராம்மண க்ஷத்ரிய வைச்ய ஜாதிகளை முறையாக நியமப்படி பூஜிப்பவனும், இவர்கள் சந்தோஷத்தை அடைந்தபோது வருந்தாதவனுமாகி, பாவங்களை எரித்து சரீரத்தை விட்டு, ஸ்வர்கத்தில் சுகத்தை அனுபவிக்கிருன்.

நான்கு வர்ணங்களுடைய தர்மத்தையும் உமக்குக் கூறிவிட்டேன். இதைக் கூறியதற்கு காரணத்தையும் சொல்லுகிறேன் கேளும். பாண்டு புத்ரனுனவன் க்ஷத்ரிய தர்மத்திலிருந்து குறைவை அடைகிருனு! ஓ அரசரே, நீர் அவனை ராஜ தர்மத்தில் வைக்க வேண்டும் எனச் சொன்னுர்.

த்ருதராஷ்ட்ரன் சொன்னுன்—

ஓ விதுரா, நீ தினந்தோறும் எனக்கு உபதேசித்து வருவதெல்லாம் சரியானதேயாகும். நீ சொல்லுகிறபடிதான் என்னுடைய புத்தியும் உணருகிறது. பாண்டவர்களைக் குறித்து நல்லது செய்ய வேண்டுமென்றே தோன்றுகிறது. ஆனுல், துரியோதனனை அடைந்ததும் மாறி விடுகிறது. ஒருவனுலும் தெய்வத்தை (அதாவது, விதியை)த் தாண்ட முடியாது. தெய்வமே நிலைத்தது. மனிதனுடைய சக்தி பிரயோஜனமற்றது.

★

தேவியினது ஆட்சியின் மாட்சி

ஸ்ரீவித்யா மார்த்தாண்ட
பிரம்மஸ்ரீ
C. V. ஸ்வாமி சாஸ்திரிகள்

காமேஸ்வரனும் லலிதாம்பிகையும் ஊர்வலம் வருகையில், பல விதமான மங்கல வாத்தியங்கள் முழங்கின. தெருக்களில் உள்ள மக்கள் அனைவரும் மகிழ்ச்சியடைந்தனர். தேவ கன்னிகைகள் ஆரத்தி எடுக்கத் தம்பதிகள் இருவரும் விமானத்தில் இருந்து இறங்கினர். சபையை அடைந்தனர். தேவி சிம்ம வாகனத்திலிருந்து கொண்டு, மக்களின் கோரிக்கைகளைத் தன் கடாக்ஷத்தால் நிறைவேற்றினாள்.

இவ்வாறு, எல்லோருடைய அபீஷ்டங்களையும் அம்பிகை நிறைவேற்றி வைப்பதைக் கண்ட பிரம்மா, தேவிக்குக் காமாக்ஷீ, காமேச்வரீ என்னும் சிறப்புப் பெயர்களைச் சூட்டி மகிழ்ந்தார்.

அந்தந்தக் காலங்களில் தேவியின் உத்தரவால் மேகங்கள் மழையைப் பொழிந்தன. அம்பிகையின் கட்டளையால் அந்த ராஜ்யத்திலுள்ள ஒவ்வொரு வீட்டிலும் விலை மதிக்க முடியாத ஆபரணங்கள் நிரம்பி இருந்தன. சிந்தாமணி, கற்பகத்தரு, காமதேனு போன்ற ஐச்வர்யங்களும் நிறைந்தன.

அப்போது, மும்மூர்த்திகளும் மற்ற தேவர்களும் அந்த தேவ தம்பதிகளை வந்து வணங்கித் துதித்தனர். இந்திராதி திக்பாலகர்களும், நாரதாதி தேவரிஷிகளும், தங்களுடைய கவலைகளை விட்டு விட்டு அம்மையையும் அப்பனையும் சேவித்தனர். வசிஷ்டர் போன்ற தபோதனர்களும், கந்தர்வர்கள், அப்சரஸ்கள், யக்ஷர்கள் முதலானோரும், எப்போதும் அந்ததம்பதிகளை வணங்கியவாறேயிருந்தனர்.

மூவுலகங்களிலும் நெருக்கமாக வாழ்ந்த தேவகணங்கள், இந்த ராஜ்யத்தில் இடநெருக்கடியின்றிச் சுகமாகவே இருந்தனர். "என்னிடத்தில் தான் அம்பாளுக்குப் பிரியம்" என்று ஒவ்வொருவரும் நினைக்குமாறு, அம்பிகை எல்லோரையும் மகிழ்ச்சியுறச் செய்தாள். உலகங்கள் அனைத்திலும் வாழும் உயிர்களின் விருப்

பங்களை அவள் உளமுவந்து நிறை வேற்றினாள்.

இவ்வாறு மூவுலகங்களையும் ஆண்டு வந்த அந்த திவ்ய தம்பதிகள், பத்தாயிரம் ஆண்டுகளை ஒரு கணம் போன்று கழித்தனர்,

பிறகு ஒரு சமயத்தில், நாரதர் அங்கு வந்தார். காமேச்வரி காமேச்வரர்களை வணங்கிய அவர். தேவியை வினயத்துடன் நோக்கி, பின்வருமாறு வேண்டினார் :

''அம்பிகே! நீயே பரப் பிரம்மம்! நீயே பரமபதம்! நீயே மஹாப்புனிதை! சத்து, அசத்து, சங்கல்பம், விகல்பம் இவற்றை நீயே [செய்பவள். சத்துக்களைக் காப்பாற்றுவதற்காக வியக்தமாக இருக்கின்றாய். நல்லவர்களைக் காப்பதற்கும், தீயவர்களை அழிப்பதற்கும் நீ செயல்படுகின்றாய்.

''பண்டாசுரன் என்னும் அசுரன் மூன்று உலகங்களையும் பீடிக்கின்றான். அவனை மற்றவர்கள் வெல்ல முடியாது. உன்னால் மட்டுமே அவனை வெல்ல முடியும். தேவர்கள் அனைவரும் உன்னை வணங்கிக் கொண்டே இங்கு உறைகின்றார்கள். நின் கட்டளைப் படி அவரவர்கள் இருப்பிடத்திற்கு இப்போது செல்லட்டும். ஏனெனில் தேவர்கள் வாழுமிடங்கள் அமங்கலமாயும், சூன்யமாகவும் இருக்கின்றன.''

இவ்வாறு நாரதரால் துதிக்கப்பட்ட தேவி, தேவர்கள் அனைவரும் தத்தம் இருப்பிடம் செல்லுமாறு உத்தரவிட்டாள். இந்த ஆதி தம்பதிகளை விட்டுப் பிரிய தேவர்களுக்கு மனம் வரவில்லை. ஆகவே அவர்கள் தத்தம் லோகங்களுக்குச் சென்றாலும், தமது அம்சங்களால் தேவியை விட்டு அகலாது, அவளது அருகிலிருந்து சேவித்துக் கொண்டிருந்தனர்.

இந்தச் சரிதம், படிப்பவர்களுக்கு ஆயுளைக் கொடுக்கும். சர்வ மங்களங்களையும் செய்யும். அம்பாளின் ஆவிர்ப்பாவத்தையும், கல்யாணத்தையும், பட்டாபிஷேகத்தையும் காலையில் எழுந்து பக்தி சிரத்தையுடன் படிப்பவர்கள், தன ஸம்ருத்தியோடு, அமிர்தத்திற்குத் துல்லியமான வாக்கையும் உடையவர்கள் ஆவார்கள்.

யசஸ்ஸையும், பெருந்தன்மையையும், அபயத்தையும் அவர்கள் அடைவர்கள். தேஜஸ்விகளாகவும், பலசாலிகளாகவும் திகழ்வார்கள். தாபத்ரயங்களால் பாதிக்கப் படாதவர்களாகவும், புருஷார்த்தங்களை உடையவர்களாகவும் விளங்குவார்கள்!

மூன்று வேளைகளிலும் சிம்ஹாஸனேச்வரியைத் தியானிப்பவர்கள், ஆறுமாத காலத்திற்குள் அசஞ்சலம் உடையவர்கள் ஆவர். மிகுதியான ஐச்வரியத்தையும் அடைவார்கள்.

★

ஸ்ரீ சாந்தானந்தர் அருள்வாக்கு



உலகம் கீழ் மேலாகத் தடுமாறினும், பிறர்க்குத் துன்பந்தரும் பொய்யை நீ மனத்திலும் நினையாதே.

குடம் நிறைய நீர் இருப்பின், அசைந்து ஓசையிடாது.

நெஞ்சே! நல்லறிவினால் மேன்மையுற்றோர் பொறுமை கொள்ளார்.

ஈசலுக்கு அழிவுகாலம் வரும் பொழுது இறகு முளைக்கும். மனிதனுக்கு அழிவுகாலம் வரும் பொழுது அகங்காரம் முளைக்கும்.

மனமே! எல்லா நற்குணமும் பொருந்தியவராகத்தம்மைதாமே மதித்துக் கொள்பவரைப் போல் நீ இராதே.

நான் உயர்ந்தவன் எனத் தன்னைத்தானே மதித்துக் கொள்வது எதுவோ, அதுவே அஹங்காரம் என்று அறிவாயாக.

தீமை புரிபவனுக்குக் கெடுதி செய்ய நீ யோசித்துக் கொண்டிருக்க வேண்டியதே இல்லை. நதிக்கரையிலுள்ள மரம் வீழ்வது போல, அவன் தானாகவே வீழ்ச்சியடைவான்.

பணிவுடன் இரு. நீ கர்வப்படும்படி உன்னிடம் என்ன இருக்கிறது?

எவன் கஷ்டத்தை சகிக்கும் வகையை அறிந்தவனோ, அவனே அமைதியை அனுபவிப்பான்.

தண்ணீர்ப் பந்தலில் சந்திக்கும் வழிப்போக்கரைப் போல் நாம்

ஆசை கொடியது. பிறவிப் பெருங்கடலில் உன்னை ஆழ்த்தி விடும்.

ஸ்ரீ சத்குருவினிடம் நம்பிக்கையும், அசைக்க முடியாத உறுதியும் இருப்பின், ஆச்சரியமானசக்தியைக்காண்பாய்.

அதர்மத்தினால் மனிதன் சிறிது காலம் க்ஷேமமுறலாம். ஆனால் அவன் அடியோடு நாசமாகிறான்.

ஸத்குருவே! உம்மில் கலப்பதற்கேற்ற தூய்மையை எனக்கு நல்குவீராக.

பொய் சொல்வதே தமது திறமையாகக் கொண்டவர், எப்பொழுதும் எல்லா பாடுங்களும் செய்கின்றனர்.

கூடுகிறோம். சில காலத்திற்குப் பின் பிரிகிறோம். இது விதியின் விளையாட்டு என உணர்.

உண்மையை உணர்ந்தவர்கள் நிலைப்பதையும் நீங்குவதையும் நினைத்து வருந்துவதில்லை.

எல்லாச் செல்வங்களிலும் அருளாகிய செல்வமேமேலானது. பொருள்களாகிய செல்வங்கள் அற்பரிடத்தும் உள்ளன.

மனமே! அருள் உடையவனுக்கு நரகம் இல்லை.

நான் நான் என்னும் ஆணவம் முற்றிலும் ஒழிய வேண்டும்.

தீங்கு செய்தவனைத் தண்டித்தல் ஒரு நாள் இன்பம். பொறுத்தல் முடிவிலாப் புகழ்.

ஒழுக்கம் தவறி நடப்பவர்கள் பலவிதப் பாபங்களைச் செய்கிறார்கள்.


தம்மைக் கொடுத்தோருக்கு இறைவன் தன்னையே கொடுப்பான்.

இறைவனடி பற்றி வாழத் தெரிந்தவன் எதிலும் மயங்கமாட்டான்.

பூமியைப்போல், நீ கடவுளை நம்பி எதுவந்தாலும் பொறுத்துக் கொள்.

★

இருவகை வைராக்கியங்கள்



வேதவேதாந்த
வித்வரத்னம்
பிரம்மஸ்ரீ
ஆர். முத்துகிருஷ்ண
சாஸ்திரிகள்

ஞானம் என்றால் நூல்களில் உள்ளவற்றை நன்கு அறிந்து கொள்ளுதல். விஞ்ஞானம் என்றால் அவ்விதம் அறிந்து கொண்டதை அநுபவித்தல். இவ்விரண்டையும் பூர்ணமாகப் பெற்றவனே அந்தர்முகன் ஆவான். அவன் எதையும் வெறுப்பதுமில்லை, விரும்புவதுமில்லை.

சூரியனுடைய ஒளியைக் கொண்டே அனைவரும் காரியங்களைச் செய்கின்றனர். வஸ்துக்களையும் அறிகின்றனர். இருந்தாலும், அனைவரும் செய்யும்காரியங்களுக்கு சூரியன் கர்த்தாவுமல்ல. போக்தாவுமல்ல.

சூரிய ஸந்நிதான வசத்தால் அவரவர்கள் தம்தம் காரியங்களில் ஈடுபடுகின்றனர். அது போல், ஆத்ம ஸந்நிதான வசத்தால் கார்ய கரண ஸங்காதங்கள் தம்தம் காரியங்களில் ஈடுபடு

கின்றபடியால், ஆத்மாகர்த்தாவு மல்ல, போக்தாவுமல்ல.

நைர்வேத்ய வைராக்கியம் என்றும், ஞானகர்ப்ப வைராக்கியம் என்றும் வைராக்கியம் இருவகைப் படும்.

அவற்றுள், நைர்வேத்ய வைராக்கியம் வீடு, வாசல், மனைவி, பிள்ளை, தனம் முதலிய வற்றில் ஆசைவைத்து, முடிவில் துக்கம் ஏற்படுவதைப் பலதடவை நேரில் கண்டதால் ஏற்படுகின்றது. வீடு, மனைவி முதலிய வஸ்துக்கள் ஆரம்பத்தில் சுகத்தை அளிப்பதாகத் தோன்றினலும், முடிவில் நிச்சயமாகப் பலருக்கு துக்கத்தையே அளிக்கின்றன என்பது பிரசித்தம். அக்காலத்தில் அவ்விஷயத்தில் ஒழிவு ஏற்பட்டு, அதனல் அவற்றில் உள்ள ஆசை அகன்று விடுகிறது.

நிர்வேதம் என்றல் ஒழிவு. அதன் மூலம் ஏற்படக்கூடிய வைராக்கியம் நைர்வேத்ய வைராக்யம் எனக் கூறப்பட்டது. இந்த வைராக்யம் அனைவருக்கும் திடமாக இராது. ஆதலால் இதை அபரவைராக்யம் என்பர்.

சாஸ்திர ஆச்சார்ய உபதேச வசத்தால், ஆத்மாவைத் தவிர மற்றவை எல்லாம் துக்கமயம் என்ற அறிவு ஏற்பட்டு, அதன் மூலம் விஷயங்களில் வைராக்யம் ஏற்படும். அதையே ஞான கர்ப்ப வைராக்கியம் என்பர். வாந்தியெடுத்த பதார்த்தத்தை எவ்விதம் ஒருவன் மறுபடியும் உண்ணுவதற்கு விரும்புவதில்லையோ, அவ்விதமே ஞானபலத்தால் வைராக்யம் ஏற்பட்டு விஷயங்களைத் தியாகம் செய்தவர்கள், அவற்றை மறுபடியும் அனுபவிக்க விரும்புவதில்லை.

இவ்வித வைராக்கியத்தால் சித்திக்கும் ஸந்நியாசமும் கேஹ ஸந்நியாசம், தேஹஸந்நியாசம் என இருவகைப்படும். வீடு வாசல் முதலியவற்றில் பற்றற்று அவற்றை விட்டு வெளியேறுதல் கேஹ ஸந்நியாசம், தேஹாபிமானம்கூட இல்லாமல் இருத்தல் தேஹ ஸந்நியாசமாகும்.

உலகில் அனைவரும் சுகத்தைப் பெற வேண்டுமென்பதற்காகவே பல முயற்சிகளைச் செய்து வருகின்றனர். துக்கத்தைப் பெறவேண்டுமென்று யாரும் முயல்வதே இல்லை.

இருந்தாலும், பலர் துக்கத்தை அனுபவிக்கின்றனரே? காரணம் என்ன?

அஹங்காரம், மமகாரம் என்ற இரண்டுந்தான் எல்லா துக்கங்களுக்கும் மூலகாரணம்என்பதை, நாம் நமது அனுபவத்தைக் கொண்டே தீர்மானம் செய்யலாம். அநித்யமான உடலையே "நான்" என்றுஎண்ணுகின்றவன், தலைவலி, கால்வலி முதலிய வியாதி ஏற்பட்டாலும், அல்லது பிறரால் அடிக்கப்பட்டாலும் துக்கப்படுகிறன். "நான்" என்ற எண்ணமே அஹங்காரமாகும்.

அவ்வித அஹங்காரமற்ற துறவிகள், தம் உடலுக்கு எவ்வித துன்பங்கள் நேரிடினும் வருந்துவதில்லை. "உடலுக்கு வியாதியோ, அடியோ சம்பவித்தால், நமக்கென்ன?" எனக் கருதுவர். ஆதலால் அஹங்காரமே துக்கத்திற்கு காரணம் என சித்திக்கின்றது.

அஹங்காரத்திற்கு விஷயமான உடலைச் சேர்ந்தவற்றையெல்லாம் நம்முடையவை என்று எண்

னுவதுதான், மமகாரம் எனப்படும்.

மனைவி, பிள்ளை, தனம் முதலியவையெல்லாம் மமகாரத்திற்கு விஷயமானதால், அவை அழியுங் காலத்தில் மிகவும் வருந்துகின்றனர்.

விரோதி அழிந்தால் அப்பொழுது யாரும் வருந்துதில்லை. ஏன்? விரோதிகளிடம் ''நம்மைச் சேர்ந்தவர்கள்'' என்ற எண்ணம், (அதாவது மமகாரம்) நமக்கு இல்லை. ஆதலால் அஹங்காரம், மமகாரம் என்ற இவ்விரண்டுமே ஸமஸ்த துக்கங்களுக்கும்காரணம் எனத் தெரியவருகிறது. இதை நன்கு உணர்ந்து ஒருவன் உடலில் உள்ள அஹங்காரத்தையும்,மற்ற வஸ்துக்களில் உள்ளமமகாரத்தையும் தியாகம் செய்து, எதிலும் பற்றற்றவனுக இருப்பானேயாகில், அது சிறந்த வைராக்யமாகும். இம்மாதிரி ஞானத்தால் ஏற்படும் வைராக்கியம் உறுதியாக நிற்கும். ஆதலால் இதை பரவைராக்கியம் அல்லது ஞான கர்ப்பவைராக்கியம் என்பர்.

உடலோடு ஒட்டிக்கொண்டிருக்கும் சட்டையைப் பாம்பு மிகுந்த முயற்சியுடன் உரித்துத் தள்ளி விட்டுச் செல்லுவதுபோல், வீடு மனைவி, பிள்ளை முதலியவர்களிடம் உள்ள திடமான பற்றை வைராக்கிய பலத்தால் அறுத்துத் தள்ளுவதே ''கேஹஸந்நியாசம்'' எனப்படும். (கேஹ:- வீடு)

வழியில் நடந்துசெல்லுகின்றவன் சற்று மரத்தின் நிழலில் தங்குவான். ஆனால் இன்னும் வெகு தூரம் அவன் செல்ல வேண்டியிருப்பதால், அந்த நிழலில் மிகுந்த ஆசை கொள்ளமாட்டான்.

அதுபோல் கேஹ ஸந்நியாசம் செய்தவன், உடல் வாழ்வதன் பொருட்டு சொற்ப ஆஹாரத்தை உட்கொள்ளுவான். அதில் அதிக ஆசை வைக்கமாட்டான்.

அந்த ஆகாரமும் மரத்திலிருந்து தானுகவிழுந்த பழமாகத்தான் இருக்கும். அதையும் பசியைத் தீர்ப்பதற்கு வேண்டிய அளவுதான் ஏற்றுக்கொள்ளுவான். மரத்திலிருந்து பழங்களைப் பறிக்கமாட்டான். ஏராளமாகவும் சேர்த்து வைத்துக் கொள்ள மாட்டான்.

இவ்வாறே தேஹஸந்நியாசம் என்பது தேஹாபிமானமற்று இருத்தலேயாகும். ஆத்மா என்பது, ஒரே ஆனந்தம் நிரம்பிய பூஞ்சோலைக்கு ஒப்பாகும். அதை அடைவதன் பொருட்டு, துக்கமயமான இவ்வுடலைவிட்டும் கிளம்ப வேண்டும் எனக் கூறப்பட்டிருக்கிறது.

வெளியூரிலிருந்து தன் சொந்த ஊரை நோக்கிச் செல்லுகின்றவன், மத்தியில் ஓர் வீட்டில் விருந்தாளியாகத் தங்குகின்றுன். ஏதோ சில உணவுகளையும் அங்கு பெற்றுக்கொள்கின்றுன். ஆனல் தன் சொந்த வீடு வேறு இருக்கின்றபடியால், மத்தியில் தங்கும் வீட்டில் தன்னுடையது என்ற மமகாரம் இராததால், அவனுக்கு அதில் எவ்விதப் பற்றுமிராது. அவ்வீட்டில் ஏற்படும் சுகத்தைக் கண்டும் களிக்கமாட்டான். துக்கத்தைக் கண்டும் வருந்தமாட்டான்.


அவ்விதமே, மோக்ஷத்தை விரும்புகின்ற கிருஹஸ்தன் சொந்த வீட்டில் தங்கியிருந்த போதிலும், அங்கு மமகாரம் அற்றவனுக இருந்து கொண்டு,

அவ்வீட்டில் ஏற்படும் சுகதுக்கங்களை அனுபவிக்காமல் இருக்க வேண்டும். சுகத்தை அடைவதற்கோ துக்கம் உண்டாகாமல் இருப்பதற்கோ எவ்வித முயற்சியையும் செய்யாமல், அவன் உதாசீனமாக இருக்கவேண்டும்.

அவ்வாறு இருக்க முடியுமா என்றால், உலகில் உள்ள வீடு, வாசல், மனைவி முதலிய வஸ்துக்களின் நிலையாமையை நிதானமாக உற்று கவனிக்கும் அறிவாளிக்கு, அது அசாத்தியமெனக் கூற முடியாது.

ஆகாயத்தில் சில சமயம் மேகங்கள் தோன்றி மறைகின்றன. அவை தோன்றுவதற்கும் மறைவதற்கும், அவற்றின் சொந்த முயற்சி காரணமல்ல. தெய்வாதீனமாகவே அவ்வாறு நடைபெறுகின்றது. அதுபோல் உலகில் நமக்கு வரவேண்டிய வஸ்துக்கள் வந்தே தீரும், செல்ல வேண்டியவையும் சென்றே தீரும் என்ற எண்ணத்துடன், விஷயமறிந்த விவேகி எவ்வித முயற்சியையும் செய்யாமல் உதாசீனமாகவே இருப்பான்.

ஆக, வீட்டில் இருந்தாலும், விஷயங்களில் மமகாரம் அற்றவனாக இருந்தால் ஒருவன் மோக்ஷத்தைப் பெறலாம் என்பது உறுதி.



சென்னை லிட்டில் பிளவர் கம்பெனியின் கௌரவ ஆலோசகர் ஸ்ரீ வி. கிருஷ்ணஸ்வாமி சர்மா அவர்களின் புதல்வி சௌபாக்யவதி விஜயலக்ஷ்மிக்கும், தூப்புல் கோயில் வெண்ணி ஸ்ரீ எஸ். பார்த்தஸாரதி அய்யங்கார் அவர்களின் புதல்வர் சிரஞ்சீவி நாராயணனுக்கும், அண்மையில் திருமண வைபவம் சிறப்பாக நடைபெற்றது. மணமக்கள் நீடூழி வாழ்க!

அம்பிகையின் கருணை

ஸ்ரீ திருமுருக கிருபானந்தவாரியார்



அர்ச்சுனன் கயிலைமலைச்சாரலில் ஐந்து ஆண்டுகள் ஒரு காலிலே நின்று, அரிய பெரிய தவஞ் செய்தான். கருந்துறுகல்லெனக் கருதிப் பிடியுங்கன்றும் களிற்றினமும் உடலைத் தேய்த்தன; கரையான் மூடியது. புற்று எனக் கருதி அரவங்கள் குடியிருந்தன. கொடிகள் சுற்றி மூடிக் கொண்டன. மழைநாள், வெயில்நாள், பனிநாள் என்று பாராது தனஞ்செயன் மனஞ்செயனாக நின்று அகோராத்திரம் மாதவம் புரிந்தனன். தானவரிலும் வானவரிலும் மானவரிலும் அர்ச்சுனனைப்போல்தவம் புரிந்தார் இல்லையென்று மோனவரும் மொழிந்தார்கள். காமாதி அறு பகையை வென்று, கானல் நடுவே நின்று அரிய பெரிய தவம் புரிந்தனன்.

உமையம்மை ஒருநாள் இறைவனை நோக்கி, "பெருமானே! இந்த மன்னர் குமாரன் யாவன்? இவன் தவம் புரியக் காரணம் யாது? ஏன் இன்னும் அருள் புரியாதிருக்கின்றீர்!" என்று வினவியருளினார்.

பரமன் அதைக் கேட்டு, "பார்வதி! இவன் அர்ச்சுனன்; பாண்டுவின் பாலன்; சூதினால் அரசிழந்து, கானகம்போந்தனன். எதிர்காலத்தில் நிகழ இருக்கும் போரில் பகைவரை ஒருங்கே அழிக்கும் பொருட்டுப் பாசுபதாஸ்திரத்தை வேண்டித் தவம் புரிகின்றான். உத்தமமானவன்.

இவன் தவத்தையழிக்கும்பொருட்டுத் துரியோதனன் மூகாசுரனை ஏவினன். அவன் பன்றியுருவுடன் இவனைக் கொல்ல வருகின்றன். இனி நாம் வேட வடிவுடன் சென்று மூகாசுரனுக்கு நிக்கிரகமும் அர்ச்சுனனுக்கு அநுக்கிரகமும் புரிதல் வேண்டும்!" என்று அருளிப்புறப்பட்டனர். அப்பன்றி தான் மூலமலம் என்று உணர்க.

கண்ணப்பநாயனரும் பன்றியைக் கொன்ருர் என்ற வரலாறு இங்கு நினைவுகூர்தல் வேண்டும். எனவே அம்மை வேண்ட அப்பன் அர்ச்சுனனுக்கு அருள் புரிந்தனன் என்ற நுட்பத்தையுணர்க.

கோபண்ணு என்ற இராமதாசர் பன்னிரண்டு ஆண்டுகள் சிறையில் துன்புற்றனர்.

ஐதராபாத்தை அரசு புரிந்த தானிஷா என்ற முஸ்லீம்மன்னன் தனது கடனைத் தருமாறு அவரை ஒவ்வொரு நாளும் இடர்ப்படுத்தினன். பத்ராசலத்தில் ஸ்ரீ ராமர் கோயில் திருப்பணியைச் செய்த இராமதாசர், "ராமா! ராமா! என் துன்பத்தைத் தீர்த்து அருள்" என்று 12 ஆண்டுகள் வேண்டினர். முடிவில் நஞ்சுண்டு மாள வேண்டும் என்று துணிந்தார்.

நஞ்சை எரு வட்டிலில் வைத்து ராமநாமத்தியானம் புரிந்து மூர்ச்சித்தனர். அன்னை ஜானகி ஸ்ரீ ராமரை நோக்கி, "பெருமானே! இன்னும் அன்பனுக்கு அருள் புரியத் தாமதிக்கலாமா? உடனே சென்று கடனைத் தீர்த்துக் கருணை புரியும்" என்ருர். உடனே ஸ்ரீ ராமரும் லட்சுமணரும் இரு சேவகராக வந்து, பாதி ராத்திரியில் தானிஷாவுடைய அரண்மனையில் பாரா கடந்து சென்று, ஆறு லட்சம் பொன்னைத்தந்து அருள் புரிந்தனர்.

உலகியலிலும் மக்கள் தமக்கு வேண்டியதைத் தாயிடம் கூறித் தந்தையிடம் பெறுவது கண்கூடு. தந்தையினும் தாய்க்குக் கருணை அதிகம். மக்கள் செய்யும் குற்றங்களைப் பொறுக்குத் தன்மை தாயிடம் அதிகம்.

நெல்லையில் எழுந்தருளியிருக்கும் சுவாமி பெயர்வேய்முத்தர். வேய் மூங்கில்-மூங்கிலின் கீழ் சிவலிங்க வடிவமாக முளைத்தபடியினல் வேய்முத்தரென்று பேர் பெற்றனர். அம்மைபெயர் வடிவாம்பிகை.

ஒரு புலவர் திருநெல்வேலிக்குச் சென்ருர். அவர் சிறந்த அன்பர்.

அப்புலவர் நேரே சுவாமி கோயிலுக்குப் போகவில்லை. தாய் மூலம் தந்தையின் அருளைப்பெற வேண்டும் என்ற உண்மையை நன்கு அறிந்தவர். அதனல் நேரே வடிவன்னையின் திருக்கோயிலுக்குச் சென்றனர்,

"அன்னையே! அடியேனிடம் பல குற்றங் குறைகள் இருக்கின்றன. இவற்றைப் பொறுத்து

ஆட்கொள்ளுமாறு ஐயனிடம் கூறியருள வேண்டுகிறேன். அவ்வாறு கூறும் வேளை நல்ல வேளையாக இருக்க வேண்டும். திரிபுரம் எரித்த சமயம், காமதகனம் செய்த சமயம், கால சங்காரம் செய்த சமயம் போன்ற சமயங்களில் அடியேனைப் பற்றிச் சொல்லுதல் கூடாது. எம்பெருமான் தேவரீருடைய திருக்கோயிலுக்கு எழுந்தருளி வந்து, அர்த்தயாமத்தில் பள்ளியறையில் அம்சதூளிகா மஞ்சத்தின் மீதிருந்து தேவரீரிடம் கொஞ்சிப் பேசும் வேளையில், சிறியேனைப் பற்றிச் சிறிது ஞாபகப்படுத்தி, 'இந்த ஏழைத் தொழும்பனை ஆதரிக்குமாறு சொல்லி அருள்புரிவீர். அங்ஙனம் அடியேனைப் பற்றி ஒரு சொல் சொல்லுவதனால் தேவரீருடைய வாய் முத்தம் சிந்திவிடுமோ? வாய்முத்தம் சிந்தாது தானே? சேயின் குறைகளைத் தாய்தானே தீர்த்தருள வேண்டும்?'' என்று வேண்டினார்.

அவர் புலவரல்லவா? பாடல் மூலமாக வேண்டினார். அப்பாடல் அடியில் வருகின்றது:

ஆய்முத்துப் பந்தரில் மெல்லணை
  மீதுன் அருகிருந்து
நீ முத்தந் தாவென் றவர்
  கொஞ்சும் வேளையில் நித்த
      நித்தம்
வேய் முத்தரோடென் குறை
  களெல்லாம் மெல்லமெல்லச்
      சொன்னால்
வாய் முத்தம் சிந்தி விடுமோ
  நெல்வேலி வடிவன்னையே?

பதிவிரதையின் இலக்கணம்

ஜகத்குரு ஸ்ரீ காமகோடி பீடாதிபதிகள்



கன்னிகையாயிருக்கும் பொழுது, அந்தச் சரீரத்தில் ஒருவர் பின் ஒருவராக மூன்று தேவர்கள் இருந்து ரக்ஷித்து, அப்புறம் மனுஷ்யர்களிடத்தில் அர்ப்பணம் பண்ணுகிறார்கள்.

முதலில் ஸோமன் என்ற தேவதை, குழந்தையாயிருந்து லஜ்ஜை தெரிகிறவரைக்கும் அதிஷ்டான தேவதையாக யிருக்கிறான். லஜ்ஜை தெரிந்து ருதுவாகும் வரையில் கந்தர்வன் அதிஷ்டான தேவதையாக இருக்கிறான். அதற்கப்புறம் ருதுவாகி மூன்று வருஷங்கள் வரை அக்னி அதிஷ்டான தேவதையாக இருக்கிறான். அப்புறம் அவன் மனுஷ்யர்களிடத்தில் ஒப்புவிக்கிறான்.

ஒவ்வொரு தேஹத்திலும் அத்யாத்மகமாகத்தேவதைகள் இருக்கிறார்கள். வயோவஸ்தைக்குத் தக்கபடி கன்னிகையின் சரீரத்தில் மட்டும் இந்த மூன்று தேவதைகளும் இருக்கிறார்கள். ஸோமன் முதலில் இருக்கிறான். அப்பொழுது பார்க்கக் குளிர்ச்சி மாத்திரம் இருக்கும். அப்புறம் லாவண்யம் அதிகமாகின்றது. அது கந்தர்வனுடைய அதிகாரகாலம். அப்புறம் காமாக்கினியின் அதிகாரம் உண்டாகிறது. அதனால் அக்கினி இருக்கிறானென்று சொல்லுகிறோம். இவ்வாறு லௌகிகமாக அர்த்தம் பண்ணுவதுண்டு.

கல்யாண காலத்தில் வரனுடைய வார்த்தையாக, 'அக்கினி என் வசப்படுத்தட்டும்' என்ற அர்த்தமுள்ள மந்திரம் சொல்லப்படுகிறது. இது மனுஷ்யர்கள் எல்லோருக்கும் ஏற்பட்ட விதி. சரீராபிவிருத்தி, மனோபாவம் இவைகளுக்குத் தகுந்தபடி தேவதைகள் சரீரத்தை ரக்ஷிக்கிறார்கள்.

அம்பாளுக்கு ஸதீ என்று ஒரு பெயர் இருக்கிறது. ஸதீ—பதிவிரதை. நம்முடைய தேசத்தில் உடன்கட்டையேறுவதென்று ஒரு வழக்கம் இருந்தது. அதற்கு

ஸதி (Sati)யென்று இங்கிலீஷில் பெயரெழுதியிருக்கிறார்கள். உத்தம ஸ்திரீகள் பண்ணுவதால் அதற்கு அப்படிப் பெயர் வைத்தார்கள் போலத் தோன்றுகிறது. தாக்ஷாயணிக்கு ஸதீ என்று பெயர். ஸதிகள் இப்படி இருக்க வேண்டுமென்று காட்ட, அம்பிகை தாக்ஷாயணியாக அவதாரம் செய்தாள். அந்த மாதிரி இருப்பதுதான் பாதிவிரத்தியம்.

விவாஹஉத்தேசம் மூன்று. முதலாவது நல்ல பிரஜை உண்டாக வேண்டும். சரீர புஷ்டியோடு லாவண்யமும் புத்தியும் உடையவர்களாக இருக்கவேண்டும். இது ஒரு உத்தேசம்.

இரண்டாவது, ஸ்திரீகளுக்குச் சித்த பரிசுத்தி ஏற்பட்டு, ஒன்றைப் பிடித்துக்கொள்ள வேண்டும். அதன் மூலமாகக் கடைத்தேற வேண்டும். அதற்காக விவாஹம் பண்ணவேண்டும்.

மூன்றாவது உத்தேசம், புருஷனுக்குக் கிருஹஸ்தாசிரமத்திலிருந்து ஸ்வதர்மானுஷ்டானம் பண்ணி சிரேயஸை அடைய, ஒரு ஸஹாயம் வேண்டும். இப்படி மூன்று உத்தேசங்கள் இருக்கின்றன.

புருஷனுக்கு, பரிபக்குவ மடையாத நிலையில் தர்மானுஷ்டானத்திற்காகவும்; ஸ்திரீகளுக்கு வேறு வழி கிடையாதாகையால் அவர்கள் கடைத்தேற ஒரு அவலம்பனம் வேண்டியதற்காகவும்; லோகத்திற்கு நல்ல பிரஜைகள் உண்டாவதற்காகவும்; இப்படி மூன்று உத்தேசங்களுக்காக விவாஹமாகவேண்டும்.

வர்ணாசிரமவிபாகங்களில் ஒவ்வொரு உத்தேசத்துக்கு ஒவ்வொரு தர்மத்தை வைத்திருக்கிறார்கள். ஸந்யாஸிகள் இருக்கிறார்கள்; புருஷர் இல்லாத ஸ்திரீகள் இருக்கிறார்கள்; வானப்பிரஸ்தர்கள் இருக்கிறார்கள். அவர்களுக்கு ஸ்நானம் உபவாஸம் முதலிய அதிக நியமங்கள் உண்டு.

ஸுமங்கலிகள் அடிக்கடி ஸ்நானமே பண்ண வேண்டாம். தீர்த்தத்தை புரோக்ஷணம் பண்ணிக் கொண்டாலே போதும். ஸந்யாஸி அடிக்கடி ஸ்நானம் பண்ண வேண்டும்.

க்ஷத்திரியன் மாம்ஸாதி ஆஹாரங்கள் தின்றால் தோஷமாகச் சொல்லவில்லை. ஸ்ரீராமர் முதற்கொண்டு, சிராத்தாதிகளுக்கு மாம்ஸத்தை உபயோகித்திருக்கிறார்கள். வேலை செய்கிற தொழிலாளி இவ்வளவு நியமம் பார்க்க முடியாது. எல்லோரும் உபவாஸமாக இருந்தால்லோகத்தில் காரியம் நடக்காது. எல்லோரும் மாம்ஸம் தின்றால் சுத்தமே யிராது. நம்முடைய தேசத்தில் எல்லாவற்றையும் ஒன்றாகப் பண்ண முடியாது. எல்லோருக்கும் ஒன்றாகச் சொன்னால் ஒரு காரியந்தான் நடக்கும். மற்றவைகள் நடக்கமாட்டா.

வர்ணாசிரம தர்மத்தில் ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு காரியம்சொல்லப்பட்டிருக்கிறது. எல்லோரும் தங்கள் தங்கள் காரியத்தை நன்றாகச் செய்தால் பொதுக் காரியங்களில் ஒன்றாகச் சேர்ந்து கொள்வார்கள்.

பத்தினி பதிவிரதையாக இருக்க வேண்டுமே யொழிய, பதியானவன் பத்தினிவிரதம் இருக்க வேண்டுமென்று நியமமில்லை. ஏகபத்தினி விரதம்

உண்டே யொழிய, பத்தினியே தெய்வம் என்றுநினைக்கக்கூடாது. பிரம்மசரியத்திற்குச் சில விரதங்கள் ஏற்பட்டிருக்கிறது போல, பாதிவிரத்தியத்திற்கு ஒரு விரதம் ஏற்பட்டிருக்கிறது. அது பதியையே பரமேசுவரனாக நினைத்து ஜன்மபரியந்தம் நடக்க வேண்டும். பிரதோஷ விரதத்தைச் சிலபேர் ஜன்ம விரதமாக வைத்துக் கொண்டிருக்கிறார்கள். அதைப் போல பதிவிரதைகளுக்கு இது ஜன்ம விரதமாக ஏற்பட்டிருக்கிறது.

மஹாராஷ்டிரர்களுக்கும் ஆந்திரர்களுக்கும் நோன்புகள் அதிகம். அவர்கள் செய்யும் அநேக விரதங்களில், கன்யகாவஸ்தையில் செய்ய வேண்டியவை சில உண்டு. அவைகளில் பரமேசுவரனைப் பதியாக நினைத்துப் பூஜை பண்ண வேண்டுவது ஒன்று. விவாஹமான பின்பு, பதியைப் பரமேசுவரனாக நினைத்துப் பூஜை பண்ண வேண்டும். 'நாம் முன்பு பூஜை செய்த பரமேசுவரனே இப்படி வந்திருக்கிறார்' என்ற ஞாபகம் இருக்க வேண்டும்.

ஸ்ரீராமர் அவதாரம் செய்தார். அவருடைய பத்தினியாகிய ஸீதாதேவி இருந்ததுகூட அவ்வளவு பாதிவிரத்தியமில்லை. ராமன் புருஷனாக வந்தால், யாரும் ஸீதைக்கு மேல் பதிவிரதையாக இருக்கலாம். மனதுக்குச் சலனம் ஏற்படக்கூடிய பல ஆபத்துக்களில் ஜாக்கிரதையாக இருந்தாள் என்பதனால் தான், ஸீதைக்கு ஒரு கௌரவம் ஏற்பட்டிருக்கிறது. ராமன் காட்டுக்குப் போகும் பொழுது, நானும் வருவேனென்று அவள் சண்டை போட்டாள்.

பாதிவிரத்தியத்தில் மிகவும் ஜாக்கிரதையாக இருந்தவள் நாளாயினி. அவள்தான் திரௌபதியின் முற்பிறப்பு. அவள் இருந்ததுதான் உத்தம பாதிவிரத்தியம். பரமவிபரீதமான குணங்களும், பரம குத்ஸிதமான சரீரமும், இருந்தாலும், பதியினிடத்தில் பக்தி பண்ணினாள். தேஹம் நன்றாயிருந்தால் நாமென்ன விரதமாயிருக்கிறது?

மஹாமகக்குளத்தில் ஊற்றுப் போட்டு ஜலம் இறைத்தால், வெள்ளைக்காரன்கூட ஸ்நானம் பண்ணுவான். எவ்வளவு சேறானாலும் அது தீர்த்தம் என்று முழுகினால், அப்பொழுதுதான் உண்மையான பக்தி இருக்கிறதென்று தெரியும். பதி நிரம்பப் பணக்காரனாகவும் அழகுடையவனாகவுமிருந்தால், எல்லோரும் அவனிடத்தில் பிரியமாக இருப்பார்கள். மூடனாகவும் குரூபியாகவும் இருக்கிறவனிடத்தில் 'அவர் எப்படியிருந்தாலும் நமக்கு வெறுப்புக் கூடாது. நாம் அப்படி யிருந்து

விட்டால் என்ன பண்ணுவோம்' என்று நினைக்க வேண்டும்.

'அவர் நல்ல பதியாக இருந்தால் நம்முடைய பாதிவிரத்தியத்தைக் காட்ட முடியாது. பரமேசுவரன் இப்படிக் கொடுத்துப் பார்க்கிறார்' என்று சந்தோஷமாக இருக்க வேண்டும். அவமானம், கஷ்டம் முதலியவைகளெல்லாம் கொஞ்சகாலந்தான் இருக்கும். 'இருக்கட்டும்; அவர் மனதுதான் நம்மனது. நமக்கென்று வேறு இல்லை' என்று இருந்துவிட்டால், அதிக புண்ணியம் உண்டாகிறது. அவமானம் முதலியவைகளுக்குப் பயந்து விரோதித்துக் கொண்டு இருந்தால், இஹத்தில் கொஞ்சம் லாபம் இருக்கலாம்; நஷ்டம் அதிகம். பதி நன்றாக இருந்தால், அவர் நன்றாக இருக்கிறாரென்பதற்காக அன்பாக இருப்பது பாதிவிரத்தியம் ஆகாது.

இறைவன் நமக்குள் எப்படி இருக்கிறார்?

பகவான் ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்சர்



ஒரு கிராமத்தில் நெசவுத் தொழில்காரன் ஒருவன் இருந்தான். அவன் பரம பக்தன். துணி ஒன்றுக்கு விலை என்ன என்று கேட்டால், ''ராமனுடைய இச்சையால் நூல் கிரயம் ரூபாய் ஒன்று; நெசவுக்கூலி நாலணா; ஊதியம் இரண்டணா; ஆக விலை ரூபாய் ஒன்று, அணா ஆறு'' என்பான். அவன் வார்த்தையில் முழு நம்பிக்கை வைத்திருந்த அக் கிராமத்தார், அவன் சொன்ன விலையைக் கொடுத்துத் துணியை வாங்கிக் கொள்வார்கள்.

மாலையில் தொழில் முடிந்ததும் அவன் நெடுநேரம் பகவத் தியானம், ஜபம் முதலியன செய்வான். ஓர் இரவு தூக்கம் பிடிக்காது அவன் ஜபம் செய்துகொண்டிருந்தான். அப்பொழுது அவ்வழியே சென்ற திருடர்கள் அவனைத் தங்களுடன் இழுத்துச் சென்றனர். தாங்கள் கொள்ளையடித்ததையெல்லாம் அவன் தலையில் வைத்துச் சுமந்து செல்லும்படி தூண்டினர்.

அந்நெருக்கடியில் திடீரென்று போலீசுக்காரர்கள் தோன்றினர். திருடர்கள் எல்லோரும் ஓட்டம் பிடித்துவிட்டனர். இந்த நெசவுக்கார பக்தன், தலைச் சுமையுடன் போலீசுக்காரர்களிடம் அகப்பட்டுக் கொண்டான்.

இரவு அவனைக் காவலில் வைத்து, காலையில் நியாயாதிபதியிடம் கொண்டு வந்தனர். ஊரார் அவனை அந்நிலைமையில் கண்டும், அவன்மீது சந்தேகம் கொள்ளவில்லை. அவனை விட்டு விடும்படி நியாயாதிபதியிடம் வேண்டினர்.

அவன் என்ன சொல்லுகிறான் என்று நியாயதிபதி அவனிடம் நேரில் கேட்டார். அப்பொழுது அவன் பகரலானான்: ''ராமனு

டைய இச்சையால் நான் நள்ளிரவில் தியானம் பண்ணிக் கொண்டிருந்தேன். ராமனுடைய இச்சையால் திருடர்கள் சிலர் வந்து என்னைத் தங்களுடன் இழுத்துச் சென்றனர். ராமனுடைய இச்சையால் அவர்களுக்கு அகப்பட்ட திருட்டுச் சாமான்களை என் தலையில் வைத்து சுமக்கச் செய்தனர். ராமனுடைய இச்சையால் போலீசுக்காரர்கள் வந்தார்கள். ராமனுடைய இச்சையால் திருடர்கள் ஓட்டம் பிடித்துத் தப்பித்துக் கொண்டனர். ராமனுடைய இச்சையால்நான் இரவெல்லாம் காவலில் வைக்கப்பட்டேன். ராமனுடைய இச்சையால் இப்பொழுது உங்களால் விசாரிக்கப்படுகிறேன்.''

இதைக் கேட்ட நியாயாதிபதி, அவன் குற்றவாளியல்ல என்று அவனை விட்டுவிட்டார். ''ராமனுடைய இச்சையால் நான் விடுபட்டேன்'' என்று அவன் ஊராரிடம் பகர்ந்தான்.

சுத்த மனதும் சுத்த சைதன்யமும் ஒன்றே.

உடலில் ஈசன் எப்படி உறைந்திருக்கிறார்?

பீச்சாங்குழலில் தண்ணீரைத் தள்ளிக் கொடுப்பதற்குத் தண்டு இருப்பது போன்று, அவர் உடலில் இருக்கிறார். தண்டு குழலில் இருக்கிறது எனினும், அது குழலில் ஒட்டாது இருக்கிறது. ஈசன் உடலில் இருக்கிறார் எனினும், உடலில் அவர் ஒட்டுவதில்லை.

மாந்தர் உள்ளத்தில் கடவுள் எப்படி வசித்திருக்கிறார் தெரியுமா? உயர்குல மாதர் அந்தப்புரத்தில் வசித்திருப்பதுபோன்று, கடவுள் மக்கள் உள்ளத்தில் வசித்திருக்கிறார். அந்தப்புரத்திலிருக்கும் மாதர்கள் வெளியில் நடமாடுபவர்களைப் பார்க்க முடியும். ஆனால் நடமாடுகிறவர்கள் அம் மாதர்களைப் பார்க்க முடியாது. நம்மையெல்லாம் கடவுள் பார்த்துக் கொண்டிருக்கிறார். ஆனால் அவரை நாம் பார்க்க முடியாது.

தன் தொண்டர்கள் மூலம், ஈசன் அரும்பெருங் காரியங்களைச் செய்து சாதிக்கிறார்.

ஈசனை அடையப் பெற்ற ஒருவனிடத்திலிருந்து, கீழான இயல்புகளெல்லாம் தாமாக மறைந்து போய் விடுகின்றன.

கடவுள் எல்லோர் உள்ளத்திலும் இருக்கிறார் என்பது உண்மை. ஆயினும், எல்லார்க்கும் அவர் ஒரேவிதமான ஆற்றலை அளிக்கவில்லை. ஆற்றலில் மக்களுக்கிடையில் வேற்றுமை உண்டு.

காந்தத்துக்கு நிகர் பரமாத்மன். ஊசிக்கு நிகர் ஜீவாத்மன். காந்தம் ஊசியைக் கவர்வது போன்று, பரமாத்மன் ஜீவாத்மனைத் தன்மயமாக்குகிறது. ஊசியை மண் மூடிக்கொண்டிருந்தால் காந்தத்தால் அது கவரப்படுவ

தில்லை. ஜீவாத்மனை உலக ஆசைகள் என்னும் மண் மூடிக்கொண்டிருந்தால், அது பரமாத்மனிடம் கவரப்படுவதில்லை.

அடுப்பில் தீ இருக்கிறது. ஆகையினால் பாத்திரத்தினுள்ளேயிருக்கும் நீர், அரிசி, பருப்பு, காய்வகைகள் கொதித்துக் கூத்தாடுகின்றன. 'இதோ இங்கு நாங்கள் இருக்கிறோம், குதிக்கிறோம்' என்று அவைகள் இயம்புவது போன்று தென்படுகிறது.

மானுட சரீரம் பாத்திரத்துக்கு நிகர். மனமும் புத்தியும் அதனுள்ளிருக்கும் நீருக்கு நிகர். இந்திரியங்கள் அரிசி, பருப்பு, காய்வகைகள் போன்றவை. இந்திரியங்களோடு இணைந்துள்ள அகங்காரம் 'நான் ஆடுகிறேன்' என்று இயம்புகிறது. அடுப்பில் இருக்கும் தீக்கு நிகர் சச்சிதானந்த பிரம்மம்.

தூய தங்கத்தில் நகைகள் பண்ண முடியாது. அதில் தாமிரம் போன்ற கலப்பு ஏதாவது கொஞ்சம் போட்டால், நகை பண்ணுதற்கு அது உதவுகிறது. அதே விதத்தில், மாயை கொஞ்சம் கலந்திருந்தால்தான் மனிதன் உலகில் வாழ்ந்திருக்க முடியும். உடல் இருக்கும் வரையில் சிறிதளவாவது மாயையும் இருந்து மனிதனை மயக்குகிறது. மாயை முற்றிலும் மறைந்து போனால், மானுட சரீரம் இருபத்தொரு நாளுக்குமேல் நிலைத்திராது.

இறைவனை நாடுகிற நீ, அவரை மானுட சொரூபத்தில் காண முயல். மானுட சொரூபத்தில் அவர் வியாபகமாவது போன்று, வேறு எதிலும் வியாபகமாவதில்லை.

பல வேஷக்காரன் ஒருவன் ஒரு தடவை முற்றத் துறந்தவனாக வேடம் போட்டுக் கொண்டு வந்தான். அவன் நடித்ததைப் பார்த்துத் திருப்தியடைந்தவர்கள் சன்மானமாக ஒரு ரூபாய் கொடுத்தார்கள்.

ஆனால் அதை அவன் ஏற்றுக் கொள்ளாது போய் விட்டான். பின்பு வேஷத்தைக் கலைத்து விட்டு வந்து ரூபாயைத் தரும்படி வேண்டினான்.

'ஏன் நாங்கள் சன்மானம் அளித்தபொழுது அதையேற்று எங்களைக் கௌரவப்படுத்தாது போய்விட்டு, இப்பொழுது வந்து அதை வேண்டுமென்று கேட்கிறாய்?' என அவர்கள் வினவினார்கள்.

'நான் துறவி வேஷத்திலிருந்தபொழுது சன்மானத்தை ஏற்பது பொருந்தாது' என அவன் விடை விடுத்தான்.

ஆக, அவன் நடந்து கொண்டது முற்றிலும் முறையானது. அதே விதத்தில் ஈசன் மானுட வேடந்தாங்கி வருகிறபொழுது

மானுடனுகவே நடந்து கொள்கிறுர்.

பரம்பொருளை சுவானுபூதியில் அடையப் பெற்றவன் எப்பொழுதும் ஆனந்தத்தில் திளைத்திருக்கிறுன். தயக்கத்தை அவனிடம் காணமுடியாது.

ஆனந்தத்தில் மூன்று விதம் உண்டு. அவைகள் முறையே விஷய ஆனந்தம், சாதன ஆனந்தம், பிரம்மானந்தம் எனப்படுகின்றன. இந்திரிய சுகங்கள் விஷயானந்தம். பகவத் மகிமையைப் புகழ்ந்து பாடுவதும் பேசுவதும் பாடக் கேட்பதும் சாதன ஆனந்தம். பரத்தை அடைந்து அதில் திளைத்திருப்பது பிரம்மானந்தம்.

கற்கண்டால் செய்த பாகைச் சுவை பார்த்தவன், கருப்பட்டியில் செய்த பாகை ரசிக்கமாட்டான். சர்வேசுவரனிடமிருந்து வருகிற பேரானந்தத்தை ஒரு சிறிதளவாவது பக்தன் ஒருவன் ரசித்து விட்டால், போகத்திலுள்ள சுவையெல்லாம் அவன் உள்ளத்தினின்று அகன்று போய் விடுகிறது.

கவிசொற்கேட்ட கண்ணுதல்

ஸ்ரீவத்ஸ ஸோமதேவ சர்மா

திரு ஆமாத்தூர் பாடல்பெற்ற நடுநாட்டு சிவஸ்தலங்களில் ஒன்று இத்தலம் விழுப்புரம் புகைவண்டி நிலையத்திற்கு மேற்கே நாலு மைல் தூரத்தில், பம்பையென்னும் சிறிய ஆற்றின் கரையில் உள்ளது. கோயிலில் வன்னி மரமும், கொன்றைமரமும் உள்ளன.

ஊரை நெருங்கியதுமே இயற்கையின் எழில் கொண்டு ஆற்றின் மேல்கரையில் கோயில் மிக அழகாகக் காட்சியளிக்கிறது. இத்தலத்திற்குத் தாயூர், திருவாமாத்தூர், கோமாத்ருபுரம் என்ற பெயர்களுண்டு.

முன்காலத்தில் பசு இனங்கள் கொம்பு இல்லாதவைகளாகப் படைக்கப்பட்டதாகக் கூறப்படுகிறது. அதனால் அவைகள் மற்றைய தீய விலங்குகளிடமும் விரோதிகளிடமும் கஷ்டப்பட்டன. அவற்றின் உபத்திரவத்திலிருந்து தப்பவும், அவைகளை எதிர்க்கவும் கொம்பு பெற வேண்டி, பசுக்களெல்லாம் நந்தி தேவரையும் காமதேனுவையும் தலைமையாகக் கொண்டு, பம்பையாற்றின் கரையில் இருந்த வன்னிவனத்தை அடைந்து, அங்கு ஒரு புதரில் மறைந்திருந்த சுயம்பு லிங்கத்தைக் கண்டு பூஜை செய்து, பல வருடங்கள் தவமிருந்து கொம்பு பெற்றன எனத் தலபுராணம் கூறுகிறது.

இதன் காரணமாகவே, இத்தலத்தைப் ''பசுக்களுக்குத் தாயூர்' என்னும் பொருளில், ''திரு ஆமாத்தூர்'' என அழைக்கின்றனர். இதையே வடமொழியில் கோமாத்ருபுரம் எனக் கூறுகின்றனர்.

பசுக்கள் இறைவனைக் குறித்து யாகம் செய்து கொம்பு பெற்றதாக, வேதம் கூறுகிறது. கிருஷ்ண யஜுர் வேதம், தைத்திரீயாரண்யகம், ஏழாம் காண்டம், ஐந்தாவது ப்ரச்னத்தில் இந்த விவரமுள்ளது.

இந்த ஆமாத்தூரை அடைய. பெண்ணை நதியிலிருந்து பிரிந்து

வரும் பம்பையாற்றைக் கடக்க வேண்டும். நதியின் மேல் கரையில் ஆமாத்தூர் அபிராமேஸ்வரரின் ஆலயம் உள்ளது. இது நாம் இன்று காணும் காட்சி.

ஆனால் ஆதியில் இந்தக் கோயில், இந்தப் பம்பையாற்றின் கீழ்க்கரையில் இருந்திருக்கிறது. எப்படி இந்த ஆலயம் மேல் கரைக்கு வந்தது? இது ஒரு ரஸமான வரலாறு.

•

கலைமகளின் திருவருள் பெற்ற இரட்டையர் என்னும் புலவர்கள் இருவர், முற்காலத்தில் இருந்தார்கள். அவர்களுள் ஒருவர் குருடர். மற்றவர் முடவர்.

அவர்கள் பல இடங்களுக்குச் சென்று, தங்களது தெய்வீகப் புலமையை வெளிப்படுத்திக் கொண்டு இருந்தனர்.

திருவாமாத்தூர் இறைவனின் ஆணைப்படி இவர்கள் ஆமாத்தூர் ஈசன் பேரில் கலம்பகம் பாடினர்.

அக்காலத்தில் ஆட்சி செய்த அரசன், இந்நூலை அரங்கேற்றம் செய்ய ஏற்பாடுகள் செய்தான்.

நூலில், கோயில் பம்பையாற்றின் மேல்கரையில் இருந்ததாகப் பாடப்பட்டிருந்தது.

இதைக் கேட்ட பலரும், ''இது என்ன கூற்று? இவர்களா தெய்வீகப் புலவர்கள்? இவர்கள் புலமை தெய்வீகத்தன்மை யுள்ளதா ?'' என்று கூறிப் பலவாறாகப் பேசினர்.

''மாதை நாதர் வலங்கொள் பம்பை மேற்கரையில் கோயில் கொண்டார் புரம்சீறிய வெங்கணைக்கே''

இப்படிக்கலம்பகத்தில்பாடியுள்ளார்கள் இரட்டைப் புலவர்கள்.

எல்லோரும் தங்களைக் கண்டு நகைப்பதைக் கண்ட புலவர்கள், ''யானும் அறியேன் அவளும் பொய் சொல்லாள்'' என்று பழியைக் கலைமகள் பேரிலேயே போட்டு விட்டார்கள். அவ்வளவுதான். நூல் மேற்கொண்டு அரங்கேற்றப்படவில்லை.

ஆனால் அன்று இரவு ஓர் அதிசயம் நிகழ்ந்தது, பெருமழை ஒன்று பெய்தது. ஆற்றில் வெள்ளம் கரை புரண்டு ஓடியது. விடிந்ததும் பார்த்தால், கோயிலுக்கு இடப்புறம் ஓடிய பம்பை நதி, தன் போக்கை மாற்றிக்கொண்டு கோயிலுக்கு வலப்பக்கம் ஓடிக் கொண்டிருந்தது!

இதனால், ஆற்றின் கீழ்க்கரையில் இருந்த கோயில், ஆற்றின் மேல்கரைக்கே சென்று விட்டது.

இறைவன், வலங்கொள் ''பம்பையின் மேற்கரையில் கோயில் கொண்டார்'' என்று இரட்டையர்கள் பாடிய பாட்டு மெய்யாகி விட்டது.

இனியும் அவர்கள் தெய்வீகத் தன்மைக்கு சந்தேகமுண்டோ! மேற்கொண்டு நூல் அரங்கேற்றப்பட்டு விட்டது. இரட்டைப் புலவர்களும், ஆமாத்தூர் அண்ணலின் கருணையை வியந்து கண்ணீர் மல்கினர்.

அவர்கள் பிறகு இத்தலத்திலேயே வாழ்ந்து வீடு பேற்றையடைந்ததாகக் கூறப்படுகிறது.

இன்றும், ஆறு முன் ஓடிய நிலையையும், இன்றைக்கு நிலை மாறி ஓடிய நிலையையும், நன்கு காணலாம். எல்லாம் அவன் செயல். இந்த தெய்வீகப் புலவர்களின் கலம்பகத்தால் திருவாமாத்தூர் அண்ணலின் பெருமையும் கருணையும் உலகுக்கு வெளிப்பட்டது.

★

விக்ரக ஆராதனை

ஸ்வாமி விவேகானந்தர்

நான் சிறுவனாக இருந்தபோது ஒரு கிருஸ்துவப் பாதிரியார் ஒரு ஜனக் கூட்டத்துக்குப் பிரசங்கம் செய்தது இப்போது எனக்கு ஞாபகம் வருகிறது.

பல ருசிகரமான விஷயங்களோடு அவர் பின்வரும் விஷயத்தைக் கூறினார்.

"உங்களுடைய விக்ரகத்தை இந்தத் தடியினால் ஓர் அடி அடித்தால் அது என்ன செய்யும்?"

கேட்டு நின்றோரில் ஒருவர் பாதிரியாரை நோக்கி, "உன்னுடைய தேவனை நான் நிந்தித்தால் அவர் என்ன செய்வார்?" என்று துடுக்காகக் கேட்டார்.

"நீ இறக்கும்போது தண்டிக்கப் படுவாய்" எனப் பாதிரியார் பதிலளித்தார்.

இந்துவும் மறு உத்தரமாக "நீ இறக்கும்பொழுது எனதுவிக்கிரகமும் உன்னைத்தண்டிக்கும்" என்று கூறினார்.

இந்துக்களே! விக்ரக ஆராதனையிலிருந்து இராமகிருஷ்ண பரமஹம்சர் போன்றவர்கள் தோன்றியிருக்கின்றனரென்றால், நீங்கள் வேண்டுவது யாது? விக்ரக ஆராதனையா? அல்லது அதனை மறுப்பவர்களது கொள்கைகளா? பதில் சொல்லுங்கள்!

இல்லறத்தில் ஆன்மீக வாழ்வு

ரிஷிகேசம்
ஸ்ரீ ஸ்வாமி சிவானந்தர்

இவ்வரிகளைப் படிக்கத்தொடங்கும் நாள் முதற் கொண்டு, ஒரு யோகியின் தூய்மை வாழ்வு வாழ முற்படு. மனதிற்கு எள்ளளவேனும் சலுகை கூடாது. அவசியமாகத் தேவைப்படுவது தன்னம்பிக்கை ஒன்றே. புறத்தேயிருந்து ஆலோசனைகளை நீ பெறக் கூடும். ஆனால். நீயாகவே ஆன்மீகப் பாதையில் நடந்து செல்ல வேண்டிவரும். நீயாகவே ஆன்மீக ஏணியில் அடிமேல் அடியெடுத்து வைக்க வேண்டி வரும்.

உன் வாழ்க்கைத் துணைவிக்கும் நீ பயிற்சியளிக்க வேண்டி வரும். அவளும் தீவிர சாதனையில் ஈடுபட வேண்டி வரும். வெறும் திண்ணைப் பேச்சு விரும்பத்தக்கதல்ல. கணவன் தியானத்தினின்று திரும்பியதும், நேர்மையான மனப்போக்குடன் அவனுக்குப் பணிவிடை செய்து உடல் நலம் பேணி; ஊன்,உணவு, பருகுதல் ஆகியவற்றின் தேவைகளை அளித்து வருவாளானால்; மஜ்னுவில் லைலாவும், சத்தியவானில் சாவித்திரியும், அத்ரியில் அனசூயாவும் போன்று, கணவனிடத்தில், கணவனதுவடிவத்தின் மூலம் அவள் ஆத்மதரிசனம் பெற முடியும்.

அவன் பக்கத்தில் அவளில்லாமல், நித்திய கருமங்கள் அல்லது மதச் சடங்குகளில் எதனையேனும் செய்ய, கணவனுக்கு உரிமையே கிடையாது.

"மாதர்கள் எங்கு மதிக்கப்படுகின்றார்களோ அங்கு தேவர்கள் மகிழ்வு கொள்கின்றனர்; அவர்கள் மதிக்கப் படாதவிடத்தில் புனிதச் சடங்கு எதுவும் பயனற்றுப் போய் விடும்" என்கிறது மனுஸ்மிருதி. இந்துப் பெண்களின் பெருமை அத்தகையது.

கணவன் ஆன்மீகத் துறையில் முன்னேறும் பொழுது, நேர்மாறாக மனைவி சிற்றின்பப் படுகுழியில் அவனைக்கீழே இறக்க முற்படுவாளானால், அந்த வீடு சோகச் சுழலில் சிக்கித் தவிக்கும். நிலைமை மாறுபட்டிருப்பினும் ஆபத்தே. இப்பூலோகத்திலே அது உண்மையான நரக லோகமாகக் காட்சியளிக்கும்.

ஒவ்வொருவரும் இறையுணர்வு பெறும் ஆர்வத்துடன், அவர்களிருவரும் தன்னையறிந்து இன்புறுதலாகிய கயிற்றினால் கட்டுண்டு, மனம் ஒன்றிய நிலையில் இணைந்து வாழ்தல் வேண்டும். அப்போது தான், அவ்வில்லம் உண்மையில் வைகுண்டமாகக் காட்சியளிக்கும். அங்குதான் கணவனும் மனைவியும், திருமாலின் திருநாமத்தைப் பாடிக் கொண்டும், அவனது மந்திரத்தை உச்சரித்துக் கொண்டும், இராமாயணம், பாகவதம் ஆகியவற்றைப் படித்துக் கொண்டும், புலன்களையடக்கிக் கொண்டும், பக்தர்களுக்கும், சந்நியாசிகளுக்கும் சேவை புரிந்து கொண்டும், எடுத்துக் காட்டான தெய்வீக வாழ்வு நடத்தி வருவர்.

துறவு என்பது அகத்துறவே. அது அமைதியை அளிக்க வல்லது. அகத்துறவில் நஷ்டமேதுமில்லை. மேலாம் அழியாத் தன்மையையும், நீங்காப் பேரின்பத்தையும் பெறவேண்டி, நீ நிலையற்ற புலன் வழி இன்பத்தைத் துறக்கிறாய். இதை நினைவில் வைத்துக்கொள்.

பொதுமக்களின் கருத்தைப் பொருட்படுத்தாதே. அவர்களது பேச்சைக் கேட்டு நடவாதே. உன்னிடத்தே மறைந்து இயங்கும் மனச்சாட்சியின் கட்டளைக்கு இணங்கு. ஆன்மாவின் அந்தரங்க சீரிய கூரிய இன் குரலைக் கேட்டு இன்புறும் வண்ணம், துணிவுடனும், மகிழ்வுடனும் சத்தியநெறியில் நடைபோடு.

புறத்துறவு கொள்வதில் அவசரம் ஏதும் வேண்டாம். இவ்வுலகமே உனக்குச் சிறந்த ஆசான். இவ்வுலகத்திலேயே வாழ்வதன் மூலம், உனது இறைத்தன்மையை வெளிப்படுத்திக் கொள். நிவிருத்தி மார்க்கம் என்பது மிகவும் கடினமானது. இந்தத் துறவுப்பாதையில் நூற்றுக்குத் தொண்ணூறு பேர்கள் தவறியுள்ளனர்.

கூடுமானவரை பொருளையும் சேகரித்துக் கொள். உன் இஷ்ட தெய்வத்தை நினைவில் கொண்டு, நாள்தோறும் இருநூறு முறை ஜெபமாலை உருட்டு. சத் சங்கத்தைச் சார்ந்து நில். நல்லாரோடும், சாதுக்களோடும், சந்நியாசிகளோடும் தொடர்புகொள். நோயுற்றவர்களுக்குச் சேவை செய். உன்னிடத்தில் உள்ளதைச் சிறிதளவேனும் ஏழை எளியவர்களுக்குப் பகிர்ந்து கொடு. ஒவ்வொரு வினாடியையும் இலாபகரமாகச் செலவு செய்.

மாதர்கள் அனைவரும் மலர்ச்சியுடன் விழித்தல் வேண்டும்.

மகிழ்ச்சியுடன் உழைப்பதற்கு முன், விடியற் காலையில் படுக்கையைவிட்டு எழுந்தவுடன் பகவந்நாமங்களை, கீர்த்தனங்களை, துதிப்பாடல்களை அவர்கள் பாடுதல் வேண்டும். இதுவே எனது உண்மைப் பிரார்த்தனையுமாகும்.

தமது சின்னஞ்சிறு குழந்தைகளையும் இறைவனது அருட்புகழைப் பாட அவர்கள் பயிற்றுவித்தல் வேண்டும். அப்போது தான் இல்லத்திலே ஆன்மீக அலைகள் பாய்ந்து ததும்பி நிற்கும். தாய்மார்கள் சமையற்கட்டில் பணிபுரியும்போதும், கிணற்றின்று நீர் இறைக்கும்போதும், இறைவனின் திருநாமங்களை மனக்குரலில் பாடவேண்டும். இறைவனின் திருநாமங்களைத் திரும்பத் திரும்ப உச்சரிக்கும் ஆற்றல் மிக்க பழக்கம், இரண்டொரு மாதங்களில் கை கூடும். இறையுணர்வு பெறுவதற்கு இது ஒன்றே போதுமானது.

இக்கலியுகத்திலே, ஆத்ம தரிசனம் பெற இறைவன் நாமங்களைப் பாடுதல் மிக எளியவழியாகும். ஒருவனுக்கு மரணம் நேரிடும் போதும், இறைவன் நாமங்களை பாடும் பழக்கம் கரங்கொடுத்து அவனைக் காத்து நிற்கும்.


ஓ தேவிமார்களே! ஆசை வலையிலும், நவநாகரிகப் பிடிப்பிலும் அகப்பட்டு உங்களது வாழ் நாட்களை வீணுக்காதீர்கள். விழிமின்! எழுமின்! சத்திய நெறியில் பீடு நடை போடுங்கள். பதிவிரதா தர்மத்தைக் காப்பாற்றுங்கள். உங்கள் கணவன்மார்களிடத்து தெய்வத்தன்மையைக் காணுங்கள். கண்ணனின் கீதையையும், உபநிடதங்களையும், இராமாயணத்தையும் படியுங்கள். ஆன்மீகப் பாதையில் உங்கள் குழந்தைகளுக்குப் பயிற்சி கொடுங்கள். அவர்களது இளமைப் பருவத்திலேயே, உள்ளமாகிய விளைநிலத்தில் ஆன்மீக விதைகளைத் தூவுங்கள்.

★

ஆசிரியரும் வெளியிடுபவரும் T. ராமனுதன் 4, தணிகாசலம் செட்டிரோடு, சென்னை-17. அச்சிடுபவர்: கொண்டா. காசி சீதாராமன், ராமன்ஸ் பிரிண்டிங் பிரஸ், 81-5 பாண்டிபஸார், தியாகராயநகர் சென்னை-17.

அருள்

ஸ்ரீ வேதாந்ததேசிகர் சிறப்பிதழ்



ஸ்ரீ வேதாந்த தேசிகர்

திருவஹீந்திரபுரம்


விஜிபி
சுலபத் தவணைத் திட்டம்
விஜிபியில் சகாயமான விலையில் தரமுள்ள பொருள்களை வாங்குவது அனைவருக்கும் திருப்தியளிக்கிறது.
யாவரும் விஜிபி தவணைத் திட்டத்தில் பொருள்கள் வாங்குவது மிகச் சுலபம்.
விஜிபி சுலபத் தவணைத் திட்டம் இப்பொழுது விஜிபி 'மொபைல் விற்பனை வேன்கள்' மூலம் உங்கள் வீடு தேடி வருகிறது.
murphy radio
வி.ஜி. பன்னீர்தாஸ் & கோ.
சைதாப்பேட்டை, சென்னை-15. போன் : 442333
கிளை : தி. நகர், சென்னை-17. போன் : 440246
VGP
தரமிகு பொருள்களின்
சிறப்புமிகு விற்பனையாளர்கள்
NAS-98 TM-A

அருள்

௳

தமிழ்மாதம் முதல்நாள்தோறும் வெளிவருகிறது

அருள் 4] சாதாரண புரட்டாசி (15 - 9 - 70) [கருணை 12

அன்பார்ந்த வாசகர்களுக்கு

இன்றைக்கு எழுநூற்றிரண்டு ஆண்டுகளுக்கு முன்னர், இந்த பாரத மணித்திருநாடு செய்த தவப்பயனாக, நம் தமிழகத்திலே ஓர் ஒப்புயர்வற்ற ஞானஜோதி தோன்றியது.

திருவேங்கடமுடையானின் அம்சம் கலந்து,அப்பெருமானுக்குரிய கண்டாமணியின் திரு அவதாரமாகவே போற்றப்பட்டு, ஸ்ரீவேதாந்த தேசிகன் என்னும் திருநாமத்தோடு விளங்கிய அந்த ஞானஜோதி தோன்றிய நாள் புரட்டாசித் திருவோணமாதலின்;

இந்தப் புரட்டாசி மாத "அருள்" இதழ், "ஸ்ரீவேதாந்த தேசிகன் மலராக" வெளியிடப்படுகிறது.

எனவே, எப்போதும் வழக்கமாக வெளியிடப்படுகிற பல பெரியோர்களின் கட்டுரைகள் இதில்இடம்பெற இயலவில்லையென்பதைப் பணிவுடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

— ஆசிரியர்.

ஆண்டுச் சந்தா	ஆயுள் சந்தா	தனிப் பிரதி
ரூ. 6-00	ரூ. 100	50 காசு

சந்தா அனுப்ப வேண்டிய முகவரி: நிர்வாகி, "அருள்"
4, தணிகாசலம் செட்டி தெரு, தியாகராயநகர், சென்னை-17.

எம்பெருமான் திருவடிகள் அடைகின்றேனே!

ஸ்ரீவேதாந்த தேசிகர் தனியன்

ராமாநுஜ தயாபாத்ரம்
ஜ்ஞாநவைராக்ய பூஷணம்
ஸ்ரீமத்வேங்கடநாதார்யம்
வந்தே வேதாந்த தேசிகம்.

குருபரம்பரையின் தனியன்

லக்ஷ்மீநாத ஸமாரம்பாம்
நாத யாமுந மத்யமாம்
அஸ்மதாசார்ய பர்யந்தாம்
வந்தே குருபரம்பராம்.

இயல்சாத்து

(ஸ்ரீ வேதாந்த தேசிகர் நியமித்து அருளிச் செய்தவை)

1) பொய்கைமுனி பூதத்தார் பேயாழ்வார் தண்
பொருநல்வருங் குருகேசன் விட்டுசித்தன்
துய்யகுல சேகரன்நம் பாணநாதன்
தொண்டரடிப் பொடிமழிசை வந்தசோதி
வையமெலாம் மறைவிளங்க வாள்வேலேந்தும்
மங்கையர்கோன் என்றிவர்கள் மகிழ்ந்துபாடும்
செய்யதமிழ் மாலைகள்நாம் தெளியவோதித்
தெளியாத மறைநிலங்கள் தெளிகின்றோமே!

2) இன்பத்தில் இறைஞ்சுதலில் இசையும்பேற்றில்
இகழாத பல்லுறவில் இராகம் மாற்றில்
தன்பற்றில் வினைவிலக்கில் தகவோக்கத்தில்
தத்துவத்தை உணர்த்துதலில் தன்மையாக்கில்
அன்பர்க்கே அவதரிக்கு மாயன் நிற்க
அருமறைகள் தமிழ்செய்தான் தாளேகொண்டு
துன்பற்ற மதுரகவி தோன்றக்காட்டும்
தொல்வழியே நல்வழிகள் துணிவார்கட்கே!

3) என்னுயிர்தந் தளித்தவரைச் சரணம்புக்கி
யானடைவே யவர்குருக்கள் நிறைவணங்கிப்
பின்னருளால் பெரும்பூதூர் வந்தவள்ளல்
பெரியநம்பி ஆளவந்தார் மணக்கால்நம்பி
நன்னெறியை அவர்க்குரைத்த உய்யக்கொண்டார்
நாதமுனி சடகோபன் சேனைநாதன்
இன்னமுதத் திருமகளென் றிவரை முன்னிட்(டு)
எம்பெருமான் திருவடிகள் அடைகின்றேனே!

4) ஆரண நூல்வழிச் செவ்வைய ழித்திடு மைதுகர்க்கோர்
வாரண மாயவர் வாதக் கதலிகள் மாய்த்தபிரான்
ஏரணி கீர்த்தியி ராமா நுசமுனி யின்னுரைசேர்
சீரணி சிந்தையி னோம்சிந்தி யோமினித் தீவினையே!

5) நீளவந் தின்று விதிவகை யால்நினை வொன்றியநாம்
மீளவந் தின்றும் வினையுடம் பொன்றி விழுந்துழலா(து)
ஆளவந்தாரென வென்றருள் தந்தும் விளங்கியசீர்
ஆளவந் தாரடி யோம்படி யோமினி யல்வழக்கே!

6) காளம் வலம்புரி யன்னநற் காதல் அடியவர்க்குத்
தாளம் வழங்கித் தமிழ்மறை இன்னிசை தந்தவள்ளல்
மூளும் தவநெறி மூட்டிய நாத முனிகழலே
நாளும் தொழுதெழு வோம்நமக் கார்நிகர்
நானிலத்தே!

7) ஆளு மடைக்கலம் என்றெம்மை அம்புயத் தாள்கணவன்
தாளிணை சேர்ந்தெமக் குமவை தந்த தகவுடையார்
மூளும் இருட்கள் விள்ள முயன்றேதிய மூன்றினுள்ளம்
நாளு முகக்கலிங் கேநமக் கோர்விதி வாய்க்கின்றதே!

8) விண்ணவர் வேண்டி விலக்கின்றி மேவும் அடிமையெல்லாம்
மண்ணுலகத்தில் மகிழ்ந்தடை கின்றனர் வண்துவரைக்
கண்ணன டைக்கலம் கொள்ளக் கடன்கள் கழற்றிய நம்
பண்ணம ருந்தமிழ் வேதம் அறிந்த பகவர்களே!

ஸ்ரீ மத் வேதாந்த தேசிகன்

திராவிட வேத போதபாஸ்கர
திருவஹிந்திரபுரம்
ஈ. தே. ஸ்ரீநிவாசாசார்ய
ஸ்வாமி

ஸ்ரீ வைஷ்ணவ ஆசாரியர்களில் ஒப்புயர்வற்றவர். கவி தார்க்கிக சிங்கம், ஸர்வதந்திரஸ்வதந்திரர் என்ற பட்டங்களும்; வேங்கட நாதார்யர், தூப்புல் திருவேங்கடமுடையான், வேங்கடேசதிவ்யகண்டாவதாரர் முதலிய திருநாமங்களும் இவர்க்கு வழங்கும். இவர் அவதரித்த நக்ஷத்திரம் புரட்டாசித் திருவோணம். இவ் வருஷம் *12—10—70* ல் அந்த அவதார தினம் வருகிறது.

பிறந்த குலமும் முன்னோர்களும்.

முத்தி தரும் நகர் ஏழில் முக்கியமாம் கச்சிதன்னில், விளக்கொளி எம்பெருமாள் கோயில் கொண்டுள்ளதிருத்தண்கா என்ற க்ஷேத்திரத்தில், விசுவாமித்திர கோத்திரத்தைச் சேர்ந்த புண்டரீகாக்ஷ ஸோமயாஜி என்ற மஹான் எழுந்தருளியிருந்தார். அவருடைய பரம்பரையின் மூல புருஷர், ஸ்ரீ பாஷ்யகாரரால் ஏற்படுத்தப்பட்ட 74 ஸிம்மாஸனாதிபதிகளில் ஒருவர். அந்த வம்சத்தைச் சேர்ந்தவர்கள் கூடி வாழ்ந்த இடம் தூப்புல் என்ற பெயரால் வழங்கப்படுகிறது. விசுவாமித்திரம் = தூப்புல். விசுவாமித்திரகோத்ரத்தார்—தூப்புல் குலத்தார்.



இக்கட்டுரையின் ஆசிரியர் வித்வான் ஸ்ரீ ஈ. தே. ஸ்ரீநிவாஸாசாரியார் ஸ்வாமிகளும், டி. வி எஸ். நிறுவனங்களின் சேர்மன் ஸ்ரீ டி. எஸ். ராஜம் அவர்களும்.

திருவேங்கடவன் அருளும், திரு அவதாரமும்.

புண்டரீகாக்ஷ ஸோமயாஜியின் திருக் குமாரர் அநந்தஸூரி என்பவர். அவர் கிடாம்பி என்ற வம்சத்திலுதித்த தோதாத்ரியம்பா என்ற பெண்மணியை மணந்து இல்லறம் புரிந்துவரும் நாளில், ஒரு நந்நாளிரவில் திருவேங்கடமுடையான் அவர்கள்கன

வில் தோன்றி, ''நம்மை சேவிப்ப தற்கு வாருங்கள் திருமலைக்கு. உங்களுக்கு விசேஷமான அனுக்கிரகம் பண்ணப்போகிறோம். அந்த அனுக்கிரஹத்தினால் உலகமே வாழப்போகிறது'' என்று சொல்லி மறைந்தார்.

அத்தம்பதிகளும் உள்ளம் மகிழ்ந்து திருப்பதிக்குச் சென்று, திருமலையேறி, திருவேங்கடமுடையானை பிரம்மோத்ஸவத்தில்சேவித்துமகிழ்ந்தார்கள். புரட்டாசித் திருவோணமாகிய தீர்த்தவாரி தினத்தன்று இரவில், வேங்கடவன் ஒரு பாலகனுருவில் தோதாத்ரியம்பாவின் கனவில் எழுந்தருளி, ஒரு கைம் மணியை (தன் கோவில் கைம்மணி) . அவளிடம் கொடுத்து, ''இதை வாயிலிட்டு விழுங்கிவிடு'' என்று கட்டளையிட, அந்தப் பரமனாகிய பாலகனுடைய அழகிலும் தேஜசிலும் கவரப்பட்ட அவள், அப்படியே வாயிலிட்டு விழுங்கினாள்.

மணியையாவது, வாயில் இடவாவது, விழுங்கவாவது என்று இங்கே சிலர் சர்ச்சை செய்யலாம். எல்லாம் திருவேங்கடமுடையான் லீலா விநோதம் என்று கொள்ளவேண்டும்.

தான் கண்ட கனவை அவள் தன் நாயகனிடம் கூறவும்; அவரும் ''பகவதனுக்கிரஹத்தால் ஓர் மகா புருஷன் அவதரிக்கப் போகிறார். மணியின் நாதம் பரமன் ஆராதனத்தில் முக்கியாம்சம். அது போலவே அவதரிக்கப் போகும் மஹானுடைய நாவின் ஒலியும் பரமனுக்கு மிகவும் உகப்பை உண்டாக்கும்'' என



திருவஹீந்திரபுரம் ஹேமாம்புஜவல்லித் தாயார் ஸமேத ஸ்ரீதேவநாதப்பெருமாள்.

அகமகிழ்ந்தார். பின்னர் அத்தம்பதிகள் காஞ்சிக்கு வந்து தம் இருப்பிடம் அடைந்தனர். அதன் பிறகு வந்த விபவவருஷத்தில், புரட்டாசி மீ அதே திருவோண நக்ஷத்திரத்தில் தோதாத்ரியம்பா ஓர் ஆண் மகவை ஈன்ருள்.

பெயரும் வித்யாப்பியாசமும்.

திருவேங்கடத்தான் திருநக்ஷத்தில் அவதரித்தபடியாலும், அவனருளால் அவதரித்தபடியாலும், வேங்கடநாதார்யன் என்று நாமகரணம் செய்தனர். கண்டாவதாரர் என்றும் அழைக்கப்பட்டார். பிற்காலத்தில் ராமானுஜருடைய மதத்தை ஸ்தாபனம் செய்தபடியால், இவர் ராமானுஜருடைய அபராவதாரமோ (மறுபிறவியோ) என்றும் சிலர் கூறினர்.

குழந்தையாக இருக்கும்போதே தம் தாய்மாமனுகிய கிடாம்பி அப்புள்ளார் (ராமானுஜர்) என்ற மகானுடன், நடாதூர் அம்மாள் (வாத்யவரதாசார்யர்) என்ற ஆசார்யனுடைய காலக்ஷேப கோஷ்டிக்குச் சென்ருர். அவரிடம் அப்புள்ளாரைப்போல் இன்னும் பலரும் காலக்ஷேபம் கேட்டுவந்தனர். அந்தக் காலக்ஷேப கோஷ்டி காஞ்சி வரதராஜர் கோயிலில் மலைமேல் பிராகாரத்தில் நடந்ததென்பர்.

தெய்வாம்சம் நிறைந்த வேங்கடநீதார்யனுடைய அழகிலும் தேஜஸிலும் ஈடுபட்டனர்



திருவஹீந்திரபுரம் ஸ்ரீ ராமபிரான்

அங்குள்ளார். அப்போது வரதாசாரியர் (நடாதூர் அம்மாள்) அக்குழந்தையைப்பற்றி கிடாம்பி அப்புள்ளாரிடம் விசாரித்து விட்டு, மறுபடியும் க்ஷேபம் தொடங்க ஆரம்பிக்கும்போது, நிறுத்தியவிடம் தெரியாமல் எல்லோரும் திகைத்து நிற்கையில், அங்கே ஓர் அதிசயம் நிகழ்ந்தது.

மூன்றே வயது நிறைந்த வேங்கடநாதார்யன், தான் அங்கு வரும்போது காலக்ஷேபம் நடந்து கொண்டிருந்தவிடத்தை நினைவு படுத்த, அனைவரும் பெருவியப்பிலாழ்ந்தனர். நடாதூர் அம்மாள் "இவராலேயே வேதாந்தார்த்தம் நிலைபெற்று விளங்கப் போகிறது. புறச் சமயங்களெல்லாம் எறியப்படப் போகின்றன" என்று அனுக்கிரகம் செய்தார். இந்த வரலாறு மேற்படி வரதராஜப் பெருமாள் ஸந்நிதி பிராகாரத்தின் மேல்தளத்தில் சித்திர உருவத்தில் திகழ்வதை இன்றும் காணலாம்.



திருவஹீந்திரபுரத்தில்
ஸ்ரீ வேதாந்த தேசிகன்
திருமாளிகை

உரிய காலத்தில் அக்ஷராப்பியாசம், உபநயனம் முதலியவை செய்யப்பெற்று, அதிபாலியத்திலேயே சகல வித்தைகளையும் கரைகண்டவராக இருந்தார். 20 வயதிற்குள் சகல வித்தைகளையும் கரை கண்டதாக "ஸங்கல்பஸூர்யோதயம்" கூறுகிறது.

திருமணமும், திருவஹீந்திரபுரம் எழுந்தருளலும்.

தனக்கேற்ற ஓர் உத்தமியை இல்லாளாக ஏற்று இல்லறம் நடாத்தத் துவங்கும்போது, தெய்வீகமாக ஓர் எண்ணம் உதயமாயிற்று. தன் மாதுலரும் (தாய் மாமன்) ஆசார்யனுமாகிய கிடாம்பி அப்புள்ளார், வேதாத்மாவாகிய ஸ்ரீ கருடபகவான் விஷயமான ஓர் உத்தம மந்திரத்தை உபதேசித்து, அந்த மந்திரத்தை ஜபித்துக் கருடனுடைய அருளைப் பெறும்படி சொல்லியிருந்தார். அதனால் உலகங்களுக்கெல்லாம் க்ஷேமம் உண்டாகுமென்றும் கூறியிருந்தார். தன் ஆசார்யன் சொற்படி அந்த மந்திரத்தை ஜெபித்துக் கருடனுடைய பூரண அனுக்கிரகத்தைப் பெற விரும்பிய வேங்கட



திருவஹீந்திரபுரம்
ஸ்ரீ ராஜகோபால ஸ்வாமி

நாதார்யர், அந்தக் கருடபகவானுக்கு மிகவும் விருப்பமான திருவஹீந்திரபுரத்திற்கு எழுந்தருளினார். தவத்திற்கு அவசியமான சூழ்நிலை, ஓர் க்ஷேத்திரம், ஓர் மலை,ஓர் புண்ணியநதி, இவைகளுடன் அமைதியாகவும் இருத்தல் அவசியம். இவைகளும் காரணமாகும், வேங்கடநாதன் திருவஹீந்திரபுரத்திற்கு எழுந்தருளியதற்கு.

தவமும், தெய்வானுக்கிரகமும்.

திருவஹீந்திரபுரம் எழுந்தருளிய வேங்கடநாதார்யர்,ஸ்ரீதேவநாதனைத் தொழுது தவத்திற்கு அனுமதி பெற்று, ஔடதாசலம் என்ற அங்குள்ள மலை மீது ஏறியவுடன், நரசிங்கப்பெருமாள் சேவை தர மனம் மகிழ்ந்து, அங்கோர் பெரிய அரசமரத்தின் நிழலில் அமர்ந்து கருடபகவானை நினைத்து ஜபம் செய்ய, வேதாத்மாவான கருடன் பிரத்தியட்சமாகி ஹயக்ரீவ மந்திரத்தை உபதேசித்து, ஓர் ஹயக்ரீவ மூர்த்தியையும் கொடுத்தருளி மறைந்தார்.

கருடன் அருளியபடி ஸ்ரீ ஹயக்ரீவ மந்திரத்தை ஜபிக்கும்போது, பன்னுகலை நால்வேதப் பொருளையெல்லாம் பரிமுகமாய் அருளிய நம் பரமன் எழுந்தருளி, ஸகல கலைகளையும் குறைவற வேங்கடநாதார்யருக்கு அருளினார். அவர் அருளைப் பெற்ற வேங்கடநாதார்யர், சிறிது காலம் சென்றவாறே காஞ்சியை நோக்கிப் புறப்பட்டார்.

அடியவர்க்கு மெய்யன் அருள்.

ஸ்ரீ வேங்கடநாதார்யர் தவம் புரிந்த மலையில், ஸ்ரீ ஹயக்ரீவன் ஸ்ரீ நரஸிம்மன், ஸ்ரீ கருடன் முதலியவர்கள் இன்றும் கோயில் கொண்டுள்ளார்கள். ஸ்ரீ கருடன் அருளிய யோகமூர்த்தியாகிய ஹயக்ரீவன், ஸ்ரீதேவநாதன் ஸந்நிதியில் எழுந்தருளியிருக்கிறார். பிரம்மாவுக்கும் வேதங்களை அருளிய ஹயக்ரீவமூர்த்தியின் அழிவற்ற அருளைப் பெற்ற மகிழ்ச்சியோடு எழுந்தருளும் வேங்கடநாதார்யனை, ஓர் நாளிரவு ஸ்ரீ தேவநாதன் வழி மறித்துத் திரும்பக் கூட்டி வந்து, தன் விஷயமான ஸ்தோத்ராதிகளை அருளிச் செய்யும்படி நியமித்தார். திரும்பி வந்தவுடன் ஸ்ரீ தேவநாயர் பஞ்சாசத் என்ற வடமொழி நூலைப் பாடினார். தன்னை ஸ்ரீதேவநாதன் வழிமறித்துத் திரும்ப அழைத்து வந்ததை அந்த நூலில் பாடியிருக்கிறார். 'விளையாட்டாகவேடுவன் பறவையைப் பிடித்து அதன் காலில் நூலைக் கட்டிப் பறக்கவிட்டு, நூலினளவு பறந்தவுடன் திரும்ப இழுத்துக்கொள்வதைப்போல் அழைத்துக்கொண்டார்'' என்கிறார்.

பிறகு திருக்கோவலூர் வழியாகக் காஞ்சீபுரம் எழுந்தருளினார்.பலக்ஷேத்திரங்களுக்குச்சென்றாலும், அவர் திரும்பத் திரும்பத் திருவஹீந்திரபுரத்திற்கு எழுந்தருளினார் என்றும், தம் ஆயுளான நூற்று மூன்று வயதில் திருவஹீந்திரபுரத்தில் எழுந்தருளியிருந்த காலம் சுமார் 40 வருஷங்களுக்குமேல் இருக்கும் என்றும், ஆராய்ச்சியாளர் கூறுவர்.

காஞ்சீபுரம், திருப்பதி முதலிய க்ஷேத்திரங்களுக்கு எழுந்தருளல்.

தமது ஜென்ம பூமியாகிய காஞ்சீபுரத்திற்கு எழுந்தருளி, ஹஸ்திகிரிமாஹாத்ம்யம்,அடைக்கலப்பத்து முதலிய தமிழ் நூல்களையும், வரதராஜ பஞ்சாசத்

முதலிய வடமொழி நூல்களை யும் அருளினுர்.

அக்காலத்தில் வரதராஜப் பெருமாள் உத்ஸவத்தில், பெருமாளுக்கு முன்ஞல் ஆழ்வார்களுடைய அருளிச் செயல்களாகிய திவ்வியப் பிரபந்தங்களைச் சொல்லிக்கொண்டு போதல் கூடாது என்று பல சாதாரண மனிதர்கள் தடுக்க, அப்போது வேங்கடநாதார்யர் அவர்களுடன் வாதம் புரிந்து, திவ்வியப்பிரபந்தங்களைப் பெருமாள் புறப்பாட்டில் முன்ஞல் சேவிப்பது சாஸ்திரஸம்மதம் என்று நிலைநாட்டினுர். அதனுல் மனம் மகிழ்ந்த தேவப் பெருமாள் (வரதராஜன்) தம் திருச்சின்னத்தை ஒலித்து, அவருக்கு அருளப்பாடு மரியாதை செய்தார் என்பது குருபரம்பரை. அங்கிருந்து திருமலைக்கு எழுந்தருளி ஸ்ரீநிவாசனை சேவித்து, அப்பெருமாளுடைய தயையைப்பற்றி தயாசதகம் என்று நூறு சுலோகங்களைப் பாடினுர்.

ரங்கநாதன் அருள்புரிதல்

அக்காலத்தில் இதர மதங்களைச் சேர்ந்த வித்வான்கள் பலர் ஸ்ரீரங்கத்தில் கூடி, ராமானுஜருடைய மதத்தில் குற்றங்களைக் கூறி, "அக்குற்றங்களை இல்லையென்று நிரூபித்தாலன்றி நாங்கள் பூஜையை நடத்த விடோம்" என்றனர்.

அப்போது, ரங்கநாதன் அனுக்கிரகம் புரிந்தவாறே, அங்குள்ள வேங்கடநாதார்யரை அழைத்தனர்.

அரங்கன் கட்டளையையும் அரங்கத்து அடியவர் நியமனத்தையும் சிரமேல் தாங்கியவேங்கடநாதர் அரங்கத்திற்கெழுந்தருளி, ராமானுஜர் ஸ்தாபனம் செய்த விசிஷ்டாத்வைதம் சாஸ்திர ஸம்மதமானது என்று ஸ்தாபித்தார். மனமகிழ்ந்த அரங்கன் உபய வேதாந்தாசார்யர் என்றும், ஸ்ரீரங்கநாயகித் தாயார் ஸர்வதந்திரஸ்வதந்திரர் என்றும் விருதுகள் வழங்கினர். வேதாந்தாசார்யர் என்ற விருதே வேதாந்த தேசிகர் எனவும் நிகமாந்தமஹாதேசிகன் என்றும் வழங்கலாயிற்று. அவர் அறியாத கலை எதுவும் உலகிலில்லை என்பதைக் காட்டுவது ஸர்வ தந்திர ஸ்வதந்திரர் என்றவிருது.

செல்வப் பிள்ளையின் அருள்

திருநாராயண புரத்திற்கு எழுந்தருளி மங்களா சாஸனம் செய்து, அங்கே பகவத்விஷயம் (திருவாய்மொழி வியாக்கியானம்) காலக்ஷேபம் சொல்லிய போது, சிஷ்யர்கள் உகந்து போற்றியதன்றிச் செல்லப் பிள்ளையாகிய பெருமாளும் மிக வுகந்து, "நீரே ராமானுஜ தயா பாத்திரர்" என்று கூறியருளினுர். ராமானுஜருடைய மதத்தை நன்ருக ஸ்தாபித்ததனுல், அவருடைய தயைக்கு வேதாந்தாசார்யரே பூரண பாத்ரர் என்பது அப்பெருமாள் திருவுள்ளம். ராமானுஜ தயாபாத்திரம் என்ற தனியன் அதையொட்டியே பிறந்தது.

ஹயக்ரீவன் திருவிளையாடல்

அக்காலத்தில் ஸ்ரீரங்கத்தில் அன்னியர் பலர் கூடி ஓர் சர்ச்சையைக் கிளப்பினுர்கள். ஆழ்வார் ஆசார்யர்களுடைய பிம்பங்களைக் கோயிலில் வைத்து ஆராதிப்பதும், அவர்களுடைய பிரபந்தங்களைக் கோயிலில் ஓதுவதும் கூடாது என்பதே அந்த சர்ச்சையின் நோக்கமும் கருத்தும்.

அதனால் வழக்கமாக நடக்கும் அத்யயனோத்ஸவமும் தடைப்பட்டது. அதைக் கேட்டு ஸ்ரீ தேசிகன் மேல்நாட்டிலிருந்து விரைந்து ஸ்ரீரங்கம் நோக்கிவருகையில், வழியில் ஆகாரத்திற்கு வசதியில்லாத ஓர் ஊரில் ஸ்ரீ ஹயக்ரீவனுக்கு ஆராதனம் செய்து, தீர்த்தத்தை மாத்திரம் நிவேதனம் செய்து கண்வளர்ந்தருள, இரவில் ஹயக்ரீவன் ஓர் குதிரை வடிவு கொண்டு அங்குள்ள வியாபாரியின் மண்டியிலுள்ள கடலை, மொச்சைப் பொதிகளைக் கடித்து ஆர்ப்பாட்டம் செய்ய, அவ்வணிகனுடைய முறையீட்டைக் கேட்ட ஸ்ரீதேசிகன் அது ஹயக்ரீவன் திருவிளையாடல் என்று உணர்ந்து அவரைத் தியானித்து சாந்தமாகும்படி செய்து அவ்வூரைவிட்டு எழுந்தருளினார். பொழுது விடிந்தபிறகு தன் மண்டியைப் பார்த்த வணிகன், குதிரைவாய்வைத்த இடங்களில் நவரத்தினமும், குளம்பு வைத்த இடங்களில் பொன்னும் கிடக்கக் கண்டான்.

ஸ்ரீ தேசிகனும் ஸ்ரீரங்கம் எழுந்தருளி ஸ்ரீ அரங்கன் உத்ஸவத்தை நடத்தி வைத்ததுடன், ''ஆழ்வார்கள், ஆசார்யர்கள் ஆகியவர்களை வைத்துப் பூசித்தல் வேத முறையே! அவர்களுடைய அருளிச் செயல்களை ஓதுவதும் சாத்திர முறையே!'' என்று ஸ்தாபித்தார். அப்போது மனம் மகிழ்ந்த அரங்கன், அருளிச் செயல்களை ஓதும் காலங்களில் வேதாந்தாச்சாரியரின் தனியனுடன் ஓத வேண்டுமென்று நியமித்தார் என்று பண்டைய நூல்கள் கூறும்.

அருளிச் செய்த நூல்கள்

ஸ்ரீ ஸ்வாமி தேசிகன் நூற்றிற்கும் மேற்பட்ட அரிய பலநூல்களை இயற்றியிருக்கிறார். தமிழ், வடமொழி, ப்ராக்ருதம், வடமொழியும் தென்மொழியும் கலந்த மணிப் பிரவாளம், இப்படி எத்தனை எத்தனையோ நூல்கள். ராமானுஜர் மதத்தின் உயர்வை எடுத்தியம்புவதுடன், வேதவைதிக சமயங்களுக்குப் புறம்பான மதங்களில் உள்ள கஷ்டங்களையும் எடுத்துக்காட்டுகிறார் பரமதபங்கம் என்றநூலில். ஸ்ரீமந் நாராயணன் பெருமை, மஹாலக்ஷ்மியின் மகிமை, ஆழ்வார்களின் உயர்வு, அவர்களுடைய அருளிச் செயல்களின் பெருமை, சரணாகதியின் பெருமையும் அவசியமும், இவை முதலியவை இவர் நூல்களில் ஆங்காங்கே பிரகாசிப்பதைக் காணலாம்.

ஆழ்வார்களைப்போல் அனுபவம்

பக்தி விஞ்சியபோது அது சிருங்காரமாகப் பரிணாமமடையும் என்பது ஆன்றோர்கொள்கை. அப்படியே தம் பக்திமேலீட்டினால் ஆழ்வார்கள் தம்மை நாயகியாகவும், பரமனை நாயகனாகவும் பாவித்துப் பாடியிருக்கிறார்கள். அவ்வழியில் ஸ்ரீ தேசிகனும் அடியவர்க்கு மெய்யனாகிய தெய்வ நாயகனிடம் தெய்வீகக் காதல் கொண்டு, மும்மணிக் கோவை என்ற தமிழ் நூலையும், அச்சுத சதகம் என்ற பிராக்ருத (பெண் மணிகளின் மொழி) நூலையும் அருளிச் செய்திருக்கிறார். அவருடைய நூல்கள் மிகவும் பொருளாழமுடையவை. அவைகளை வருணிக்க முயன்றால் அதுவே ஒரு பெரிய நூலாகும். அவைகளில் பல மந்திரசக்தி வாய்ந்தவை.

செய்தருளிய அதிசயங்கள்

ஸர்வ தந்திரஸ்வதந்திரர் என்ற பிருதை ஆட்சேபித்துப் பலரும் அவரிடம் வாது பேசியதுண்டு.

சிலர் அவருடைய தொழில் திட்பத்தைப்பரிசோதித்ததும் உண்டு. அவைகளில் சிலவற்றைக் காண்போம்.

அரங்கத்தில் உள்ளவர்கள் ஒரு சமயத்தில் ஏற்படுத்திய போட்டியில், ஒரே நாளில் ஒரே யாமத்தில் (3 மணி நேரம்) பாதுகாஸஹஸ்ரம் என்ற 1000 சுலோகங்களடங்கிய நூலைப் பாடினார்.

காஞ்சியில் ஒரு மாந்த்ரீகன் குளத்தில் தான் தண்ணீரைக் குடித்து ஸ்ரீ தேசிகனுடைய வயிற்றை உப்பச் செய்தான். தம் அபூர்வசக்தியால் அந்நீரை அருகிலுள்ள தூணிலிருந்து வெளிவரச் செய்தார் அவர்.

ஓர் பாம்பாட்டி பல்பெரிய நாகங்களை ஏவிவிட்டுக் கடிக்கச் செய்தான். ஸ்ரீதேசிகன் அப்பாம்புகள் தம்மை நெருங்காமல் தடைகட்டியதுடன், தடைக்கும் அடங்காத நாகத்தைக் கருடனை அழைத்து எடுத்துப் போகும்படி செய்தார்.

பரம ஏழையாகியஇவரை நாடி வந்தான் ஓர் பிரமசாரி, கலியாணத்திற்குப் பொருள் வேண்டும் என்று. அப்படிஇவரிடம் கேட்கும்படி சிலவிஷமிகள் கூடி அனுப்பி வைத்தனர். இவர் அவர்களிடம் கோபிக்காமல் ஸ்ரீமஹாலக்ஷ்மியைப் பிரார்த்தித்து, அந்த பிரம்மசாரிக்காகப் பொன்மழை பெய்யும்படி செய்தார்.

மாலிக் ஆபூரின் படையெடுப்பினால் அரங்கத்தை விட்டு வெளியேறிய ரங்கனுதரை, தம் சிடனுகிய செஞ்சி சிற்றரசனும் கொப்பணார்யனைக் கொண்டு மறுபடியும் அரங்கத்தில் கொணர்ந்து பிரதிஷ்டை செய்வித்தாரென்று கல்வெட்டுக்கள்கூறும். திருவஹீந்திரபுரத்தில் ஒரு கொத்தன் அவரிடம் வந்து வாது செய்ய, அவன் விரும்பியபடி ஒரு கிணறும் கட்டியிருக்கிறுர்.

ஒரு சில்பி வாதுக்கு வந்து, "உம்மைப் போல் ஓர் விக்கிரகம் செய்வீரா?" என்று கேட்க, அரங்கன் நியமனம் பெற்று அப்படியே தம்மைப்போல் ஓர் விக்கிரஹம் செய்து காட்டினர்.

அந்த ஸ்ரீதேசிகனுடைய மூர்த்தியையும், அவர் கட்டிய கிணற்றையும், அவர் வாழ்ந்த திருமாளிகையையும் திருவஹீந்திரபுரத்தில் இன்றும் காணலாம்.

உயர்ந்த குணங்கள்

இவரோடு இளமையில் கல்வி கற்ற வித்யாரண்யர், இவரை விஜயநகர ஸமஸ்தானத்தில் மந்திரியாக வேலை ஏற்கும்படி நிர்ப்பந்தித்தார். அவருக்கு அந்த ஸமஸ்தானத்தில் நல்ல செல்வாக்கு இருந்தது.

ஸ்ரீதேசிகன் அந்த வாய்ப்பை ஏற்கவில்லை. பொன்னையும் தூசியையும் ஒன்றுக மதித்தார்.

ஒரு சமயம் இவர் தகப்பனரின் சிராத்தத்தில் வேறு ஸ்வாமிகள் கிடைக்காமையால். இவர் வேண்டுகோளுக்கிணங்கி ஸ்ரீ ஹயக்ரீவரே பித்ருக்கள் ஸ்தானத்தில் எழுந்தருளி உண்டு மகிழ்ந்தார்.

அறியாத சிலர் இவர் தலையில் படும்படி பாதரக்ஷையைக் கட்டித் தொங்கவிட்டனராம். அதைக் கண்ட இவர் "பாகவதோத்தமர்களின் பாதரட்சையே நமக்கு மேன்மையைத் தேடித்தரும் என்பதை எவ்வளவு அழகாகக் காட்டி விட்டார்கள்!" என்றுராம்.

இவர் பெருமையையறியாமல் அபசாரப்பட்டதனுல் வந்த வியாதியை, இவருடைய ஸ்ரீ பாததீர்த்


தத்தை உட்கொண்டே தீர்த்துக் கொண்டவரும் உண்டு.

இவருடைய நூல்களில் பெரும் புலவர்களுக்கும் விளங்காத அர்த்த கம்பீரமுள்ளவைசில. அறியாப் பிள்ளைகளுக்கும் விளங்குவன சில. வாழ்வில் அனைத்தையும் அடைந்து மோட்சத்தையும் அடைந்து வாழ, அவருடைய நூல்களில் ஏதாவதொன்றே போதுமே என்றருளிச் செய்தார் பிள்ளை லோகாசார்யர்.

ரஹஸ்யத்ரயஸாரமென்பது அவரது நூல்களில் மிகச் சிறந்தது. ராமானுஜருடைய மதத்திற்கு இவர் பேரரணைச் செய்தவர் என்பர்.

இவருடைய குமாரராகிய வரதாசாரியர் (இவரை நயினாராசாரியர் என்றழைப்பர்) மிகுந்த புலமை வாய்ந்தவர். பிரம்ம தந்த்ர ஸ்வதந்திரர் என்பவர் இவரது சீடர்களில் முக்கியமானவர். ஸங்கல்ப ஸூர்யோதயம் என்ற இவருடைய நாடகம் உலகப் பிரசித்தி பெற்றது. யாதவாப்யுதயம் என்ற வடமொழிக் காவியம், அப்பையதீக்ஷிதர் என்ற மாபெரும் புலவரால் கொண்டாடப்பட்டு உரை வகுக்கப்பெற்றது. இவரது தமிழ்ப் பாட்டுக்களை இராமலிங்க சுவாமிகள் (வடலூர் அருட்பெருஞ் சோதி) போற்றியிருக்கிறார். மாபெரும் சரித்திரம் மிக மிகச் சுருங்கிய முறையில் இங்கு எழுதப்பட்டிருக்கிறது. வாசகநேயர்கள் மன்னிக்கவும்.

ஸ்ரீ தேசிக ஸ்தோத்ர கீர்த்தனை



குரேரு
வே. வேங்கடேச அய்யர்

ராகம்: ஆரபி தாளம்: ஆதி

பல்லவி

ஸாதிஞ்சனே ஸ்ரீஸ்வாமி தேசிகடு (ஸா)

அநுபல்லவி

வேடினவாரிகி கோரின வரமுலு
லோகக்ஷேமார்த்தம் ஸ்தோத்ரபாடமுலனு (ஸா)

சரணங்கள்

ஞானமுகலக ஹயக்ரீவஸ்துதி கீர்த்திகல்க தசாவதாரமு
பீதிபோகொட்ட அபீதிஸ்தவம் க்ருபபொந்துடகு தயாசதகமனி (ஸா)

ஸொம்முலுகலகனு ஸ்ரீஸ்துதி பூஸ்துதி விஷபயம்போனு கருடதண்டகம்
கோரிக பூர்த்திம்ப தேஹளீசஸ்துதி ச்ரமமுதீரஷோடசாயுத ஸ்துதி (ஸா)

அஷ்டபுஜாஷ்டகம் ஸுதர்சநாஷ்டகம் பரமார்த்தஸ்துதி ரகுவீரகத்யம்
அச்யுதசதகம் யதிராஜஸப்ததி வேகாஸேது கருட பஞ்சாசத் (ஸா)

பகவத்யானசோபானம் வரதராஜபஞ்சாசத்
வைராக்யபஞ்சகம் சரணுகதிதீபிகா
காமாஸிகாஷ்டகம் கோபாலவிம்சதி கோதாஸ்துதி ந்யாஸதசகம்
ஸ்ரீ தேவநாதபஞ்சாசத் ந்யாஸவிம்சதி ந்யாஸதிலகமநி (ஸா)

— Courtesy, LIFCO, Madras-17.

அருள் தரும் ஆரண தேசிகன்



ஸகலகலாவாசஸ்பதி

கே. வி. ஸந்தான கோபாலாசார்ய ஸ்வாமி

"அருள்தரும் ஆரணதேசிகனே!
எங்கள் தூப்புல் தேவே!
வருகவி தார்க்கிக சிங்கமே!
வாதியர் வாழ்வறுத்தாய்!
இருகையுங் கூப்பி யுரைக்கும்
இவ்விண்ணப்பம் ஒன்றுகேளாய்
உருவவெனக் கருளாய் எண்ணு
முள்ள முன் தொண்டரையே!"

[நயினாராச்சார்யார் அருளிய பிள்ளையந்தாதி-18]

ஸ்ரீ ஸ்வாமியின் திருக்குமாரர் அருளியபடியே, இந்தப் புரட்டாசித் திருவோணத்தில் அவதரித்த நம் ஸ்வாமி "அருள் தரும் ஆரண தேசிகனை" இந்தமாத அருள் மூலமாகச்சிறிது அனுபவிப்போம். இதுவும் அம்மகானின் அருளே.

கலியில் வைதிக மார்க்கம் நிலை குலைந்து, மகரிஷிகளின் அருள் வாக்குகளான புராண இதிகாசங்கள், ஸ்மிருதிகள் எல்லாம் நலிவுற்று, நாஸ்திக்யம் விருத்தியடைந்தகாலத்தில், திருவேங்கடமுடையானுடைய அம்சம்கலந்து, அப்பெருமானின் திருமணியே ஸ்வாமி வேதாந்த தேசிகனாக, காஞ்சியில் தூப்புல் அக்ரஹாரத்தில் ஸ்ரீ அனந்த சூரி, தோதாரம்மை என்ற தம்பதிகளுக்குத் திருக்குமாரராக அவதரித்தது.

இவ்விஷயத்தை, முன்னோர்கள் சோளசிங்கபுரம் தோட்டையாசார்யஸ்வாமிகள், "இந்ததர்சனபி விருத்திதான் விரோதிநிரசந பூர்வகமாக வேணும் என்று பார்த்து, அதுதான் நாவுடையாராலே ஆகவேணும் என்று அறுதியிட்டு" என்று வைபவ ப்ரகாசிகையில் அருளிச்செய்தார்.

மணிக்குத்தான் நாக்கு உண்டாகையால், நாவுடையவர் தானே ஆஸ்திகமத விரோதிகளை நிரஸனம் செய்யமுடியும் என்று, திருமணியின் அவதாரமாக ஆரணதேசிகன் அவதரித்தார்.

நாம் எம்பெருமானை சுலபமான வழியில் அடைய, அவன் அருளைப்

பெற, சரணுகதியே சுலபமான மார்க்கம் என்ற ப்ரபத்தி சாஸ்திரத்தைப் பன்னிரு ஆழ்வார்கள் அவதரித்து அருளிச் செய்தனர். இந்தப் பன்னிரு ஆழ்வார்கள், பன்னிரு மாதங்களில் மாதத்திற்கு ஒருவராய் அவதரிக்காமல், பங்குனி, ஆவணி, புரட்டாசி மாதங்களை ஆசார்யர்களுக்காக ஒதுக்கிவிட்டு, மிகுந்த ஒன்பது மாதங்களில் பன்னிருவர்கள் அவதரித்தனர். இதில் பங்குனி மாதம் நம்ஜீயர் ஸ்வாமியும், ஆவணியில் கீதாசார்யனை கண்ணனும், புரட்டாசியில் வேதாந்தாசார்யனும் அவதரித்தனர். [சிங்கமாதத்தில் தேவகீ சிங்கமும், புரட்டாசியில் கவி தார்க்கிக சிங்கமும் தோன்றின.]

27 நக்ஷத்ரங்களில் திருக்கலந்த நக்ஷத்ரம் இரண்டுதான். ஒன்று ஓணம்; ஒன்று ஆதிரை. இதில் ஆதிரை ஸ்ரீராமாநுஜனை அளித்து திருவாதிரையாகவும், ஓணம் ராமாநுஜ சம்ப்ரதாயம் தழைத்து ஓங்க ஸ்வாமி அருள்தரும் ஆரண தேசிகனை-தூப்புல் குலமணியை அளித்தருளித் திருவோணமாகவும் பொலிவு தருகின்றன.

பகவத் கைங்கர்யம் என்பது தான் திரு. "திருத்தக்க செல்வம் பெற்று", எங்கும் திருவருள் பெற்று, இன்புற்று வாழ்வுபெறும்படி ஆண்டாள் அனுகிரகித்தபடி திருவருள் பெறவேணும்.

திரு என்பதுசம்பத்து. சம்பத்து என்பது, "நீங்காத செல்வம் நிறைந்து" என்றபடி, எம்பெருமானுக்குச் சொந்தமான இந்த ஆத்மவஸ்துவை அவனிடம்சரணுகதி செய்து ஒப்புவிப்பதே, அழிவில்லா ஐச்வர்யம்.

எம்பெருமானுக்கும் நமக்கும் பதிபத்னி சம்பந்தம். எம்பெருமானுக்குப் பத்னியான இந்த ஆத்ம வஸ்துவைப் பதியிடம் ஒப்புவித்து அவனுடன் கூடி வாழ்வதே, குடும்ப ஸ்த்ரீயான பதிவ்ரதா தர்மம்! இப்படி அவனுக்கு ஒப்புவிக்காமல் நாம் பிரிந்து வாழ்வது பற்றி "வாழா வெட்டி" என்று முன்னோர்கள் குறிப்பிடுகிறார்கள்.

வாழாவெட்டியாக வாழ்வது ஏச்சுக்கு இடமல்லவா? இதை உபநிஷத் குறிப்பிடுகிறது.

"இஹசேதவேதித்அதஸத்யமஸ்தி
நசேதிஹாவேதித் மஹதி
விநஷ்டி:"

எம்பெருமானை அடையாமல் இருப்பது ஆத்மாவுக்குப் பெரும் நஷ்டம் என்கிறது உபநிஷத்!

இப்படி எம்பெருமானை அடையாமல் தடுப்பவை மூன்றுவியாதி. (1) தேஹாத்மப்ரமம்; அதாவது, தேஹமேஆத்மா என்று நினைத்து, ஆத்மா வேறு என்று அறியாமை; [2] ஸ்வதந்த்ராத்ம ப்ரமம்; அதாவது, ஆத்மா வேறு என்ற ஞானமிருந்தும், அதை ஸ்வதந்த்ரமுள்ளதாக நினைப்பது; [3] அந்யசேஷத்வம்; அதாவது, ஆத்மா ஸ்வதந்த்ரமல்ல, பிறருக்கு அடிமைப்பட்டது என்ற எண்ணமிருந்தும், அதை ஸர்வஸ்மாத்பரனை, ஆத்மாவுக்கு உடையவனை, எம்பெருமான் ஸ்ரீமந் நாராயணனுக்கு அடிமைப்படுத்தாமல், வேறு தேவதாந்தரங்களுக்கு அடிமைப்படுத்துவது.

இம்மூன்று வியாதிகளில் ஒவ்வொன்றைக் காட்டிலும் ஒவ்வொன்று மிகவும் பலிஷ்டமானது. இம்மூன்றையும் தவிர்த்தால்தான் எம்பெருமானுடைய திருவருளுக்கு விஷயமாகலாம்.

ஏற்கனவே, இந்த ஆத்ம வஸ்துவென்னும் உயர்ந்த ரத்தினத்துக்கு உடையவனை எம்பெரு

மான், இந்தசாஸ்திரார்த்தங்களை லோகங்களுக்கு வேத வேதாந்த ரூபமாகபிரம்மதேவன்தொடங்கி உலகுக்கு உபதேசித்து, தான் திருமலைக்கு (Hill Station-க்கு) எழுந்தருளிவிட்டான். ஆனால் உலகு திருந்தாமல் மேற்படி உபதேசங்களை மறந்து, கீழ்ச் சொன்ன மூன்று வியாதிகளால் பீடிக்கப்பட்டு அழியும்சமயத்தில், உடனே திருவேங்கடமுடையான் தானே மறுபடி இவ்வியாதியைப் போக்கி உலகை உஜ்ஜீவிக்கச் செய்ய, தன் மணி ரூபமாகத் தானே திருவேங்கடநாதன் என்னும் குருவாய் (வேதாந்த தேசிகனாக), இத்திருவோணத்தில் அவதரித்து உலகத்தின் இவ் வியாதியைப் போக்கினான் என்று, பிள்ளையந்தாதிப் பாசுரத்தில் அனுபவிக்கிறார் நயினாராச்சாரியார் ஸ்வாமி:

"அன்றிவ் வுலகினை யாக்கி
அரும்பொருள் நூல் விரித்து,
நின்று தன்னீள் புகழ் வேங்கட
மாமலை மேவியும் பின்,



திருவஹீந்திரபுரம் ஸ்ரீ தேசிகன் ரத்ன கவசத்துடன், ஸ்ரீமத் ஆண்டவன் ஸ்வாமிகளும், தேசிகன் எழுநூறும் ஆண்டு விழாக் கமிட்டியின் தலைவர் ஸ்ரீ டி. எஸ். ராஜம் (டி. வி. எஸ். நிறுவனங்களின் சேர்மன்) அவர்களும்.

வென்றி புகழ்த்திருவேங்கட
நாதனெனுங் குருவாய்,
நின்று நிகழ்ந்து மண்மேனின்ற
நோய்கள் தவிர்த்தனனே!''

திருவேங்கடநாதன் என்பது தான் இவரது திருநாமம். "வேதாந்த தேசிகன்", "கவி தார்க்கிக சிங்கம்", "ஸர்வதந்த்ர ஸ்வதந்தரர்" இவைகள் எல்லாம் பிருதங்கள்.

இப்படி எம்பெருமானின் திருவடிகளைச் சரணாகதி செய்துஆத்மவஸ்துவை ஒப்புவித்து, அவன் திருவருளைப் பெற்று, ஆத்மோஜ்ஜீவனம் பெற எந்த இனத்தாருக்கும் உரிமை உண்டு. இந்த சரணாகதி சாஸ்திரம் சர்வாதிகாரம்.

"அந்தணரந்தியர் எல்லையில்
நின்ற அனைத்துலகும்
நொந்தவரே முதலாக
நுடங்கிய நற்றுயராய்"

என்று பரந்த மனப்பான்மையுடனும், இந்த சரணாகதி மார்க்கமே "கண்டாபதம்" என்று "நந்வேஷ கண்டாபத:" என்றும் "கண்டாமார்க்கம்" என்றும் கண்டாவதாரமான ஸ்வாமி அருளிச் செய்து பலநூல்கள் இயற்றியுள்ளது யாவரும் அறிந்ததே. மிக விரிவுக் கஞ்சி, இவ்வியாஸத்தை இத்துடன் முடிக்கிறேன்.

இப்படி இந்த ஆத்மாவுக்கு நீங்காத செல்வமென்னும் சம்பத்தை, பகவானுக்கு பத்தினியாக இருந்து நாம் பெற்றுப் பதியை அனுபவித்து உஜ்ஜீவிக்க, "ஸ்த்ரீ ப்ராயமிதரத்ஸர்வம்" என்று, பகவான் ஒருவன் தான் புருஷனவான்—மற்ற ஜீவர்கள் எல்லாம் ஸ்திரீ ப்ராயம் என்னும் படி, ஒரு ஸ்த்ரீயின் ரக்ஷணபாரம் புருஷனுக்கு அதீனம்—ஸ்வந்திரமாக அவளால் ஜீவிக்க முடியாது என்னும் கருத்தை வலியுறுத்தி உபதேசிக்கவே, பெண்ணாக இருந்து ஆத்மசம்பத்து என்னும் திருவருளைப்பெறவேண்டும் என்பதற்காகவே, இந்தக் கன்னி (பெண்) மாதத்தில் திருவோணத்தில் அவதரித்து, எம்பெருமானுடைய திருவருளை சுலபமாகப் பெற வழிவகுத்து அருளிய அருள் தரும் ஆரண தேசிகனை வணங்கி, நாமும் இந்தக் "கன்னி" (த்திருவோண) 'அருள்' பத்திரிகைமூலம் பெற்று, இப்பேர்ப்பட்ட உயர்ந்த அருளை உலகம் பெறவேணும் என்பதற்காகவே பிரதிமாதம் வெளிவரும்இந்த "அருள்"பத்திரிகைக்கு விசேஷமாக நாமும் ஆதரவு தந்து உஜ்ஜீவிப்போமாக.

அருள் தரும் ஆரண தேசிகன் திருவடிகளே சரணம்.

★

புரட்டாசித் திருவோணம்



ஸ்ரீ அஹோபிலமட்டம்
ஆஸ்தான வித்வான்
வித்வதுபந்யாஸக ரத்நம்

பி. எம்.
சக்ரவர்த்தி

ஆண்டு தோறும் புரட்டாசித் திருவோணம் வந்தவாறே, ஸ்ரீ வைஷ்ணவ மக்களுடையமனத்தில் மகிழ்ச்சி வெள்ளம் பெருகுகின்றது. உடலில் குளிர்ச்சி உண்டாகிறது. உள்ளம் பூரிக்கிறது, அறிவு மலர் மலருகிறது. ஸ்ரீவைஷ்ணவ மக்களுக்கு மாத்திரம் என்பது ஏன்? உலக மக்கள் அனைவருக்குமே என்று சொல்லலாம். ஏன்? வேதாந்த ஆசிரியர் என்னும் ஓர் ஆசார்ய ரத்னம், இந்நிலவுலகில் அன்று அவதரித்ததுதான் காரணம். இவ்வாசிரியர், உலகில் உள்ள மக்கள் உஜ்ஜீவிக்கும் வழியை எடுத்துக் காட்டியவர். தென்மொழியிலும் வடமொழியிலும் பல நூல்களை இயற்றியவர்.

திருவேங்கடமுடையானது மணியின் அவதாரமான ஓர் ஆசார்ய மணி இவர். இவரை ஓர் அவதார புருஷன் என்றே சொல்லலாம். வித்யா ஸமுத்ரம். வேதாந்தங்களை நன்குகற்றுப் பலருக்கு பன்முறை உபதேசம் செய்தவர். பொருள்களில் தான் ஆசையற்றவராய் இருந்தபோதிலும், ஏழைகளுக்குத் தனது தெய்வீக சக்தியால் லக்குமியை துதி செய்து பணத்தைக் கொடுத்து உதவி செய்தவர்.

ஸ்ரீவைஷ்ணவ மதத்தைப் பல முகத்தாலே நிலை நிறுத்தியவர். கோயில், திருமலை முதலிய திவ்ய தேசங்களிலுள்ள எம்பெருமானின் அருளுக்கு இலக்கானவர். ஒரே இரவில் ஸ்ரீரங்கநாதனுடைய பாதுகையின் பெருமையை ஆயிரம் சுலோகங்களாலே வெளியிட்டவர். ஆசுகவி, மதுரகவி, சித்ரகவி, விஸ்தாரகவி என்ற நான்கு கவிகளையும் பாடும் திறமை பெற்றவர்.

மறை உரைக்கும் பொருளெல்லாம் மெய் என்று ஸ்தாபித்தவர். பகவத் ராமானுஜ முனி என்று உலகில் ப்ரசித்தி பெற்ற மாமுனியின்வழியைப்பின் பற்றியவர். எளிய வாழ்க்கையைக் கைக்கொண்டவர். ஆடம்பர வாழ்க்கையை வெறுத்தவர். பிறருக்குத் தனது தெய்வ சக்தியால் பொருள்களைக் கொடுத்து உதவி செய்யும் திறமையைப் பெற்றும், தான் உஞ்சவிருத்தி செய்து காலத்தைக் கழித்தவர்.


காஞ்சிமண்டலத்திலுள்ள தூப்புல் என்னும் திவ்ய தேசத்தில் பிறந்தவர். "வேறு இந்திரனோடு கூடிய புவனத்தைப் படைப்பேன்!" என்று சொன்ன விஸ்வாமித்திர முனிவரின் குலத்தில் பிறந்தவர். நல்லார்க்கும், பொல்லார்க்கும் நல்லருள் கூட்டும் வழியைக் காட்டியவர். நாஸ்திகர் என்னும் மதமடைந்த யானைகளுக்கு ஒப்பற்ற சிங்கமாவர். பலவிதமான வேதங்களிலும், பல சாஸ்திரங்களிலும் பயிற்சியை

யும் அறிவையும் பெற்று, வேத விருத்த மதங்களை வேரோடு அறுத்த மஹா புருஷர். வெள்ளைப் பரிமுகரின் பரிபூர்ண அனுக்ரஹத்தைப் பெற்ற புனிதர். சிற்ப சாஸ்திரங்களில் கைதேர்ந்தவர். எல்லாக் கலைகளிலுமே நிகரற்றவர். இவர் தனது கைகளாலேயே கட்டிய கிணறு ஒன்று இன்னும் காட்சியளிக்கின்றது.

கருட மந்திரத்தில் சித்தி பெற்றவர். பெரும் பாம்பாட்டியை வென்றவர். பல மாயாவிகளை ஜயித்தவர். பாகவதர்களின் பாதுகையே தமக்கு உத்தாரகம் என்று நினைவு பூண்டவர். தனது வாழ்நாட்களில் பல அதிசய வேலைகளை நடத்தியவர். இப்படி உயர்ந்த ஆசார்ய வள்ளலைத் தவிர, சிறந்த ஆசார்யர் யாருமே இல்லை. இவரது நூல்களுக்கு மேற்பட்ட நூல்களும் இல்லை. ஆழ்வார்களுடைய அருளிச் செயல்களில் மிகப் பற்றுடன் தமிழ்க் கவிகளைப் பாடி உலகுக்கு நன்மையை உண்டாக்கியவர்.

இவரையே வணங்குவோம்; இவரது நூல்களையே படிப்போம்; இவரது மதத்தையே பின்பற்றுவோம்; இவரது அருளையே பெறுவோம்; இவரையே எப்போதும் போற்றுவோமாக!

இவரது அருளைப் பெற்ற "அருள்" என்னும் பத்திரிகையும் மேன்மேலும் விளங்க, கடவுளது அருளை நாடுவோமாக!



காஞ்சீபுரம், ஸ்ரீவரதராஜ பெருமாள் (காளியமர்த்தன சேவை)

வானேறப் போமளவும் வாழ்வு



ஸ்ரீரங்கம் வித்வான்
ஸ்ரீ எம். எஸ்.
ராஜகோபாலாசார்ய
ஸ்வாமி

காஞ்சி மாநகருக்கு அருகில் திருத்தண்கா என்னும் க்ஷேத்திரத்தில், அநந்தஸூரிகள், தோதாரம்மை என்ற பெயர் கொண்ட தம்பதிகள் வாழ்ந்து வந்தனர்.

கி. பி. 1268க்குச் சரியான விபவ ஞு புரட்டாசி மீ திருவோண நன்னாளில், அவர்களுக்கு ஒரு குழந்தை பிறந்தது. அன்று திருவேங்கட முடையானது திருவிழாவின் தீர்த்ததினமானதால், குழந்தைக்குத்திருவேங்கடமுடையான் என்று பெயர் சூட்டப்பட்டது.

இவர்க்கு முறையாக எல்லா ஸம்ஸ்காரங்களும் நடத்தப்பட்டன. தக்க வயதில் இவருடைய தாய் மாமனை கிடாம்பி அப்புள்ளார் என்று பிரஸித்தமான ஆத்ரேயராமாநுஜர், தம் ஆசார்யரான 'நடாதூர் அம்மாளின் உத்தரவினால் கல்வி கற்பித்து வரலானார்.

வேதமெனப்படும் வடமொழி மறைகளையும், அருளிச்செயல்கள் எனப்படும் தென்மொழி மறைகளையும், இவர் நன்கு கற்றுத் தேர்ச்சி பெற்றார். இருபதாம்பிராயத்திலேயே கல்வி கேள்விகளில் வல்லவராகத் திகழ்ந்தார்.

ஸ்ரீ ரங்கத்தில் மார்கழி மாதத்தில் திருவரங்கர் மறை ஓதுவிழா கண்டருள்வர். அப்பொழுது இருமொழி மறைகளையும் மணிமண்டபங்களில் தங்கி இருந்து கேட்டு உகப்பர். தமிழ் மொழியில் உள்ள அருளிச் செயலைக் கோயில் வழிபாட்டின் பொழுது ஓதுவது சாஸ்த்ர விரோதம் என்று சொல்லிச் சிலர் அதைத்தடுக்க முற்பட்டனர்.

அவருடன் வாதிட்டு, திருமங்கை மன்னனும் ஸ்ரீமந்நாத முனிகளும் திருவரங்கர் மனம் மகிழ ஏற்படுத்திய தமிழ்மறை ஓதுதலை நிலை நாட்டித் தரும்படி அழைக்கப் பெற்ற இவர், ஸ்ரீரங்கம் சென்று வாதிகளை வென்று, முன்போல் பெருமாளைத் தமிழ் மறையின் இன்னிசையைக் கேட்டருளும்படி செய்தார்.

அதனால் மகிழ்ச்சியுற்ற பெருமாள் இவர்க்கு "உபய வேதாந்த ஆசிரியர்" என்ற விருதினை வழங்கினார். ஸ்ரீரங்க நாச்சியாரும் "ஸர்வதந்த்ரஸ்வதந்த்ரர்" என்ற பட்டத்தை நல்கினார்.

இவருக்கு பகவத் ராமானுஜரிடமும், அவருடைய நூல்களிலும் அளவிறந்த ஈடுபாடு இருந்தது. பகவத்ராமானுஜருடைய நூல்களைப் பரப்புவதைத் தம் வாழ்வின் லக்ஷ்யமாகக் கொண்டு, தாமே அதற்கேற்ப நூல்களை இயற்றுவதோடு, ஸ்ரீஸுதர்சந ஸூரிகள் இயற்றிய ச்ருதப்ரகாசிகா என்றது போன்ற நூல்களைக் காப்பாற்றி ப்ரசாரம் செய்வதையும் தமது கடமையாகக் கொண்டார்.

தம்மைச் சார்ந்த சிஷ்யர்களின் தகுதி உடைமைக்கேற்பப் பலபல நூல்களையும் இயற்றியுள்ளனர். வடமொழியிலும், தமிழிலும், இந்த இரண்டும் அழகாகக்கலந்து மணிப்ரவாளம் எனப் பெயர் பெற்ற மொழியிலும், ஸம்ஸ்க்ருதத்தின் இன்னொரு வடிவமென்னும் ப்ராக்ருதம் என்கிற மொழியிலும், பல பல நூல்கள் இவரால் எழுதப்பட்டுள்ளன.

ஸ்ரீ ராமன் வனத்தில் எழுந்தருளியிருந்தபோது கோசல தேசத்தை நன்கு ஆண்டு வந்த அவர்தம் ஸ்ரீபாதுகைகள் விஷயமாக ஆயிரம் சுலோகங்கள் கொண்ட ஸ்ரீபாதுகாஸ்ஹஸ்ரத்தையும் ஒரே இரவில் ஒரு யாமத்தில் எழுதினார். இதனால் பெரியோர்கள் இவரைக் 'கவிதார்க்கஸிம்ஹம்' என்று போற்றி உகந்தனர்.

"திருமாலே உலகைப் படைத்துக் காத்து அழித்தும், முக்தியளித்தும் வரும் ப்ரப்ரஹ்மம். அவருடைய உத்தரவுகள்தான் வேதமும் மன்வாதிஸ்மருதிகளும். இந்த உத்தரவை மீறுவதால்



ஸ்ரீ வேதாந்த தேசிகன்

ஜீவராசிகள் ஸம்ஸாரத்தில் உழலுகிறார்கள். பகவான்கருணையுடன் இவர்களைத் திருத்தவே புண்ய நதிகளையும் க்ஷேத்ரங்களையும் தோற்றுவித்ததுடன் ஸீதையைத்தேட வாநரவீரர்களை உலகெங்கும் அனுப்பியது போல், முக்தியை விரும்புகிறவர்களை உருவாக்கி நல்வழிப்படுத்த அடியவர்களை உலகெங்கும் அனுப்புகிறார்.

"அறியாமலேயே ஜீவராசிகளுக்கு இவர்களுடன் ஏற்படும் தொடர்பினால் ஆஸ்திக்யம் தோன்றி, ஸத்வகுணமும் வளர்கிறது. இது படிப்படியாக வளர்ந்து ஆசார்யனை அடைவிக்கிறது. அவருடைய கடைக்கண் பார்வையால், தத்வஜ்ஞானத்தை ஏற்படாமல் தடுத்துவரும் பாவங்கள் தொலைகின்றன.

"பின்னர் பரதத்வத்தையும், அதற்குத்தான் அடிமையாக இருப்பதையும், அதற்குத் தொண்டு செய்வதே தனக்குப் பயனானமையும், அதைக் கிட்ட அந்தப்பரம்பொருளின் கருணை தவிர வேறு வழியில்லாமையால் அதன் திருவடிகளில் பொறுப்பை ஒப்புவித்தலே முக்திஸாதன

மென்பதையும்தெளிவுபடுத்துகிற அந்தஆசார்யரின் அறிவுரை, இத் தகைய சிலபாக்யவான்களுக்கே கிடைக்கிறது.

"அநாதிகாலமாகத்தான்செய்த குற்றங்களால் பகவானை அணுக அஞ்சி, தாயான பெரிய பிராட்டியாரைத் தஞ்சம் புகுகிறான். அவள் பகவானைப் பிழை பொறுத் தருளும்படி செய்யவே, பகவானை அணுகி அந்த திவ்ய தம்பதிகள் இருவருடைய திருவடிகளிலும் தன்னை ரக்ஷிக்கும் பொறுப்பையும் தன்னையும் ஒப்புவிக்கிறான், இப்படி தன்னைரக்ஷிப்பதால்வரும் உகப்பும் அவர்களுக்கே என்றும் எண்ணிக் கொள்ளுகிறான்.

"உடனே பகவானும் லக்ஷ்மியும் இவன் மோக்ஷமடையட்டும் என்று அருளுடன் நினைக்கவே, நினைத்த காலத்தில் இவன் அர்ச்சிராதி மார்க்கமாகப் பரமபதம் சென்று, அந்த தம்பதிகளுக்கு எல்லா தேசத்திலும் எல்லாக் காலத்திலும் எல்லா நிலைகளிலும் உள்ள எல்லாவிதமான தொண்டுகளையும் செய்யும்படி, அனைத்துலகும் உடைய அந்த திவ்ய தம்பதிகளை தினைத்தனையும் விடாதே அநுபவித்தல் எனும் ப்ரஹ்மாநந்தத்தை அடைகிறான்" என்பதே வேதங்களும் புராணங்களும் பூர்வர்களும் கூறி வரும் கொள்கை. இந்தக் கொள்கையை ஸ்தாபித்துப் பரப்புவதற்குத்தான் ஸ்ரீதேசிகன் அவதாரம் செய்ததும்.

சீரொன்று தூப்புல்
திருவேங்கடமுடையான்,
பாரொன்றச் சொன்ன
பழமொழியுள்—ஓரொன்று
தானே அமையாதோ
தாரணியில் வாழ்வார்க்கு,
வானேறப் போமளவும் வாழ்வு.



திருப்பதி ஸ்ரீ நிவாஸப்பெருமாள்
(ரத்ன அங்கி)

ஆசார்ய வள்ளல் ஸ்ரீ வேதாந்த தேசிகர்

ஸ்ரீ கல்யாணபுரம் அமுதன்

சீரொன்று தூப்புல் திருவேங்
கட முடையான்
பாரொன்றச் சொன்ன பழ
மொழியுள்
—ஓரொன்று
தானேயமையாதோ தாரணி
யில் வாழ்வார்க்கு
வானேறப் போமளவும் வாழ்வு

வடவேங்கட மாமலையில் அர்ச்சாரூபியாகக் கோயில் கொண்டு எழுந்தருளி இருக்கும் வேங்கடநாதனே, உலகை உய்விக்கும் உத்தம குருநாதனாக இன்றைக்கு 702 ஆண்டுகளுக்கு முன்னர் ஓர் புரட்டாசித் திருவோண நன்னாளிலே அவதாரம் செய்தார்.

இவர்தான் ஸ்ரீ வேதாந்த தேசிகர் எனப் போற்றி வணங்கப் பெறும் ஆசார்ய சிரேஷ்டர் ஆவார்.

ஆசார்ய கடாக்ஷம் இல்லாமல் ஒருவனுக்கு எந்த நலனும் கிட்டாது. 'குருலேக எடு வண்டி குணிகி தெலியக போது' என்றார் தியாகராஜர். ஆசார்யனும் ஸகல கல்யாண குணங்களும் நிரம்பியவனாக அமைய வேண்டும். இப்படிப்பட்ட குண நலன்கள் பூரணமாக அமையப் பெற்று, ஆசார்ய ஸார்வ பௌமராகத்திகழ்ந்தவர் ஸ்ரீ வேதாந்த தேசிகர்.

இவருக்கு நாவன்மையும் உயர்ந்த கல்வியும் ஏற்பட்டு, பின்பு அரங்கமா நகருள்ளானை ஸ்ரீ ரங்கநாதனிடமே ஸர்வ தந்திரஸ்வதந்திரன்' 'கவிதார்க்கிக ஸிம்மம்' என்பன போன்ற விருதுகள் வாங்கக் காரணமாக அமைந்தது, பரிமுகரான ஸ்ரீ ஹயக்ரீவனுடைய அசாதாரணமான அருள் தான். இவரும் அருள் நிறைந்தவர். இவர் வழிபட்ட எம்பெருமானின் திருநாமமும் பேரருளாளன். இவரது வாழ்க்கையிலே நிகழ்ந்த அசாதாரண நிகழ்ச்சிகள் எண்ணிலடங்காதவை.

ஒரு நாள் இவர் ஸ்ரீரங்கம் யாத்திரையாகச் செல்கையில், வழியில் ஓர் ஊரில் இரவைக் கழிக்க ஒரு வணிகனுடைய வீட்டுத் திண்ணையில் படுத்துக் கொண்டார்.

அன்று யாத்திரையில் இவர் பூஜையில் வைத்து ஆராதிக்கும் ஸ்ரீ ஹயக்ரீவனுக்கு எதுவும் அமுது செய்ய முடியவில்லை.

நள்ளிரவில் இவரை அந்த வீட்டுக்கார வணிகன் எழுப்பி,

தனது தான்யக் கிடங்கிலுள்ள தான்யங்களை ஓர் வெள்ளைக் குதிரை உண்பதாக முறையிட்டான்.

உடனே ஸ்ரீவேதாந்த தேசிகன், இது தன்னை ஆட்கொள்ளும் தெய்வமான ஸ்ரீ ஹயக்ரீவனின் திருவிளையாடல் என்று புரிந்து கொண்டார்.

''இன்று என்பிரபுவுக்கு திருவாராதனம் கண்டருளவில்லையல்லவா? அவனுக்குபசிபோலும்'' என மனதில் எண்ணி, உடனே ஒரு சிறு பாத்திரத்தில் பால் கொண்டு வரச் செய்து, தனது ஆராத்ய தெய்வமான ஹயக்ரீவனுக்கு அமுது செய்விக்க, வணிகனும் குதிரைமாயமாக மறைந்து விட்டது என்று சந்தோஷத்துடனும் வியப்புடனும் தெரிவித்தான்.

அக்குதிரை கால் குளம்பு பட்ட இடங்களில் பொற்காசுகள் இருக்கக் கண்டான்.

ஸ்ரீ வேதாந்த தேசிகர் வாழ்ந்த நாளில், அவரது புகழைக்கண்ட பொறாமைக்காரர்கள், அவருக்கு பல விதங்களில் இன்னல் விளைவிக்க முற்பட்டதும், அவை இறைவன் இன்னருளாலும் ஸ்வாமி தேசிகனின் ஆத்மகுண பரிபூர்த்தியின் காரணமாகவும் பயனற்றுப் போனதும், மெய்சிலிர்க்க வைக்கும் நிகழ்ச்சிகளாகும்.

ஒரு சமயம் ஒரு மந்திரவாதி குளத்து நீர் முழுவதும் குடித்து மந்திரம் ஜபித்து, அதனல் அந்த ஜலம் முழுவதும் ஸ்ரீ வேதாந்த தேசிகர் வயிற்றில் நிரம்பச் செய்ய, அவ்வமயம் காலக்ஷேபத்தில் இருந்த ஸ்வாமி தமது வயிறு திடீரெனப் பருப்பதன் காரணம் புரியாது எதிரே இருந்த தூணைத் தன் நகத்தால் கீற, இவர் வயிற்றில் நிரம்பிய நீர், தூண்வழியாக வெளியேறியது. மந்திரவாதியும் தன் தவறை உணர்ந்து மன்னிப்புக் கோரி விடைபெற்ருன்.

மற்ருெரு சமயம், இவர் வீட்டு வாயிலில் இவர் வரும் வழியில் சிலர் பாதரட்சைகளைக் கட்டித் தொங்க விட்டிருந்தார்கள். இது இவரை அவமானப்படுத்துவதற்குச் செய்த காரியம். ஆனல் ஸ்ரீ வேதாந்த தேசிகர்,

''இன்ன செய்தாரை ஒறுத்தல் அவர்நாண
நன்னயம் செய்துவிடல்''

என்பதற்கிணங்க,

''சிலர் கர்மானுஷ்டானங்கள் செய்தும்,
வேறு சிலர் ஞானமார்க்கத்தாலும்
மோக்ஷம் அடைகிருர்கள். எனக்கு
ஹரிதாஸர்களின் பாதரக்ஷையை
அவலம்பித்து நற்கதி கிடைக்கட்டும்''

என்று பாதரட்சைகள் கட்டித் தொங்க விட்டிருப்பதை லட்சியம் செய்யாமல் நடந்து சென்றார்.

ஸ்ரீ வேதாந்ததேசிகர் ''ஸர்வதந்திர சுதந்திரர்'' என்ற விருதுக்கேற்ப, ஸகல கலைகளிலும் வல்லுநராகத் திகழ்ந்தவர். ''உபய வேதாந்தம்'' என்ற வடமொழி தமிழ் இரண்டிலும் அளித்துள்ள கிரந்தங்கள் பற்பல. இவர் அளித்துள்ள ''பாதுகா ஸஹஸ்ரம்'' (ஸ்ரீராம பாதுகைகளின் பெருமையைக் கூறும் ஆயிரம் சுலோகங்கள்)ஓர் உயர்ந்தரத்தினமாகும்.

பக்தி மார்க்கம் எல்லோராலும் சுலபமாக கைக்கொள்ள

முடியாதது என்பதால், மிகவும் சுலபமான 'பிரபத்தி' என்றசரணாகதி மார்க்கத்தை உலகுக்கு உணர்த்தியவர் ஸ்ரீ வேதாந்த தேசிகர்.

"அந்தணர் அந்தியர் எல்லையில் நின்ற அனைத்துலகும்" என்று எந்தவித ஜாதி மத பாகுபாடும் இன்றி, யாருமே கடைப் பிடிக்கத் தகுந்தது சரணாகதி எனும் சுலபமான வழி என்று காட்டித் தந்து National Integration க்கு வழி வகுத்தவர் "Unconditional Surrender to the supreme" இதுவே இவர் காட்டிய சரணாகதி லக்ஷணம்.

"நின்னருளாங்கதியின்றி மற்றொன்றிலேன்" என்று மனம் நொந்து, மற்றோர் தெய்வத்தை மனத்தாலும் எண்ணாமல், திடமான நம்பிக்கையுடன் புருஷோத்தமனான பகவானை சரணடைந்தால் நற்கதி கிடைக்கும் என்பதை ஐயம் திரிபறக்காட்டுகிறார்.

ஸ்ரீ வேதாந்த தேசிகர்தாள் பற்றி நாமும் மங்களம் அடைவோமாக.

ஸ்ரீ தேசிகன் புகழ்மாலை



ஸ்ரீ D. சேஷாத்ரி

ஸ்ரீதேசிகன் வைதிக தர்மத்தையும் ஸதாசாரத்தையும் பாதுகாத்த புண்யபுருஷர். ஸ்நானம், ஜபம் முதலியஸதாசாரத்தாலும், மஹாமந்த்ர ஜபங்களாலும், ப்ராணயாமத்தாலும், 103 வருஷங்கள் ஜீவித்திருந்தார்கள். ஸ்ரீ கோபாலன் வேணுகானம் செய்து கொண்டும், தலையில் அலங்கரித்த மயில் தோகையுடனும், இந்த்ர நீலக்கல்லின் நீரோட்டம்போன்ற காந்தியுடனும் தனக்குக் கடைசி காலத்தில் தர்சனம் அளிக்க வேண்டுமென, முன்னமேயே வேண்டியுள்ளார். அப்படிப்பட்ட ஸ்ரீ தேசிகனின் ஸதாசாரத்தையும் அருளையும் நாம் அடையும்படி, ஸ்ரீ குருவாயூரப்பன் அநுக்ரஹிக்கும்படி ப்ரார்த்திக்கிறேன்.

— உபந்யாஸக சக்ரவர்த்தி ப்ரஹ்மஸ்ரீ செங்காலிபுரம் அனந்தராம தீக்ஷிதர்.

ஃ ஃ ஃ

கச்சிநகர் காதலித்த கல்விநிதித் தேசிகனை, நச்சி யுகந்து நவிற்றின்பம்-இச்சகத்தில் பெற்றிடுவாரானும் பெண்களோ பேதையரோ,கற்றவர் தஞ்சென்னிக்கணி

— ஜகதாசார்ய ஸிம்ஹாஸநாதிபதி, மஹாவித்வான் ஸ்ரீமதுபயவே. பிரதிவாதி பயங்கரம் அண்ணங்கராசார்ய ஸ்வாமி.

ஃ ஃ ஃ

ஸ்ரீ மஹாதேசிகரை ஸநாதந மதத்தின் [ஹிந்து மதத்தின்] எல்லாப் பிரிவினருக்கும் சொந்தமாக்கித் தரவேண்டிய சமயம் வந்து விட்டது. அன்று அப்பய்ய தீக்ஷிதர் என்ற மஹாத்மா அந்த நற்காரியத்தை ஆரம்பித்து வைத்தார். ஆனால், அந்த இயக்கத்துக்கு • ஆதரவு போதாமல், தேசிகரை ஒரு தனிக்கோஷ்டியின்

தலைவராக மதிக்கும் இயக்கமே வலுத்தது. மஹாப்ரபு க்ருஷ்ண சைதன்யரைப் போல, பில்வ மங்களாசாரியார் போல, வைஷ்ணவத்தின் பொதுவுடைமையாகவேனும் ஆக்கிவைக்கும் நற்பணியைப் பாகவதர்கள் மேற்கொள்ளப் பிரார்த்திக்கிறேன்.

—ஸங்கீர்த்தன ஜோதி ப்ரஹ்ம ஸ்ரீ சங்கு சுப்பிரமணிய ஐயர், சென்னை-14.

ஃ ஃ ஃ

மிகப்பெரிய இருமொழிப் பண்டிதர். சிறந்தகவி. வ்யாக்யாத சூரர். ஞானி. இல்லறத் துறவி. உலகமதப் பெரியார்களில் முன்னணியில் நிற்பவர்.

— ஸ்ரீமதுபயவே. க. சந்தானம் [முன்னாள்லெப்டினண்ட் கவர்னர்] சென்னை-4.

ஃ ஃ ஃ

திவ்யப் பிரபந்தங்களைக் கொண்டு உபநிஷத்துக்களுக்கும், உபநிஷத்துக்களைக் கொண்டு திவ்யப்பிரபந்தங்களுக்கும், அவையிரண்டையும் கொண்டு நம்முடைய வைஷ்ணவ ஸம்ப்ரதாயத்துக்கும், ஸ்ரீ தேசிகன் செய்தருளிய உபகாரத்துக்கு நாம் அவரை எவ்வளவு போற்றிப் புகழ்ந்தாலும் ஈடாகாது.

ஸ்ரீமதுபயவே. வித்வான் புதுக்கோட்டை A. ஸ்ரீநிவாஸராகவாச்சாரியார், திருநெல்வேலி.

ஃ ஃ ஃ

ஸ்ரீ நிகமாந்த மஹாதேசிகனின் கண்டாவதாரத்திற்கு ஏற்றபடி, சப்த ஒலியால் உறக்கத்திலிருந்து உலகை எழுப்பி உய்வித்தார். இவரைப் புகழ வாக்தேவியே நேரில் வந்தாலும் போதாது. சிறந்த குரு. உத்தம கவி. ஸர்வதந்த்ர ஸ்வதந்த்ரர். ஸகல கலா வல்லவர். அவரது நூற்றுக்கணக்கான நூல்களின் மணத்தை நுகர்ந்து நன்ருவோமாக!

—ப்ரஹ்மஸ்ரீ ஸ்ரீவத்ஸ
சோமதேவசர்மா

ஃ ஃ ஃ

இப்புவியில் அவதரித்துள்ள மஹான்கள் பலர். அவர்களிடையே நாயகமணி எனப்படுவார் ஸ்வாமி தேசிகன். வேதம் வல்லார் சாஸ்த்ரம் அறியார். இரண்டுமிருந்தாலும் இலக்கிய



மைசூர் ஸ்ரீ ஹயவதனமூர்த்தி

ரஸமிராது. அதுவுமிருந்தாலும் விநயம், ஆசாரம், பக்தி போன்ற நற்பண்புகள் காணவியலா. இவை யனைத்தும் ஸ்வாமி தேசிகனிடம் குவிந்து, அவனுல் நிறம் பெற்றன என்பர் பெரியோர். எம்பெருமானுல் அவதரித்துச் செய்ய முடியாத பெருஞ்செயலை, எம்பெருமானுர் அவதரித்துச் செய்து முடித்தார். அவருடைய தத்வ விளக்கங்களே வேதப் பொருள் என்ற மெய்ப்பாட்டை உலகமறியச்செய்து, பிறரால் அசைக்கவொண்ணுது நிலைநாட்டிய ஞான சிகரமாம் வேதாந்த குருவிற்கு, இவ்வுலகு தலையல்லால் வேறு கைம்மாறு காணவும் இயலுமோ?

— ஸ்ரீமதுபயவே. தூப்புல் லக்ஷ்மீநரஸிம்ஹன்.

(தொகுத்தளித்தவர்: ஸ்ரீ. D. சேஷாத்ரி. மூலம்: "வேதாந்த தேசிகனே, இன்னுமொரு நூற்ருண்டிரும்!" என்னும் லிப்கோ வெளியீடு)

★

வள்ளல் பெருமானின் சதாபிஷேக வைபவம்



தேசிகதர்சன ரக்ஷாமணி, வைஷ்ணவதர்மதீப, தார்மிக பூஷண, ஸம்ப்ரதாய கல்பத்ரும, மாடபூசி ஸு‌தர்சனம் ஐயங்கார் ஸ்வாமிகள்

ஸ்ரீ உ. வே. கொடைவள்ளல், தேசிக ரத்ன தீபம், தர்ம பூஷணம் ஸு‌தர்சனம் ஐயங்கார் ஸ்வாமியின் சதாபிஷேக விழா வைபவம்.

சென்ற பதினைந்து ஆண்டுகளாக நந்தமிழ் நாட்டில் எத்தனையோ தெய்வீக நற்பணிகள் நடைபெற்றுள்ளன. கோவில் ஜீர்ணோத்தாரணங்கள், கும்பாபிஷேகங்கள், ஆஸ்திக மாநாடுகள், ஆஸ்திக சங்கத் தோற்றங்கள், ப்ரவசன மண்டப நிர்மாணங்கள், ப்ரவசனங்கள், கல்வி ஸ்தாபனங்கள் இத்யாதி இத்யாதி. இவ்வாறு நடைபெற்றுவரும் நற்பணிகளிலெல்லாம் தம்மாலான கைங்கர்யத்தை தவருது செய்தும், கேட்டவருக்கெல்லாம் இல்லையெனுது கொடுத்தும், அதனுல் வள்ளல் எனும் பிருது தாங்கி வரும் ஒரு புண்ணியாத்மா, ஆஸ்திக உலகத்தின் நற்பயனுக, சென்னை திருமயிலையின் கண் திகழ்ந்து வருகிறது. ஆம்! தேசிக ரத்னதீபம் ஸ்ரீ உ. வே. ஸு‌தர்சனம் ஐயங்கார் ஸ்வாமியவர்களைப் பற்றித்தான் கூறுகிறேமென்பதை இதற்குள் அன்பர்கள் உணர்ந்து கொண்டிருப்பார்கள்.

இளந்தலை முறையினர் குலாசாரம் கெட்டு, பண்புகள் குறைந்து கொண்டே வரும் இன்றைய [அ] நாகரிக உலகில், ஷடாசார ஸம்பன்னராய், ஆசார சீலராய், வைதிகத்திருக் கோலத்துடன் (பளிச்சென்று நெற்றியில் திருமண் சூர்ணம் துலங்க) வாழ்ந்து, இன்றைய இளைஞர்களுக்கு, முக்யமாக வைண

வச்சிருர்களுக்கு, வழிகாட்டியாய் இவர் திகழ்ந்து வருவது நமது தவப்பயனேயாகும்.

அதுமட்டுமல்ல. ஆஸ்திகப்பயிர் தழைத்து வளரவும் இப்பெரியார் நல்ல ஜீவ உரமாக விளங்கி வருகிருர்.

தென்னுட்டிலுள்ள வைணவத் திருக்கோயில்களனைத்தும் ஏதேனும் ஒருவகையில் இவரது கைங்கர்யத்தைப் பெற்றுள்ளன என்று கூறுவதில் மிகையேதுமிராது. சென்னை, திருமயிலை ஸ்ரீ தேசிகர் ஸ்ரீநிவாஸர் சந்நிதியில் இவர் செய்துள்ள கைங்கர்யங்கள் அநந்தம். அவைகளினுலேயே அந்த சந்நிதி இன்றைய பிரசித்தியை அடைந்துள்ளதெனில் மிகையாகாது. மற்றும், சென்ற ஆண்டு நடைபெற்ற ஸ்ரீதேசிகன் 700வது ஆண்டு விழாக் கமிட்டியில் இருந்து ஆற்றிய ஒப்பற்ற சேவையை நாடே வியந்தது. அப்போது திருமயிலை வெங்கடேச அக்ரஹாரத்தில், தேசிக ஸம்ப்ரதாய ப்ரசாரம், வைணவ தர்மப் பிரவசனம் முதலியன செய்ய, தம் சொந்த கைங்கர்யமாக ஒரு அழகிய மாமண்டபம் அமைத்துக் கொடுத்தார். அம்மண்டபம் ஸ்வாமியின் பெயரால் வானுற ஓங்கி நிற்கிறது.

கல்விக்கும் இவர் தாராளமாக நன்கொடைகள் வழங்கியுள்ளார். சென்னை திருவல்லிக்கேணி தேசீய உயர்நிலைப்பள்ளியில், கலை நிகழ்ச்சிகள், பிரவசனங்கள், பொதுக் கூட்டங்கள், மாணவர் மன்றங்கள் நடத்தவும், ஆயிரக் கணக்கில் மக்கள் அமைதியாக அமர்ந்து ஆனந்தமாக சிரவணம் செய்யவும், இவர் பெயரால் ''மாடபூசி ஸுதர்சனம் அய்யங்கார் மாளிகை'' எனும் பெயர் தாங்கி, இவரது கொடையின் திறனைப் பறைசாற்றுகிறது. [மற்றும் இவரது தர்மபத்னி ஸ்ரீமதி எம். எஸ். தங்கம்மாள் அவர்களது பெயராலும், இதையொட்டியே ஒரு ஒப்பனை அறை (Make-up room) நிர்மாணித்துத்தரப் பட்டுள்ளது.]இம்மண்டபத்திற்கு மற்றொரு தனிச்சிறப்பும் உண்டு. ஸ்ரீமத் ஆண்டவன், அவரது பூர்வாசிரமத்தில் தனுர்மாதத் திருப்பாவை உபந்யாஸம் கடைசி முறையாக இம்மண்டபத்தில் தான் செய்தாரெனும் பெருமையே அது.

இவ்வாறு நற்பணிகளுக்கெல்லாம் உதவும் ஒரு கற்பகத்தருவென வாழ்ந்து வரும் இப்பெரியாரின் வாழ்வில், முக்யமான நிகழ்ச்சியொன்று அண்மையில் நடைபெற்றது.

உயர் பண்புகளுக்கெல்லாம் உறைவிடமாய், ஆசார சீலராய், பழுத்த வைதீகச் செம்மலாய், எல்லோருக்கும் இலட்சிய புருஷராய் வாழும் இப்பெரியார், 81 ஆண்டுகளை இனிதே முடித்து, 82-ஆம் ஆண்டில் அடியெடுத்து வைக்கும் நாளும், அன்று சதாபிஷேகம் செய்து கொண்ட நன்னுளுமே அது.

இவரால் உபகரிக்கப்பட்ட ஆயிரக்கணக்கான பலதுறையினர்— தேவஸ்தானத்தவர், வைதிக வைணவ ஆஸ்திக சபையினர், மண்டப நிர்மாணக் கமிட்டியினர், ப்ரவசனக்கமிட்டியார், கல்விஸ்தாபனத்தார், சங்கீத சபையினர், மாணவமணிகள் முதலிய அனைவரும், இந்த சதாபிஷேகத் திருநாள் என்று என்பதைக் குறித்து வைத்துக்கொண்டு ஒவ்வொரு நாளாக எண்ணி

எண்ணி அந்நன்னுளை எதிர்பார்த்துக் கொண்டிருந்தனர். ஏன், எதற்கு என்பீரோ? தாங்கள் இப்பெரியாரிடம் பெற்ற தர்மங்களுக்கு ஊரறிய உலகறிய நன்றி செலுத்த வேண்டாமா? அதற்காகவே பல இடங்களில் கூட்டங்கள் கூட்டி, இவரால் தாம்பெற்ற தர்மங்களை மனமார எண்ணி, வாயாரப்பாடி, தங்கள் நன்றிக் கடனைச் செலுத்திக் கொள்ளப் பெரும் அளவில் நிகழ்ச்சி நிரல்களைத் தயார் செய்துகொண்டிருந்தனர். ஆனால்;

அடக்கமே உருவான இப்பெரியாரது சதாபிஷேகவிழா பெரும் ஆடம்பரமாக நடைபெறுவது இறைவனுக்கு இஷ்டமில்லை போலும். அதுவும் ஆடம்பரமின்றி அடக்கமாகவே நடைபெறட்டுமென்று அவன் திருவுளங் கொண்டான். சதாபிஷேகத்திரு நாளுக்குச் சில தினங்களுக்கு



ஸ்ரீரங்கம் ஸ்ரீரங்கநாதப் பெருமாள்

முன்னதாக ஒரு நிகழ்ச்சியை இவரது குடும்பத்தில் நிகழ வைத்து, அதன்மூலம் விழாவை எளிமையாகக் கொண்டாட வழி வகுத்து விட்டான். எம்பெருமான் நியமனத்திற்கு எதிருண்டோ?

சாதாரண ஸ்ரீ ஆனி மீ சுவாதி நக்ஷத்திரம் கூடிய சுதினம் (13-7-1970) நமது ஸ்ரீ ஸுதர்சனம் ஐயங்கார் ஸ்வாமியவர்களின் சதாபிஷேகத்திருநாள். ஆனிச் சோதி சாதாரண நாளல்ல (அதிலும் வைணவருக்கு) என்பதை கூறத் தேவையில்லை. பொங்கும் பரிவால் எம்பெருமானுக்கே பல்லாண்டு பாடியும், பெண் கொடியை அழகிய மணவாளனுக்களித்து அதனால் மாமனாராகியும், பெரியாழ்வார் எனும் திருநாமத்துடன் ஒளிரும் ஆழ்வார் திருநக்ஷத்ர நாளல்லவா? மற்றும் ஒவ்வொரு வைணவ சந்நிதியிலும் பிரம்மோற்சவத்தில் வரும் கருடோற்சவம் அல்லாது, பெரியாழ்வாருக்கு சேவை சாதிக்க என்றே ஆனித்திங்கள் சோதி நன்னாளில் ஒருமுறை கருடாரூடராய் எழுந்தருளிப் பெருமாள் சேவை சாதிக்கும் பெருமை பெற்ற நாளல்லவா? யதேச்சையாக மற்றொரு பொருத்தமும் இங்கு ஏற்பட்

டதை நாம் நன்கு யோசித்து இன்புற வேண்டியிருக்கிறது. திருமயிலை ஸ்ரீதேசிகர் ஸ்ரீநிவாசர் சந்நிதியில் இந்த ஆனிக் கருடன் உபயம் நமது ஸ்ரீ உ. வே. ஸுதர்சனம் அய்யங்கார் ஸ்வாமியவர்களால், இன்றல்ல நேற்றல்ல, பல ஆண்டுகளாகச் செய்யப்பட்டு வருகின்றது எனும் அதிசயப் பொருத்தமே அது.

அந்த 13-ந் தேதி திங்கட்கிழமைக்கு • மூன்று நாட்கள் முன்பிருந்தே, ஸ்வாமி திருமாளிகையில் வேத, சாஸ்திர, புராண விற்பன்னர்களால் பிரதிதினம் காலை முதல் மாலை வரை ஸ்ரீமத் ராமாயண. பாகவத, பகவத்கீதை, வேத பாராயணங்களும், திவ்யப்ரபந்தக் கோஷ்டியும் நடந்து, திருமாளிகையையே தெய்வீக ஒளியினுல் நிரம்பச் செய்துவிட்டது.

திங்கட்கிழமையன்று அபிநவ தேசிக ஸ்ரீ உ. வே. உத்தமூர் வீரராகவாச்சாரியார் ஸ்வாமி, பண்டிதராஜ ஸ்ரீ உ. வே. டி. டி. தாத்தாச்சார்யார் ஸ்வாமி, ஸ்ரீ மேல்மா நரஸிம்ம தாத்தாச்சாரியார் ஸ்வாமி ஆகிய வைதிகப் பெரியார்களும்; ஆஸ்திகப் பணியே அரும்பணியாகக் கொண்டு அல்லும் பகலும் அயராது உழைத்து வரும் Lifco ஸ்தாபன அதிபர் ஸ்ரீ வி. கிருஷ்ணசாமி சர்மா அவர்கள்' "பக்தன்" எனும் தெய்வீக மாத சஞ்சிகையின் ஆசிரியர் ஸ்ரீ எம். ஓ. அழகிய சிங்கராச்சாரியாரவர்கள், தேசீய உயர்நிலைப்பள்ளிகள், கல்லூரி இவற்றின் ஸ்தாபகர் ஸ்ரீ என். கே. திருமாலாச்சாரியாரவர்கள், பேராசிரியர் ஸ்ரீ பி. ஆர். கிருஷ்ணசாமி ஐயங்காரவர்கள், பிரபல அட்வகேட் ஸ்ரீ வி. டி. ரங்கசாமி ஐயங்காரவர்கள் ஆகிய லௌகிகப்பிரமுகர்களும், மற்றும் ஸ்வாமிகளின் புத்ர பௌத்ராதிகள், தௌஹித்ராதிகள் அனைவரும் சூழ்ந்து, திருமாளிகை ஒரே ஆனந்தமயமாகக் காட்சியளித்தது.

குறித்த நல்ல நேரத்தில் அபிநவதேசிக ஸ்ரீ உ. வே. உத்தமூர் வீரராகவாச்சாரியார் ஸ்வாமியவர்களும், பண்டிதராஜஸ்ரீ உ. வே. டி. டி. தாத்தாச்சாரியார் ஸ்வாமியவர்களும், புனித மந்த்ர தீர்த்தத்தால் ஸ்ரீ ஸுதர்சனம் ஐயங்கார் ஸ்வாமிக்கு சதாபிஷேகம் செய்தனர். தொடர்ந்து, லௌகீகப் பெரியார்கள் ஸ்வாமியின் குணநலன்களைப்பற்றிச் சிற்சில வார்த்தைகள் பேசினர். பிறகு ஸ்ரீ ஸுதசனம் ஐயங்காரவர்கள், வேதவிற்பன்னர்களுக்கும் வைதிகப் பெரியார்களுக்கும், கலந்து கொண்ட மற்றையோருக்கும், உரிய சம்பாவனை மரியாதைகள் செய்தும், புத்ர பௌத்ராதி தௌஹித்ராதிகளுக்கு ஆசீர்வாதப் ப்ரஸாதங்களும் அருள, விழா இனிதே முடிவுற்றது.

- திருவஹீந்திரபுரம்
டி. ஆராவமுதன்

★

ஸ்ரீ அழகிய சிங்கரின் அருள்மொழிகள்

தேசிக பக்தர்களான இளைஞர்களே! விழிப்படையுங்கள். ஒன்று கூடி நம் ஆசாரிய வள்ளலைப் புகழ்ந்து பணியுங்கள்.

ஸ்வாமி தேசிகனின் பெருமையையும், அவர் நமக்குச் செய்துள்ளபேருபகாரங்களையும், அடிக்கடி நன்றிப்பெருக்குடன் நினைத்து அவரைத் துதி செய்யுங்கள்.

உங்கள் க்ருஹங்களில் ஸ்ரீமத் ராமாயணம் போன்ற இதிஹாஸ புராணக் கிரந்தங்களையும், ஸ்வாமி தேசிகன் அருளிச் செய்துள்ள கிரந்தங்களையும் எழுந்தருளப்பண்ணி, பூஜித்து வரவேண்டும்.

ஸ்வாமி அருளிச் செய்துள்ள ஸ்தோத்திரங்களைப் பெரியோர்களிடம் அர்த்தத்துடன் கேட்டறிந்து மனப்பாடம் செய்ய வேண்டும்.

ஆழ்வார், எம்பெருமானார், ஸ்வாமி தேசிகன் ஆகியோரை ஆழ்ந்த பக்தியுடன் வழிபட வேண்டும்.

தேசிக ஸம்ப்ரதாயத்தைச் சேர்ந்தவன் என்று சொல்லிக் கொள்வதில் பெருமைகொள்ள வேண்டும். (இந்த ஒரு விஷயத்தில் மட்டும் தான் பெருமை கொள்வது தவறல்ல என்பது கவனிக்கத்தக்கது.)

ஆசார்யனிடம் பக்தி அதிகரிக்க வேண்டும். அவர் போதிப்பதை நன்கறிந்து, அதற்கேற்ப ஒழுக வேண்டும். அவருடைய பெருமையையும் புகழையும் பரப்ப முயல வேண்டும்.

இரவில் படுக்கைக்குச் சென்ற பிறகும் கலையாமல் இருக்கும் படி, திருமண் காப்பை அணிய வேண்டும்.

ஸந்த்யாவந்தனம் முதலிய நித்யகர்மானுஷ்டானங்களை வேளைதவறாமல் முறைப்படி சிரத்தையுடன் செய்துவரவேண்டும்.

பற்றற்ற தன்மையுடனும், வைராக்கியத்துடனும் வாழ்க்கை நடத்தப் பழகி வரவேண்டும்.

ஆசார்யனிடம் உபதேசம் பெற்ற மந்திரங்களைப் பக்தியுடன் ஜபித்து வரவேண்டும்.

மந்த்ரங்களையும் மந்த்ரார்த்தங்களையும் முயற்சி செய்தாவது மறைத்துவைக்க வேண்டும்.

நாம் செய்யும் நற்காரியங்கள் எல்லாம் பகவத்ப்ரீதிக்கே என்ற எண்ணத்துடன், அவற்றின்பலனை எல்லாம் அவனுக்கே அர்ப்பணம் செய்யவேண்டும்.

விநயத்துடன் பேசவேண்டும்; விநயத்துடன் பழகவேண்டும்.

கோயில், நான்கு ரஸ்தாக்கள் ஸந்திக்கும் இடம், மங்கள வஸ்துக்கள் இவைகளை ப்ரதக்ஷிணமாகச் சுற்றியே செல்லவேண்டும்.

எல்லோரிடமும் அன்புடனும் சிநேகத்துடனும் பழகவேண்டும்.

பயங்காளிகளுக்கும், பலமற்றவர்களுக்கும் தைரியமளித்து உற்சாகப்படுத்தவேண்டும்.

ஸத்தியமே எப்போதும் ஜயிக்கும் என்பதை உணர்ந்து, எப்போதும் உண்மையே பேசவேண்டும்.

'போதுமென்ற மனமே பொன் செய்யும் மருந்து' என்ற மனப்பான்மை ஏற்படவேண்டும்.

எந்த ஒரு நல்ல காரியத்திற்காகவும் வீட்டை விட்டுக் கிளம்புவதற்கு முன், பெரியோரை நமஸ்கரிக்கவேண்டும்.

வீட்டிற்கு வருகைபுரியும் பெரியோர்களை நமஸ்கரிக்க வேண்டும்.

அடிக்கடி பகவந்நாம ஸ்மரணை செய்யவேண்டும்.

நல்லதையே நினைக்கவேண்டும்; நல்லதையே பேசவேண்டும்.

பகவானின் மேல் நம்பிக்கை வைத்து நல்ல காரியங்களையே செய்யவேண்டும்.

பசு முதலிய வாயில்லா ஜீவன்களிடம் அன்புடன் நடந்து கொள்ளவேண்டும்.

பின்வரும் பாபங்களைச் செய்பவர்கள் மனிதக் குரங்குகள் என்று கருதப்படுவதால் அவைகளை அவசியம் தவிர்க்கவேண்டும்.

1. பிறருடைய சொத்துக்களைத் திருடுகிறவர்கள்.

2. சாப்பிடக்கூடாத பதார்த்தங்களைச் சாப்பிடுகிறவர்கள்.

3. அசுத்தமான இடங்களில் வஸிக்கிறவர்கள்.

4. ஹிந்து மதத்தை விட்டு மதாந்தரங்களில் சேர்ந்து கல்யாணம் செய்துகொள்ளுகிற ஸகல ப்ராஹ்மண புருஷர்களும், ப்ராஹ்மண ஸ்த்ரீகளும்.

5. பக்தர்களை வேஷதாரிகள் என்று தூஷிக்கிற ஆண், பெண்கள்.

6. கல்யாணம் செய்துகொண்ட மனைவிக்குச் சோறு போடாமல் விரட்டி அடிக்கிறவர்கள்.

7. பர்த்தாவுக்குச் சரியானபடி அடங்காமல், வீட்டு வேலைகளையும் சரிவரச் செய்யாத பெண்கள்.

8. மாமனார் மாமியார் குலங்களையும் குணங்களையும் செய்கைகளையும் இழிவாகப் பேசிப் புண்படுத்துகிறவர்கள்.

9. வயிற்றில் பிறந்த பெண்களைப்போல் நினைக்காமல், நாட்டுப் பெண்களை ஹிம்ஸிக்கிற மாமியார்கள்.

10. வாங்கின கடன்களைச் சரியாகக் கொடுக்காமல் ஏமாற்றுகிறவர்கள்.

11. 'ஒத்தாசை செய்கிறேன், செய்கிறேன்' என்று சொல்லி ஆசை காட்டி ஏமாற்றுகிறவர்கள்.

12. நிச்சயதார்த்தம் ஆன பிறகு அதிக வரதக்ஷிணைக்கு ஆசைப்பட்டுக் கல்யாணத்தை நிறுத்துகிறவர்கள்.

13. தப்புக் கணக்குகளை எழுதி வைத்துப் பணத்தைக் கொள்ளையடித்து முதலாளியைக் கெடுக்கிறவர்கள்.

14. பெண்டாட்டியின் கலக வார்த்தைகளைக் கேட்டுக்கொண்டு தாய், தகப்பனுக்குச் சோறு போடாமல் தின்னுகிறவர்கள்.

15. அக்கம் பக்கத்து வீடுகளில் பூசனிக்காய் வாழைக்காய் முதலியவற்றை திருடித் தின்னுகிறவர்கள்.

16. தீபாவளி தவிர வேறு தினங்களில் உதயமாகி ஆறு நாழிகைக்கு முன் எண்ணெய் தேய்த்துக்கொள்ளுகிறவர்கள்.

17. எவர் தாங்கள் செய்ய வேண்டிய திவஸத்தை 'அங்கே செய்துவிட்டேன், இங்கே செய்துவிட்டேன்' என்று ஏமாற்றுகிறார்களோ அவர்கள்.

நன்றி: "அருள்தரும் ஆரண தேசிகன்" என்னும் லிப்கோ வெளியீடு.

ஆசிரியரும் வெளியிடுபவரும்: T. ராமனுதன் 4, தணிகாசலம் செட்டிரோடு, சென்னை-17. அச்சிடுபவர்: கொண்டா. காசி சீதாராமன், ராமன்ஸ் பிரிண்டிங் பிரஸ், 81-5 பாண்டிபஸார், தியாகராயநகர் சென்னை-17.